கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

# 194

பங்குனி 2023

01.03.2023

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
ஏ.எஸ்.சற்குணராஜா
கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்
கந்தையா பத்மானந்தன்
யதார்த்தன்
பேராசிரியர் சபா ஜெயராசா
பேராசிரியர் செ.யோகராசா
திக்குவல்லை கமால்
இ.சு.முரளிதரன்
கோகிலா மகேந்திரன்
பொன் புத்திசிகாமணி
ருஸ்னா நவாஸ்
எல்.வஸீம் அக்ரம்
தமிழ்நேசன்
கனகபாபதி செல்வநேசன்
த.ஜெயசீலன்
வள்ளிஅம்மை சுப்பிரமணியம்
எம்.கே.முருகானந்தன்
சுப்ரம் சுரேஸ்
பா.இரகுவரன்
அஷ்வினி வையந்தி
கொற்றை பி. கிருஷ்ணானந்தன்
கனிவுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
பொதுசன நூலகம்
28 JUN 2023
யாழ்ப்பாணம்

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2023 - பங்குனி

# பொருளடக்கம்



சிறுகதைகள்

யோகேஸ்வரி சிவப்பிரகாசம் - 07
கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் - 12
ஏ.எஸ்.சற்குணராசா - 20
காரைக்கவி கந்தையா பத்மானந்தன் - 26

கவிதைகள்

ருஸ்னா நவாஸ் - 09
எஸ்.வஸீம்அக்ரம் - 15
தமிழ்நேசன் - 19
த.ஜெயசீலன் - 28
கனகசபாபதி செல்வநேசன் - 38
வள்ளியம்மை சுப்பிரமணியம் - 40



நூல் விமர்சனம்

சுப்ரம் சுரேஷ் - 18
எம்.கே.முருகானந்தன் - 32
பா.இரகுவரன் - 35
அஷ்வினி வையந்தி - 37

கதை இல்லாக் கதைகள்

கொற்றை பி. கிருஷ்ணானந்தன் - 17

உள் ஓவியங்கள்

கனிவுமதி

அட்டைப்படம்

கனிவுமதி

கட்டுரைகள்

**நட்சத்திரத்தில் இருந்து சமூக நீதிக்கு**
**சாதியப் பின்னொட்டக்களை நீக்குதல் தொடர்பான உரையாடல்**
யதார்த்தன் - 03




**இணக்கலும் கலையாக்கமும்**
பேராசிரியர் சபா.ஜெயராசா - 10

**"இன்ஸான்" சிறுகதைகள்**
திக்குவல்லை கமால் - 14



**ஊழியின் முத்தமாய் "வெந்து தணிந்தது காடு"**
இ.சு.முரளிதரன் - 16

**சர்வதேச பெண்கள் தினம்**
**"கிராமப் பெண்களே விழித்தெழுங்கள்"**
**மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்து எழுந்த முதற்குரல்(1948/49)**
பேராசிரியர் செ.யோகராசா - 27

**குடும்பம் என்றொரு கோயிலிலே... - 14**
கோகிலா மகேந்திரன் -29

**எழுத்தாளர் வி.ஜீவகுமாரனின் எழுத்துக்களும் நானும்**
பொன்.புத்திசிகாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2023 பங்குனி இதழ் - 194**



**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



## ஜீவநதி
**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## ஆரோக்கியமான இலக்கியச் சூழல்

ஈழத்து இலக்கிய உலகு நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வருவது கண்கூடு. புதிய படைப்பாளிகள் பலர் அறிமுகமாகி வருகின்றார்கள். பல இளம் படைப்பாளிகள் துணிவுடன் நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், விமர்சனம் என இலக்கியத்தின் பல் வகைமைகளிலும் துணிவுடன் ஈடுபட்டு வருகின்றார்கள். இன்றைய காலத்தில் நூலாக அச்சாக்கம் செய்வது இலகுவான காரியமாக அமைந்துள்ளது. இலங்கையில் அச்சாக்கம் செய்வதன் கூலி அதிகமாக இருக்கின்றபோதும் படைப்பாளர்கள் தொடர்ந்து நூல்களை வெளியிட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். அதிலும் இளம் படைப்பாளர்களது நூல்களே அதிகம் வெளி வருகின்றமை பாராட்டிற்குரியது. தம்மிடையே ஒளிந்து கிடக்கின்ற படைப்பாற்றலை வெளிக்கொணர்வதற்கு இந்நூல்கள் பெரிதும் உதவுகின்றன. நூல் வெளியீடுகள் ஒவ்வொரு வாரமும் பல்வேறு பிரதேசங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதை அவதானிக்கின்றோம். நூல் பற்றிய கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன. புத்தகக் கண்காட்சிகள் நடைபெறுகின்றன. ஆரோக்கியமான ஒரு சூழலில் ஈழத்து இலக்கியம் இயங்கி வருகின்றமை மகிழ்விற்குரியது. எனினும் விற்பனை என்று வருகின்றபோது நூற் கொள்வனவு பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. கடைகளுக்கு புத்தகங்களை வாங்க தேடிச் செல்பவர்கள் தொகை குறைந்து கொண்டு தான் செல்கின்றது. புத்தகக் கடைகள் கூட படைப்பிலக்கியம் சார்ந்த நூல்களை விற்பனை செய்வதில் அக்கறை காட்டுவது கிடையாது. 200 தொடக்கம் 300 பிரதிகளே ஈழத்து படைப்பாளர்களால் அச்சாக்கம் செய்யப்படுகின்றது. வெளியீட்டு விழா வைப்பதன் மூலம் குறைந்தது 50 பிரதிகளையாவது விற்கக் கூடிய சூழல் இருப்பதால் படைப்பாளர்கள் ஓரளவு மகிழ்கின்றார்கள். ஏனைய பிரதிகள் ஆமை நகர்வது போல விற்பனையாகின்றன. எமது படைப்பாளர்கள் படைப்புக்களை நாங்கள் தான் வாங்கி அவர்கள் ஊக்குவிக்கவேண்டும். பிரதேச நூலகங்கள், பொது நூலகங்கள், பாடசாலை நூலகங்கள் நூல்களை பெறுவதில் அதிக அக்கறை காட்ட வேண்டும். பெற்றோர்கள் புத்தகக் கண்காட்சிகளில் பங்கு கொண்டு புத்தகங்களை கொள்வனவு செய்து பிள்ளைகளை வாசிக்கத் தூண்ட வேண்டும். புத்தகங்கள் மனிதனை மனிதனாக வாழ வழிவகுப்பவை என்பதை மறந்து விடாதீர்கள்.

- க.பரணீதரன்

**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை.
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வருடங்களுக்கு முன்பு மலையாள/ தமிழ் சினிமா நட்சத்திரமாக நன்கு அறியப்பட்ட நடிகை பார்வதி தன்னுடைய பெயருக்குப் பின்னால் இருக்க கூடிய "மேனன்" என்ற சாதியப் பின்னொட்டை இனிமேல் பயன்படுத்தப் போவதில்லை என்று அறிவித்ததோடு தன்னுடைய உத்தியோக பூர்வ இணையப் பக்கங்கள், திரைப்படங்களில் அவற்றை நீக்கினார். இந்திய சினிமாவைப் பொறுத்த வரையில் அவர் செய்த சிறிய நற்செயல் மட்டுமல்ல அது ஒரு பெரிய காலடி. ஏனெனில் இந்திய மனங்களை, கருத்தியல் கூட்டை வடிவமைப்பதில் இந்திய சினிமாவின் ஒவ்வொரு மொழிச் சினிமாவுக்கும் பெரிய பங்கிருக்கிறது. நவீன இந்தியப் பண்பாட்டின் பொதுப்புத்தியை கடந்த நூறு வருடங்களுக்குள் தீர்மானித்த பண்பாட்டின் கூறுகளில் சினிமா பெரிய இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கின்றது. இன்று வரைக்கும் இயக்குனர்கள், நடிகர்கள் என்று "நட்சத்திரங்கள்" சாதிய பின்னொட்டை வெளிப்படையாகப் பயன்படுத்திக் கொண்டும் அதனால் வரக்கூடிய அதிகாரத்தை பேணிக்கொண்டும் இருக்கின்றனர். பலர் சாதிய தடித்தனங்களை நியாயப்படுத்தி படங்களை எடுத்துக்கொண்டும், சாதியப்பின்னொட்டு, முன்னொட்டுகளுடன் பெயரிட்டு தேவர் மகன், குங்குமப் பொட்டு கவுண்டர், தொடங்கி சமீபத்து அர்ஜூன் ரெட்டி வரை தொடர்கிறது. இளைஞர்களுக்கு தங்களுக்கு இப்படி ஒரு சாதிப்பெருமை உண்டு என்று பெருமிதமாக பெயர்களுக்குப் பின்னால் சாதிப்பின்னொட்டுகளைச் சேர்த்துக் கொள்வதை இன்றும் பெருமையாகக் கருதும் சூழலை தமிழ்நாடு முழுவதும் உண்டாக்கி அதை "உன்னதப்படுத்தியதில்" சினிமாவின் பங்கு மிகப்பெரியது. இந்தச் சூழலை முன்னிறுத்திப் பார்க்கும் போது பார்வதி எடுத்த நிலைப்பாடு பெயரைத் திருத்தும் "சிறியதொரு" வேலையென்று குறுக்கி விடுவதற்கில்லை.

# நட்சத்திரத்தில் இருந்து சமூக நீதிக்கு சாதியப்பின்னொட்டுகளை நீக்குதல் தொடர்பான உரையாடல்

- யதார்த்தன் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் புதிதாக ஆட்சியமைத்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு, தமிழ் நாட்டுப் பாடப் புத்தகங்களில் இருக்கும் இத்தகைய சாதிய பின்னொட்டுக்களை நீக்குவதாக அறிவித்திருக்கிறது. ஒரு அரசாக, சாதிய நிலமைகள் பெருமெடுப்பில் நடைமுறையில் இருக்கும் தமிழ் நாட்டு அல்லது மொத்த இந்தியச் சூழலிலுமே இதுவொரு மிக முக்கியமான தீர்மானமாகும். சாதியிலிருந்து விடுவிக்கப்படப்போகும் தமிழ் சூழலுடைய முற்போக்கான சிந்தனைக்கும் செயலூக்கங்களுக்கும் மிகப்பெரிய பலத்தை அளித்திருக்கிறது. தமிழ்ப்பாடப்புத்தகங்களில், கலை இலக்கிய வரலாறுகளில் காணப்படக்கூடிய அறிஞர்களின் பெயர்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சாதிப் பெயர்களை நீக்குவது பிள்ளைகளுக்கு எதிர்காலத்தில் சாதி "இயல்பாக்கம்" செய்யக்கூடிய பகுதி ஒன்றில் இருந்து காப்பாற்றப்படுகின்றார்கள். உதாரணத்திற்கு, தமிழ் தாத்தா என்று அழைக்கப்படும் உ. வே. சாமி நாதரின் பெயரின் பின்னால் இருந்த ஐய்யர் என்ற பின்னொட்டும், தமிழின் முதல் சிறுகதையை எழுதியவர் என்று அறியப்படும் வரதனேரி வெங்கட சுப்ரமணியரின் பெயரின் பின்னால் உள்ள ஐய்யர் என்ற பின்னொட்டு நீக்கப்படுவதும் தமிழ் இலக்கிய, சமூகச் சூழலில் முன்னேற்றமான செயற்பாடுகளாகும். இதனை முன்னிட்டு நண்பர் கிரிசாந் இக்காலப்பகுதியில் இது தொடர்பாக நடைபெற்ற விவாதங்களில் வைக்கப்பட்ட முக்கியமான விவாதம் ஒன்றை தன்னுடைய முக நூல் பதிவில் இவ்வாறு எதிர்கொள்கிறார்.

"தமிழ் நாட்டின் பாட நூல்களில் உள்ள பெயர்களில் இருந்து சாதி பின்னொட்டுகளை நீக்கியிருக்கிறார்கள். நல்ல விசயம். சில நண்பர்கள் இப்படிச் செய்வதால் எல்லாம் சாதி ஒழிந்து விடாது, மேலும் தேவையற்ற தகவல் குழப்பங்கள் ஏற்படும் என்று கூறி வருகிறார்கள். இரண்டாவது வாதம் சரிதான். இதற்கு அப்பாட நூல்களில் சாதியப் பின்னொட்டுகளை நீக்குவதற்கு காரணங்களாக, சாதி என்பதொரு இழிவான கருத்தியல். மனித மாண்புகளுக்கு எதிரானது, ஆகவே இவை நீக்கப்பட்டிருக்கின்றன போன்ற குறிப்புக்களைச் சேர்ப்பதும், அவை ஏன் நீக்கப்பட வேண்டும் என்பதற்கான காரண காரியங்களை குறிப்பிடுவதும் மாணவர்களை இன்னும் பகுத்தறியத் தூண்டும்"

"சாதியப்பின்னொட்டை நீக்கிவிட்டால் சாதி ஒழிந்து விடுமா?" என்றொரு ஏளனமான கேள்வி சமூகத்தின் பொதுப்புத்தியில் இருக்கின்றது. அதற்கு, மொழி என்றால் என்ன? மானுடர்களின் மனங்களை, அவர்களின் செயல்களை வடிவமைப்பதில் அது எத்தகைய வலிமையைப் பெற்றிருக்கின்றது, அது எவ்வாறு சிந்திக்கும் பகுதியாகவும், நினைவுகொள்ளும் பகுதியாகவும் இருந்துவருகின்றது, அதனுடைய "தொடர்பாடல்" பணியின் போதும், சிந்திக்கும் பணியின் போதும் அது சின்ன சின்ன விடயங்களை எவ்வாறு மனித ஆளுமை உருவாக்கத்திற்குள் உட்புகுத்தி ஒடுக்குமுறையையும், வன்செயலையும் உருவாக்கிவிடுகின்றது என்பதை விளக்க வேண்டியிருக்கிறது. சமூக பண்பாட்டிலிருந்து சாதியை ஒழிப்பதில் பிரதான பணிகளில் ஒன்று அதன் மொழியில் உள்ள சாதிய நினைவைக் களைவதும் அதன் மீதான விழிப்புணர்வைச் சமூகமயப்படுத்துவதாகும்.

தமிழ் சூழலின் பொதுப்புத்தியை, தனிப்பட்ட ஆளுமைகளை வடிவமைக்கக் கூடிய அடிப்படை விடயங்களில் சாதியும் ஒன்றாகவிருக்கின்றது. அது மொழியினால் நினைவு கொள்ளப்பட்டு கடத்தப்படுகின்றது. ஆகவே "வெறும் பின்னொட்டு" தானே என்று ஒன்றைக் கடந்து போக முடியாது. ஒரு சாதியப் பின்னொட்டு இத்தனை காலமும் இப்பொழுதும் சமூகத்தின் மிகப்பெரிய ஒடுக்கு முறைப்பகுதியாக சமூகப்பிறழ்வாக இருக்க கூடிய சாதியினுடைய வரலாற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துவது. அது அர்த்தமற்றதோ, பெயரோடு ஒட்டி இருக்கும் வெறும் சொல்லோ அல்ல. அது பெயரோடு ஒட்டி இருக்க கூடிய சமூகத்திற்குள் இருக்கும், வரலாற்றில் இருந்து சீவித்து வந்த பெரிய விலங்கின் விசநகங்களில் ஒன்று. அது சர்வநிச்சயமாக ஆதிக்க தரப்புக்கு சாதிய அடையாளத்தையும், அதன் மூலம் கிடைக்க கூடிய எல்லாவகை பயனையும் பெற்றுத்தருகிறது. ஆதிக்க தரப்பைப் பொறுத்தவரை அது மரபார்ந்து கையளிக்கப்பட்ட மிகுந்த நலன்களைத் தரக்கூடிய ஒன்று. அது அவர்களின் "பிரிக்கும்" நியாயங்களினதும் "ஒடுக்கும்" இயல்பினதும் அடையாளமாகும்.

இலங்கைச் சூழலைப் பொறுத்த வரையில் இந்தியச் சூழலின் அளவுக்குச் சாதியப்பின்னொட்டுகள் பயன்படுத்தப்படுவதில்லை. ஆயினும் இந்திய - தமிழ் நாட்டு சூழலோடு பண்பாட்டு அடிப்படையிலான நெருக்கமும், மொழியினூடான தொடர்பும் மிகவும் ஆழமானது. குறிப்பாக பண்பாட்டில் இருக்க கூடிய கலை, இலக்கியம், சினிமா, சமயங்கள், சடங்குகள், பழக்கங்கள், முதலானவற்றில் இப்பகிர்வுகள் இருக்கின்றன. ஆயினும் இலங்கை - தமிழ்நாட்டு சாதியச் சூழல் என்பது அமைப்பு அடிப்படையில் வெவ்வேறானது. வித்தியாசங்கள் உள்ளது. ஆனால் அவை கட்டமைப்பு வித்தியாசங்களும் கால இடைவெளிகளும், சிந்தனை வித்தியாசங்களும் மட்டுமேதான். ஒடுக்குமுறை என்பதும், வன்முறை என்பதும் ஒன்றுதான். சாதிய ஒடுக்குமுறையைப் பொறுத்த வரையில் ஈழத்தில் "சைவ வெள்ளாள" மனநிலை நிலவுகிறது. அதனுடைய ஒடுக்குமுறை வடிவங்கள் வெவ்வேறு தளங்களில் இருக்கிறது. மேலே உரையாடி வந்த சாதியப் பெயர் பின்னொட்டுப் பிரச்சினை இலங்கையில் குறைவே தவிர தமிழ் சிங்களச் சூழலில் சாதியப்பின்னொட்டுக்களின் பயன்பாடு இல்லை என்று மறுப்பதற்கில்லை.

இலங்கைத் தமிழ்ச் சூழலில் பெயருக்குப் பின்னால் செட்டி, பிள்ளை. ஐய்யர், சர்மா போன்ற சாதியப்பின்னொட்டுக்களைச் சேர்த்துக்கொள்ளும் பழக்கம் இருந்துவருகின்றது. செட்டிகள் எனப்படும் ஆதிக்க சாதித்தரப்பு வெள்ளாளர்களுடன் இணைந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

"செட்டி வெள்ளாளராக" மாறிய பிறகு சமகாலத்தில் யாரும் பெயருக்குப் பின்னால் "செட்டி" என்ற பின் னொட்டைச் சேர்த்துக்கொள்வதாகத் தெரியவில்லை. ஆனால் பாடப்புத்தகத்தில், இலக்கிய வரலாற்றில் இருக்க கூடிய சைமன் காசிச்செட்டி போன்ற பெயர்கள் இன்னும் பயன்பாட்டிலேயே இருக்கின்றது. எனவே நம்முடைய பாடநூல்களிலும் அவற்றை நீக்கிவிட்டு நீக்கியதற்கான அடிக்குறிப்புக்களை கொடுப்பது முக்கியமானது. அதன் தொடர்ச்சியாக பண்பாட்டி லிருந்தும் அவை நீக்கப்படுவது நடைபெறும்.

இலங்கைச் சூழலில் வெள்ளாளர்களிடமும் அவர்களோடு சேர்ந்து ஒடுக்குமுறையின்அங்கமாகவும் சமூகப் பொதுப்புத்தியில், நம்பிக்கைகளில் பங்கெடுக்க கூடிய; "சடங்கியல்" பகுதியைப் பகிர்ந்துகொள்ளக் கூடிய பிராமணர்கள், சைவக் குருக்கள் போன்றோர் இன்னுமும் "ஐய்யர்" "சர்மா" போன்ற சாதியப் பின் னொட்டுகளை பயன்படுத்திக்கொண்டே இருக்கிறார் கள். அவர்களுக்கு ஏனையவர்களை விட சமூகத்தில் அதி காரமும், கௌரவச் சலுகைகளும் வழங்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. வெறும் கோயில் அர்ச்சகர் களாக மட்டும் அவர்கள் இருப்பதில்லை. அவர்கள் கலப்புத்திருமணங்களுக்கு அனுமதிப்பதில்லை, கோயில் நடைமுறைகளில், சடங்குகளில், "தீட்டும்" "துடக்கும்" சாதிய அடிப்படையில் பேணப்படுவதற்கு அவர்களே துணையாகவும் இருக்கிறார்கள். வெள்ளா ளரிடமிருந்து சமுக அதிகாரத்தைப் பெறுகிறார்கள். உள்ளூர் வழிபாடுகளை அழிப்பதில், சமஸ்கிருதமயப் படுத்தலுள் பங்கெடுக்கிறார்கள். வேள்வியை, தடை செய்வது, உள்ளூர் புலால் உணவுப்பண்பாட்டை எதிர்ப்பது என்று தமிழ் நாட்டுப்பார்ப்பனியத்தின் குணங் குறியளோடே இயங்குகின்றார்கள். அவர்களிடமுள்ள சமய - சடங்கியல் அதிகாரத்தின் அரூப வேர்கள் மக்களின் "நம்பிக்கையின்" பின்னால் மறைந்து வளர்ந் திருக்கின்றன. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இலங்கை யின் சாதிக்கட்டமைப்பின் முக்கிய தூண்களில் ஒன்றா கவே இருக்கிறார்கள். தமிழ்நாட்டுப் பார்பனர்களைப் போல "அதிகாரமற்ற" தரப்பு என்று இலங்கைப் பிராமணர்களையோ, குருக் களையோ கடந்து போவதற் கில்லை. நேரடியாக அதிகாரமற்று இருந்தா லும் இந்து மதம் கொடுக்கக் கூடிய "வருண" அவர்களுக்கு துணையாக இல்லாமலில்லை. அவர்களின் பெயர்களின் பின்னால் உள்ள ஐய்யரும், சர்மாவும் அவர்களின் "மேலாதிக்கத்தின்" மொழிக்கூறு என்றே எடுக்கப்பட வேண்டும். ஆக இலங்கையில் பயன்படுத்தப்படும் இத்தகைய சாதிய பின்னொட்டுக் களும் பயன்பாட்டில் இருந்து நீக்கப் பட வேண்டும். அது சாதியத்திற்கு எதிரான போராட்டத்தின் பெரிய பகுதியாக இணைந்து கொள்ளும்.

மேலும் "குறித்த நபருடைய சாதியப் பின்னொட்டை தூக்கிப்பிடிக்காதீர்கள், அவர் செய்த நற்கருமங்களைப் பாருங்கள், அத்தோடு அவர் அதை சாதிய பின்னொட்டாக பயன்படுத்தவில்லை, அது வெறும் பெயராக, அழைக்கும் சொல்லாகத்தான் பயன்பாட்டில் உள்ளது" என்பதாகவும் தமிழ்ச்சூழலில் குரலொன்று இருந்து வருகின்றது. இது வடித்தெடுத்த அயோக்கியத்தனம் இல்லையா?

ஒட்டுமொத்த உலகத் தமிழ் இலக்கியச் சூழலில் பெரும்பாலான எழுத்தாளர்கள், இலக்கியச் செயற் பாட்டாளர்கள், தங்களுடைய பெயருக்குப் பின்னால் சாதியப்பின்னொட்டுக்களைச் சேர்த்துக்கொள்வ தில்லை. வெவ்வேறு கருத்தியல் - செயற்பாடுகள் சார்ந்து வேறுபாடுகள் விமர்சனங்கள் இருந்தாலும் தமிழ் இலக்கியச்சூழலில் செயற்படுபவர்களில் பெரும்பாலான சாதியப்பின்னொட்டுகள் அடைமொழிகளைப் பயன் படுத்துவதில்லை என்பது நல்ல செய்தியாகும்.

இலங்கையின் ஆவணச் செயற்பாட்டில் பெரிய பங்கெடுப்பை மேற்கொள்ளும் நூலக நிறுவனத்தில் செயற்படக்கூடிய "பத்மநாபர் தொடர்ச்சியாக "ஐய்யர்" என்ற பின்னொட்டோடே அறியப்படுகிறார். பயன் படுத்து கிறார் அழைக்கப்படுகிறார். அதே போல யாழ்ப்பாண பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறை விரிவுரையாளரான சர்வேஸ்வரன், ஐய்யர் என்றே பயன் படுத்துகிறார். ஈழத்தில் தமிழ் நாவல் இலக்கியம் என்ற நூலை எழுதிய சிவசுப்ரமணியம், அவர் கலந்து கொள்ளும் இணையப்பொதுவெளி உரையாடல்களில் தன்னுடைய பெயருக்கு பின்னால் ஐய்யர் என்ற பின்னொட்டை பாவித்துக்கொள்கிறார். கலை, இலக்கி யம், கல்வி முதலான மனிதர்களை பகுத்தறிவூட்ட கூடிய துறைகளில் "புத்திசீவிகளே" இவ் அடிப்படை விடயங் களை அறியாமலும், அல்லது சாதிய மனநிலையுடனும் இருக்கும் போது தமிழ்ச்சமூகம் சமூக நீதி உள்ள சமூகமாக மாறுவது குதிரைக் கொம்புதான் இல்லையா?

இலங்கையில் தீண்டாமை ஒழிப்பு மற்றும் சாதிய எதிர்ப்பு பற்றிய சிந்தனை, செயற்பாடுகளில் முன்

இலங்கைச் சூழலில் வெள்ளாளர்களிடமும் அவர்களோடு சேர்ந்து ஒடுக்குமுறையின்அங்கமாகவும் சமூகப் பொதுப்புத்தியில், நம்பிக்கைகளில் பங்கெடுக்க கூடிய; "சடங்கியல்" பகுதியைப் பகிர்ந்துகொள்ளக் கூடிய பிராமணர்கள், சைவக் குருக்கள் போன்றோர் இன்னுமும் "ஐய்யர்" "சர்மா" போன்ற சாதியப் பின் னொட்டுகளை பயன்படுத்திக்கொண்டே இருக்கிறார் கள். அவர்களுக்கு ஏனைவர்களை விட சமூகத்தில் அதி காரமும், கௌவரச் சலுகைகளும் வழங்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. வெறும் கோயில் அர்ச்சகர்களாக மட்டும் அவர்கள் இருப்பதில்லை. அவர்கள் கலப்புத் திருமணங்களுக்கு அனுமதிப்பதில்லை, கோயில் நடைமுறைகளில், சடங்கு களில், "தீட்டும்" "துடக்கும்" சாதிய அடிப்படையில் பேணப்படுவதற்கு அவர்களே துணையாகவும் இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நிற்கும் முக்கிய குழுக்களில் ஒன்றாக இருக்கும் கலை இலக்கியப்பேரவையினால் வெளியிடப்படும் "தாயகம்" இதழில் கட்டுரை ஒன்றை எழுதும் பெண் ஒருவர் தன்னுடைய பெயரின் பின்னால் சர்மா என்று பயன் படுத்துகிறார், இதழும் கிஞ்சித்தும் யோசனை இன்றி அதைப் பிரசுரிக்கிறது. பொதுப்பார்வையில் இது அவ்வளவு பெரிய விடயமல்ல என்று தோன்றும், ஆனால் இத்தனை நூற்றாண்டுகளாக சாதியம் தன்னுடைய இருப்பிற்காக உருவாக்கி கொண்ட பொறி களில் மொழியில் நிலவக்கூடிய இத்தகைய பெயர்கள், ஒட்டுக்கள் எல்லாம் முக்கிய பகுதியாக இருக்கின்றன.

பொதுச்சமூகத்தையும், அதன் பொதுப் புத்தியையும் விட்டுவிடுவோம் முற்போக்கான, கலை இலக்கியச்சூழலில் இது மிக அடிப்படையானது இல்லையா? தமிழ்ச்சூழலில் இருக்க கூடிய பிரதான ஒடுக்குமுறைகளில் ஒன்று சாதி என்று நாம் அறியாமலா இருக்கிறோம்? அப்படியிருக்க ஒரு பெயரில் இருந்து பின்னொட்டை எடுத்துக்கொள்வதில் என்ன தயக்கம் இருக்கப் போகிறது. நண்பர் ஒருவர் கேட்டது போல "சாதிய பின்னொட்டை எடுத்துவிட்டால் உங்களை யாருக்கும் தெரியாது என்றால் உங்களுடைய வாழ்நாட் பணியோடு எல்லாம் சாதியப்பின்னொட்டும் சேர்ந்து பயணித்ததா? அது பலாபலன்களை அள்ளித்தந்தா?" சாத்தானுக்கும் கடவுளுக்கும் படைப்பது ஒரே நைவேத்தியம்தானா? என்றுதான் கேட்கத் தோன்று கிறது. ஆறுமுகநாவலருடைய தமிழ்ப் பணிகளைப் பேசும் போது அவருடைய சாதியச் செயற்பாடுகளை பேசாமல் தவிர்ப்பதை அயோக்கியத்தனமான அரசியல் நீக்கம் என்கிறோம் தானே? இதுவும் அது போன்ற ஒன்றுதான் இல்லையா?"


மேலும் சாதிப்பின்னொட்டுகள் நடைமுறை யில், சில இடங்களில் "சாதிய அர்த்தத்தில்" பாவிக்கப் படாதவையாக இருக்கலாம். உதாரணமாக "பிள்ளை" என்ற பின்னொட்டு சாதியோட்டு ஆகும், ஆனால் ஈழத்து நடைமுறையில் அது குறித்த சாதியைச் சாராதவர்களும் பயன்படுத்துகின்றனர். அது பெயரிடலில் பொதுப் பெயர் களில் ஒன்றாக மாறி இருக்கிறது. ஆனால் அப்பெயர் களில் "மூலங்கள்" சாதிய மூலங்களே என்பதனை தலைமுறைகளுக்கு சொல்ல வேண்டியிருக்கிறது. அப்பெயர்களின், பின்னொட்டுக்களின் பயன்பாட்டை நீக்க வேண்டியிருக்கிறது. மேலும், பிள்ளை போன்ற பின்னொட்டுக்களை மட்டுமல்ல "அர்" "ஆர்" போன்ற மரியாதை விகுதிகளைக் கூட பெயர்களில் தாழ்த்தப் பட்ட மக்கள் பயன்படுத்த ஆதிக்க சாதிகள் தடை விதித் திருந்த காலமும் இருந்தது அல்லவா? சுவாரஸ்யமாக ஆதிக்க சாதியினர் தாழ்த்தப்பட்ட மக்களை இழிவாக, கேலிக்குரலில் அழைக்கும் போது "பிள்ளை" என்ற பின்னொட்டைப் பயன்படுத்துவது இன்றும் நடைமுறை யில் இருக்கிறது. பள்ப்பிள்ளை, நளப்பிள்ளை, வண்ணாரப்பிள்ளை, அம்பட்டப்பிள்ளை என்று யாழ்ப் பாணத்து ஆதிக்க தரப்பின் நாக்குகள் இன்றும் அம் மக்களை கேலியாக இழிந்து விழிப்பதை மிகச் சகஜமாகக் காணலாம்.

சாதியினால் ஒடுக்குவதற்கு, கேலி செய்வதற்கு, வசைபாடுவதற்கு, "தரம் பிரிப்பதற்கு" ஆதிக்க தரப்புகள் பெயரிடல் என்பதை தங்களுடைய நோக்கத்தை நடைமுறையில் வைத்திருக்கும் மொழித் தந்திரங்களில் ஒன்றாக தொடர்ந்தும் பேணவே முயற்சிக்கிறது. பகுத்தறிவுள்ள மக்கள் அதை அவதானிக்க வேண்டும். குறிப்பாக சமூகத்தில் இருக்க கூடிய கருத்துருவாக்கி களான கலைஞர்கள், புத்திசீவிகள் அசலான "கலைஞர் களாக" இருப்பது என்பதன் அடிப்படைகளில் ஒடுக்கு முறைகளின் இத்தகைய பகுதிகளில் இருந்து வெளி யேறுவதும் ஒன்றாகும்.

இங்கே மக்களை அரசியல் மயப்படுத்துவது, சாதியை ஒழிப்பது என்பது என்ன? ஒவ்வொரு சிறிய காலடியும் இந்தப்பெரிய பயணத்தில் எவ்வளவு முக்கிய மானவை? தமிழ்ச் சமூகத்தில் இன்னும் ஒடுக்கு முறை யின் அதிகார பீடத்தில் இருக்க கூடிய சாதிக்கு எதிராக எடுக்க கூடிய ஒவ்வொரு முடிவும் முக்கியமானது. நாம் நட்சத்திரப் பிரபலம் கொண்ட, அறியப் பட்ட எழுத் தாளராக, நடிகராக, அரசியல் பிரமுகராக, ஆவணப் படுத்துபவராக யாராகவும் இருந்துவிட்டுப் போகலாம், ஆனால் எரிகின்ற பிரச்சினை ஒன்றுக்கு எதிராக, சமூக நீதியின் பக்கம் நின்று சுயமரியாதை யோடு நாம் எடுக்கக் கூடிய ஒரு சிறிய முடிவும் அவ்வளவு சிறியதல்ல.



அகமது ஃபைசாலின் "கொட்டாவி" நூல் வெளியீடு 11.02.2023 அன்று பொத்துவில் பிரதேச செயலகத்துக்கு அருகில் டாக்டர் எம்.ஐ.றஹீம் முன்னிலையில் நடைபெற்றது. சிறாஜ் மஷ்ஹூர், திருக்கோயில் கவியுவன், தாரிக் அஸீஸ், தபீப் இஸ்மாலெப்பை, லலிதகோபன், க.டனிஸ்கரன், திலகேஷ் கந்தசாமி, முகமட் சஹீர், ஏ.சி. சிபான் முதலியோர் உரையாற்றினார்கள்.



செ.அன்புராசா அடிகளாரின் மூன்று நூல்களின் வெளியீடு 27.02.2023 அன்று யாழ்ப்பாணம் கலைத்தூது கலையகத்தில் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் சி. ஸ்ரீசற்குணராஜா, வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி கலந்து சிறப்பித்தார்கள். உரைகளை அருட்கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம், அருட்திரு போல் ஜெயந்தன் பச்சேக், வைத்தியகலாநிதி நளாயினி ஜெயதீசன், அருட்கலாநிதி சா.ம.செல்வரட்ணம், சி.கருணாகரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம் மற(று)க்கும் கூர்?...



ยோகேஸ்வரி சிவப்பிரகாசம்

கட்டுரையொன்றில் கருத்தூன்றியிருந்த ஜீவப்பிரியனின் கவனத்தை "அன்ரி அன்ரி" என்ற குரலொலி கலைக்கவே "யாரோ கூப்பிடுகினமப்பா. வந்து பாரும்" என மனைவி நர்மதாவை அழைத்தான். நர்மதா வந்து வாசற்கதவைத் திறக்கவும் இவனும் ஜன்னலூடாகப் பார்த்தான். முன்னர் அறிமுகமில்லாத ஓர் இளம் பெண் இல்லை. அப்படிச் சொல்லமுடியாது. சிறுமி என்றுதான் கூறவேண்டும். முன் வாசற்பக்கம் நின்றுகொண்டிருந்தாள். அவளைவிட அவளிற்கு முன்னே மிகக் கம்பீரமாக உட்கார்ந்திருந்தவன் மீதுதான் பிரியனின் கவனம் சிக்கிக்கொண்டது.

முன் கதவு திறந்து சென்ற நர்மதாவை விட்டு விட்டு ஜன்னல் வழியே பார்க்கும் தன்னையே அவன் கவனிப்பதைப் பிரியனும் கவனித்தான்.

மண்ணிறம். கழுத்திலே கறுப்புப்பட்டி. முகத்தில் ஒரு குழைவு. கண்கள் எதையோ தீவிரமாகக் கிரகிப்பதாகத் தெரிவித்தன. இயல்பாகவே மடிந் திருக்கும் காதுகள் முழுமையான அவதானநிலையில் நிமிர்ந்திருந்தன.

"நாங்கள் உங்களின்ரை பின்வீட்டுக்கு அடுத்த வீட்டிலை வாடகைக்கு வந்திருக்கிறம். மாலை கட்ட பூ கொஞ்சம் தருவீங்களா?"

நர்மதாவைக் கண்டதும் அந்தப் பிள்ளை மிகவும் பௌவியமாகக் கேட்டாள்.

"அதற்கென்ன. என்ன பூ வேணும்?"

நர்மதாவும் அவளும் உரையாடிக்கொண்டே பூச்செடிகளை நோக்கி நடந்தனர். தன் எசமான விசுவாசத்தைக் காட்டுவதுபோல் அவர்களின் பின்னே நடந்த அவன் இடையிடையே திரும்பி பிரியனையும் கண்காணித்தான். ஏதோ மகாராணிக்குக் காவலாகச் செல்லும் வீரன்போல் ஒரு கம்பீரநடை.

அந்தப் பிள்ளையை அனுப்பிவிட்டுவந்த நர்மதா விபரங்கூறத் தொடங்கினாள். அவர்கள் இங்கு குடிவந்து ஒரு கிழமை ஆகிறதாம். அந்தப் பிள்ளையின் பெயர் சுபத்திரா. அப்பாவின் பெயர் திருநாவுக்கரசு. இவளை விட இன்னும் இரு பிள்ளைகள் இருக்கிறார்கள். அந்த விடயங்களை அறிவதில் பிரியனுக்குப் பெரிதாக ஆர்வமிருக்கவில்லை.

"ஏன் அந்தப்பிள்ளை நாயையும் கூட்டிக் கொண்டு வந்தது?" அவன் இடைமறித்துக் கேட்டான்.

"அதை ஏன் கேக்கிறீங்கள்? இவை முதலிருந்த வீட்டிலை இருந்தவை வளர்த்த நாயாயிருக்க வேணுமாம். இவை அந்த வீட்டுக்கு வரேக்கை நிண்டிருக்கு. போற வாற இடங்களெல்லாம் பின்னாலை வருமாம். இப்ப இவை தங்களோடை கொண்டந் திட்டினமாம்."

"சரியான வித்தியாசமான நாயப்பா. பார்க்கிறத்துக்கு வித்தியாசமெண்டு சொல்லேல்லை. அதின்ரை போக்குவரத்து நடவடிக்கைகளைச் சொல்லுறன்."

"நான் அதையொண்டும் கவனிக்கேல்லை."

நர்மதா அசிரத்தையாகப் பேசிவிட்டு எழுந்து செல்லவும் "உனக்கும் எனக்கும் ஆர் பொருத்தம் பார்த்தவை?" என்று முணுமுணுத்துக்கொண்டு பிரியன் எழுந்தான். இரண்டு மூன்று வாரங்கள் செல்ல அவனும் அதை மறந்துவிட்டான்.

அன்று இரவு முழுவதும் மழை விடாது கொட்டியது. காலையிலும் தொடரப்போவதாக வானம் மிரட்டிக்கொண்டிருந்து. கதிரவன் மிகுந்த சிரமத்துடன் இருளை விரட்ட முற்பட்டவேளை பிரியன் மழையைப் பார்த்து இரசிக்கவென்று முன் வராந்தாவுக்குள் காலடி எடுத்து வைக்கவும் வராந்தா மூலையிலிருந்த கதிரையின் கீழிருந்து அவன் வெளியே வந்து மழையில் நனைந்த படியே ஓடினான். பிரியன் அதைச் சற்றும் எதிர்பார்க்க வில்லை. அதே நாய்தானா என்ற சந்தேகமும் உள்ளே முளைத்தது.

வாலைத்தாழ்த்தி காதுகளைச் சரியவிட்டு கூனிக்குறுகி ...சா... அந்த நாயாய் இராது. அது நடந்த கம்பீரம் இன்னும் மனத்துள் நிற்கிறதே.

மதியமும் அதே நிகழ்வு சற்று வித்தியாசமாக. ஓடாமல் வெளியே சற்றுத் தள்ளினாற்போல் குறுகியபடி தலையைத் தாழ்த்தி கீழ்நோக்கிக் கிடந்த வாலை மெல்ல அசைத்தபடி ஒரு நோட்டம் பார்த்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனிதரைப் பச்சடி போட்டுச் சாப்பிடும்போல"

பிரியன் மனதிற்குள் சிரித்தபடி எதையும் கவனியாத பாவனையில் விலக அதையே அங்கீகாரமாய்க் கொண்டவன் போல் உடல் முழுவதும் நன்றியைக் குழைத்து அப்பிக்கொண்டதொரு தோற்றம் காட்டிய வாறு மெதுநடையில் வந்து கதிரையின் கீழே இடம்பிடித்துக்கொண்டான்.

இந்த வழக்கம் கதிரவன் தகிக்கும் போதும் அங்குவந்து படுத்துக்கொள்ளலாம் என்னும் அளவிற்கு நீண்டது. அப்படி இருக்கும்போது வீட்டிலிருக்கும் யாராவது அங்கு வந்தால் எழுந்து நின்று வாலையாட்டி உறவுகொண்டாடவும் தொடங்கினான்.

மேலும் ஒருபடி கூடுதல் உரிமை எடுத்துக் கொண்டு யாராவது அந்நியர் வந்தது கண்டால் குரைக்கவும் ஆரம்பித்தான்.

"பப்பி"

இந்தப் பெயரால்தான் சுபத்திரா வீட்டினர் அவனை அழைத்தனர். அதையே பிரியன் வீட்டினரும் பயன்படுத்தினர்.

சாப்பிடும் வேளையில் வந்தால் அல்லது அங்கே நின்றால் பப்பிக்குச் சாப்பாடு போடுவது வீட்டில் எல்லோரது வழக்கமும் ஆகியது. வீட்டிலே வேறு நாயில்லாததால் அவனும் செல்லப்பிள்ளையாக மாறத் தடையேதும் இருக்கவில்லை. நொறுக்குத் தின்பண்டங்களிலே கூட அவனுக்குப் பங்கு கிடைத்தது.

நர்மதாவும் பிரியனும் முன் வராந்தாவில் இருந்து கதைத்துக்கொண்டிருந்தபோது பப்பியும் வந்து காலடியில் படுத்தபோதுதான் நர்மதா அவனைப் பற்றிக் குறைகூற ஆரம்பித்தாள்.

"இந்தப் பப்பியோடை பெரிய கரைச்சலாய் இருக்கப்பா. எங்கை வெளிக்கிட்டாலும் பின்னாலை வருகுது."

வெறுப்பு விரவிய அவளது குரல் பிரியனைக் கொஞ்சம் திகைக்க வைத்தது. பப்பி பிரியனுடனும் வலம் வரத் தொடங்கியிருந்தான். அதில் குறையேதும் பிரியனுக்குத் தெரியவில்லை.

"அவன் வந்து தன்பாட்டுக்கு நிண்டிட்டுப் போறான். நீர் அதுக்கேன் கவலைப்படுகிறீர்? அதிலை என்ன கரைச்சல்?"

"போற இடத்திலை நிக்கிற நாயளோடை வீண் சண்டை. எல்லாரும் இதைப் பற்றிக் கதை. இதெல்லாம் எங்களுக்குத் தேவையில்லாத பிரச்சினைதானே?"

"இதைப் பற்றிக் கவனத்திலை எடுத்துக் கவலைப்படாட்டால் ஒண்டுமில்லை"

"அது உங்களின்ரை செல்லம். அதாலை உங்களுக்கு அது வாறது சந்தோசமாயிருக்கும்."

பப்பியைப் பற்றிய சிறு விடயமொன்றிற்கு தாமிருவரும் முரண்படுவது பைத்தியக்காரத்தனமாக பிரியனுக்குத் தோன்றியது. எனவே மேலும் எதையுங் கூறிக் கதையை வளர்க்காது அமைதியானான்.

ஆனால் பப்பியின் உறவுக்கு வேறோர் திருப்பு முனை தோன்றியது. பின் வீட்டுக்காரர் இடையிலிருந்த வேலியை வெட்டிவிட்டு மதில் கட்ட விரும்புவதாகவும் இரு வீட்டுக்காரரும் செலவைப் பங்குபோட்டுக்கொள்ள விருப்பமா? என்று கேட்டார்கள். பிரியனும் வீட்டில் கலந்துபேசி ஒப்புக்கொண்டு மதில் கட்டி முடிந்த பின்னர்தான பப்பியைப் பற்றிச் சிந்திக்க நேர்ந்தது. அவனால் முன்புபோல் இலகுவாக வந்துபோக இயல வில்லை. மதில் தடுத்ததால் வேறொரு வீட்டுவளவிற்குப் போய் அந்த வேலியின் ஊடாக வரவேண்டியதாகி விட்டது. இதனால் அந்த வீட்டு நாய்களுடன் சண்டையு மேற்பட்டது. பாவம். பயந்துபயந்து வருவான்.

நாளாக நாளாக பக்கத்து வீடுகளும் சுற்றுமதில்களுடன் கம்பீரமடைந்தன. பப்பியின் வருகை முழுமையாகத் தடைப்பட்டது.

பிரியனின் வீட்டின் பின்புறமுள்ள ஒழுங்கையால் கணேசன் வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தபோது திடீரென்று பப்பி எங்கிருந்தோ ஓடிவந்தான். எங்கிருந்தென்ன சுபத்திராவின் வீட்டிலிருந்துதான் வந்தான். பிரியனைக் கண்ட மகிழ்ச்சியைத் துள்ளிக் குதித்தும் செல்லமாகக் குரைத்தும் வெளிப்படுத்தினான். அப்படியே பிரியனைப் பின்தொடர்ந்து வீட்டிற்கு வந்து சேர்ந்தான். முன் வராந்தாவில் படுத்துக்கொண்ட பப்பி வீட்டைச் சேர்ந்த ஒவ்வொருவர் வரும்போதும் உறவுகொண்டாடி மகிழ்ந்தான். நர்மதாவைத் தவிர்ந்த எல்லோரும் பதிலுக்கு அன்பு கொண்டாடினர்..

இனிமேல் பப்பி இங்கேயே நின்றுவிடுவானோ?

இருட்டிய பின்னரும் அவன் அங்கேயே படுத்திருந்தான். பிரியன் வழமைபோல் மதிற்கதவைத் தாழிட்ட பின் படுத்துவிட்டான். நள்ளிரவு தாண்டிய பின் திடீரென பப்பி ஊழையிட ஆரம்பித்தான். மதிலோரமாகச் சுற்றிச்சுற்றி வந்து நீண்ட அழுகை. அதைத் தொடர்ந்து அடுத்த ஒழுங்கையிலிருந்தும் சில நாய்களின் நீண்ட அழுகுரல்கள். விடியும்வரை இந்த அழுகுரல்கள் ஊரை உறங்கவிடாமற் செய்து கொண்டிருந்தன. விடிகாலைப் பொழுதில் மதிற்கதவின் திறப்பிற்காகக் காத்திருந்த பப்பி பாய்ந்து பறந்தோடி விட்டான்.

நாட்கள் நடந்தோடிச் சென்றுகொண்டிருந்தன. இப்பொழுதும் பப்பி பிரியனைக் கண்டால் அவன் முன்னே கம்பீர நடை நடந்து செல்லத் தவறுவதில்லை. அதேவேளை தவறியும் மதிற்கதவைத் தாண்டி உள் நுழைவதுமில்லை.

அன்றும் அப்படித்தான் அவன் நடந்து கொண்டிருக்கும்போது பிரியனது ஒழுங்கை முகப்பிலுள்ள வீட்டிலிருந்து வந்த கல்லொன்று அவனது கண்ணருகே பட்டு... அப்பப்பா அவனது கண் அருந்தப்பு. வேதனை தாழாது ஊளையிட்டவாறு பிரியனிடம் ஓடிவந்தான்.

அந்த வீட்டுப் பையனுடன் ஏற்கனவே முரண்பாடு. என்பதால் அவர்களுடன் பிரியனின் வீடிலுள்ள எவருமே கதைப்பதில்லை. இப்பொழுது இந்த நாய்க்காக அந்தச் சிறுவனைப் பற்றிக் குறைகூற முடியுமா? மனதிற்குள் எட்டிப்பார்த்த தயக்கம் பிடரியிற் பிடித்துத் தள்ளிச் சென்றது.எந்தப் பிரதிபலிப்புமின்றி மௌனமாக அவன் நடந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

"பப்பி பாவந்தான். ஒண்டுஞ்செய்யேலாது. வீட்டை போய் மருந்தேதாவது போட்டுவிடுவம்."

பிரியன் தனக்குள் தானே புலம்பிக்கொண்டு நடந்தான். தன் நெஞ்சுக்கே போக்குக் காட்டுவதைவிட அவனால் எதுவும் செய்யமுடியவில்லை.

வீட்டினருகே வந்ததும் பப்பி நின்றுவிட்டான்.

"உள்ளுக்கு வா பப்பி."

முனகிமுனகி பிரியனின் முகத்தைப் பார்த்து அவன் அழுதான்.

"வா பப்பி"

பிரியனின் காலை முகர்ந்து நக்கி நீண்ட ஓலமொன்றை அவன் பதிலாக்கிய வேளை எட்டிப் பார்த்த நர்மதா "உதையேன் இங்கை கூப்பிடுறீங்கள்?" என்று உரக்கக் கூறினாள். பப்பி எதனைப் புரிந்து கொண்டதோ என்னவோ பிரியனின் காலை நக்கி வாலை மெல்ல ஆட்டிவிட்டுத் திரும்பி ஓடிவிட்டது.

"அந்தக் காவாலிப் பெடியன் கல்லாலை எறிஞ்சு பப்பிக்குக் காயமப்பா. ஏதாவது மருந்து போடுவ மெண்டு பார்த்தா அதைக் கலைச்சுப் போட்டீர்."

"அதை இங்கை அணைக்க வேண்டாம். அதின்ரை திருக்கூத்துகள் மனிசருக்குப் பெருங் கரைச்சல்"

"என்ன கரைச்சலோ எனக்கு விளங்கேல்லை."

பிரியன் புறுபுறுத்துக்கொண்டே உள்ளே சென்றுவிட்டான். வீட்டை வெறுத்தது போல் பப்பி என்னையும் வெறுத்துவிடுவானா? எங்கேனும் காண நேரிடும் போதும் வேறுபுறம் பார்ப்பானோ? என்ற சந்தேகம் பிரியனுள் இருந்தது. ஆனால் அவன் அப்படியேதும் செய்யவில்லை. பிரியன் அந்தப் பக்கம் சென்ற போது அதே அன்பு கனிந்த வரவேற்பு. முன்னரைப் போன்றே கம்பீர நடையுடன் முன்னே நடந்து அழைத்துச் சென்றான். அடிபட்ட வீட்டின் முன்பாகக்கூட அவன் அப்படி அழைத்துச் சென்றபோது பிரியனின் மனம் நாணிச் சுருண்டது..

பப்பியின் வீட்டுப் பக்கமாக அன்று செல்ல வேண்டியிருந்தது.

பப்பி எங்கேயாவது நிற்பான். பிரியனின் கண்கள் தேடின. அங்கே நிற்பது பப்பிதான். பப்பியின் நினைவில் சென்றுகொண்டிருந்த பிரியன் அருகிலிருந்த வீட்டிலிருந்து பாய்ந்து வந்த நாயைக் கவனிக்கவில்லை. பிரியன் மேல் பாய இருந்த நாயை எப்படி வந்து பப்பி தடுத்தான் என்பதே தெரியவில்லை. இரு நாய்களும் புரளும்போதுதான் வீட்டுக்காரர் வந்து தன் நாயை அழைத்துச் சென்றார். இரத்தம் பெருக நின்ற பப்பியை "இந்த ஒழுங்கையிலைதானே இருக்கிறாய். உன்னைப் பார்க்கிறமாதிரிப் பார்த்துக்கொள்கிறேன்" என்பது போல் உறுமிவிட்டு அது சென்றது.

உதிரம் வழிய வழிய பப்பி அதே கம்பீர நடையுடன் பிரியனின் முன்னால்!.

## ஒரு பருக்கை முத்தம்

நான் தனி மரமாகும் போதெல்லாம்
என் கிளைகளில் வந்தமரும்
சுதந்திரப் பறவை நீ

என் விழிகள் எதிர்பார்த்து நிற்பது
உன் வருகையை மட்டும் தான்

உன் ஒற்றைச் சொல்லில்
என் சமுத்திர துன்பம் வற்றிப் போனது

உன் சிறு ஸ்பரிசம் என்னுள் எரியும்
சுவாலையை அணைத்தது

ஆறுதலாய் அரவணைக்கும்
உன் அணைப்பில் நிம்மதி கண்டது
உறங்கா என் உள்ளம்

துணையென எனை ஆக்கிரமித்த பின்
ஏனோ விடைபெற்று நீ செல்கிறாய்
வேரற்று வீழ்கிறேன் நான்

பிரிந்து செல்லும்
என் நேசப் பறவையே பொறு.

என் அட்சயப் பாத்திரத்தில் பிச்சையாய்
ஒரு பருக்கை முத்தமிட்டு செல்
உயிர் பெறுவேன் நான்

## கரையும் உறவு

அந்தியின் பிரகாசம் குன்ற
மெல்ல உதிக்கின்றது
பிரிவின் பிறை

சோபை இழந்த இருளே
வானமாய் விரிகிறது
இனி நட்சத்திரங்களுக்கு
வேலையில்லை

தாபம்தனை சுமந்தலையும்
தென்றலும் இனியில்லை
காதல் பாடும் மரங்களும்
அசைவேயில்லை

பேயெனப் பெய்கிறது
கண்ணீர் மழை
மூழ்கும் நீரில் எரிகிறது ஓர் இதயம்

நினைவின் துர்வாடையை
நுகர்ந்தபடியே
வல்லூறுகள் உணர்வுகளைத்
தின்று குவிக்கிறது

உடல் விட்டுப் போகும் ஆத்மாவாய்
ஒரு சமிக்ஞை எழ
நிசப்தத்தில் கரைகிறது உறவு.

ருஸ்னா நவாஸ் கவிதைகள் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணக்கலும் கலையாக்கமும்

பேராசிரியர் சபா. ஜெயராசா

இணக்கல் (IMPROVISATION) என்ற உளவியற் செயற்பாடு நிகழ்த்துகலைகளில் தனித்துவமான கலைக் கூறாக எடுத்தாளப்படுகிறது. தருணத்துக்கு ஏற்றவாறு இருப்பிலுள்ளவற்றைக் கொண்டு செயலை நிகழ்த்துதல் இணக்கலாகின்றது. ஆதிமனிதர் வாழ்வில் மட்டுமன்றி நவீன மனித வாழ்விலும் இந்தச் செயற்பாடு நிகழ்ந்த வண்ணமுள்ளது.

பேச்சு மொழியிலும், எழுத்து மொழியிலும் இணக்கற் செயற்பாடு நிகழ்த்தப்பட்ட வண்ணமே உள்ளது. தெரியாதது ஒன்றை அல்லது புதிய கண்டுபிடிப்பு ஒன்றை விளக்குவதற்குரிய சொற்கள் கிடைக்காதவிடத்து, கையிருப்பில் உள்ள சொற்களைக் கொண்டே விளக்குதல் மொழிநிலையில் இடம் பெறும் இணக்கலாகும். மொழியே இணக்கலால் தோற்றம் பெற்றது என்பர்.

இசையில் இணக்கற் செயற்பாடு செவ்வியல் இசை, நவீன இசை, நாட்டார் இசை, அனைத்திலும் மேற்கொள்ளப்படும் சுவையூட்டும் நடத்தையாகவும் அறிக்கையாகவும் அமைகின்றது.

முன்னேற்பாடான குறிப்புகள், தயாரிப்புகள் இன்றி இசை நிகழ்த்துகை மேற்கொள்ளல் "இணக்கல்" இசையாகின்றது. கர்நாடக சங்கீதம் என்ற தமிழர் செவ்வியல் இசையில் இது "கட்டிணக்கல்" என்றும், வடமொழியில் "மனோ தர்மம்" என்றும் குறிப்பிடப்படும். "கட்டிணக்கல்" "மெட்டிணக் கல்" முதலாம் சொற்கள் கூத்துக்கலையில் வழக்கில் உள்ளன.

"மனோதர்மம்" என்பது "மனத்தின் ஒழுங்கமைவு" என்றும், உள்ளத்தின் அறநெறிப்பாடு என்றும் குறிப்பிடப்படும். கர்நாடக இசையில் ஆற்றுகை நிகழ்ந்து கொண்டிருக்கும் வேளை, இசை வல்லுனர் எதுவிதமான முன்னேற்பாடுமின்றி தமது இசை ஆக்கத்திறனை வெளிப்படுத்துதல், மனோ தர்மத்தில் நிகழ்கின்றது.

அந்த இணக்கற் செயற்பாடு கர்நாடக இசை இலக்கணத்துக்கு உட்பட்டதாக இருத்தல் கட்டாயமானதாகும். மனோதர்மத்தின் அடிப்படை உறுபண்புகளாக நிரவல், கற்பனாஸ்வரம், இராக ஆலாபனை மற்றும் இசைக்கருவிகள் வாயிலாக மேற்கொள்ளப்படும் தனி ஆவர்த்தனம் முதலியவை உள்ளடங்கும்.

நாட்டுக் கூத்தில் இடம் பெறும் தனி ஆவர்த்தனம் "தனிக்கட்டு" என்று அழைக்கப்படும் தனித்தனியாக ஒவ்வோர் இசைக்கருவிகளையும் இசைத்தபின் அனைவரும் ஒன்று சேர்ந்து இசைக்கருவிகளை இசைக்கும் நிலை "உச்சம்" என்று குறிப்பிடப்படும். இந்த ஏற்பாடு நாட்டார் இசைமரபில் இருந்து தான் செவ்வியல் இசைக்கு வந்தது.

நாதசுர இசையில் மனோதர்ம அளிக்கையைச் சிறப்பாக வழங்கியவர்களுள், டி.என்.ராஜரத்தினம் பிள்ளை, காருகுறிச்சி அருணாசலம், பஞ்சாபிகேசா, என்.கே.பத்மநாதன் முதலியோர் முக்கியமானவர்கள். கர்நாடக இசையை கிராமிய மட்டத்துக்கு எடுத்துச் சென்று வளர்த்த செயற்பாட்டில் தவில் நாதசுரக் கலைஞர்களின் வகிபாகம் முக்கியமானது.

மேலைப்புல இசையில் மேற்கொள்ளும் இணக்கல் செயற்பாடு, பறப்பதன் மேல் "நிற்றல்" என்று குறிப்பிடப்படும் இந்தச் செயற்பாடு மூளை நரம்பியல் இயக்கத்துடனும் ஒட்சிசன் ஏற்றத்துடனும் தொடர்பு பட்டு நிற்பதை நரம்பியல் உளவியலாளர் விளக்குவர். அத்துடன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் ஆற்றலை மேலும் அதிகரிக்கவும் செய்யும்.

ஐரோப்பிய மரபில் பெரும் இசை வல்லுனர்களாகிய செபஸ்தியான்பெக், மொசாட், பிதோவன் முதலியோர் இணக்கல் இசைச் செயற்பாட்டில் வல்லவர்களாக இருந்து பெரும் ஆற்றுகையை மேற்கொண்டனர். புளூஸ், ரொக், ஜாஸ் முதலாம் நவீன இசை வகைகள் இணக்கலை முதன்மைக் கூறாகக் கொண்டு நிகழ்த்துகையை மேற்கொள்கின்றன. இணக்கலின் முக்கியத்துவத்தை விளக்க வந்த இசை ஆய்வாளர்கள், அதனை இசையின் தனித்துவம் மிக்கவகைமையாக (GENRE) வலியுறுத்துகின்றனர்.

இணக்கற் செயற்பாட்டின் வழியாக இசைக் கற்பனை தொடர்ந்து நீட்சி கொள்ளச் செய்யப்படுகின்றது. அடங்கிய, ஆளுமை மலர்ச்சியின் கட்டுகளை அவிழ்த்து விடுகின்றது. முன்னர் பயிற்சிக்கும் தயாரிப்புக்கும் உட்படாத இசை ஓவியங்களையும், இசைப்படிமங்களையும் உருவாக்கி நிகழ்த்துகை செய்வோரிடத்தும் இசை நுகர்வோரிடத்தும் அழகியலைக் கையளிக்கும் இசைச் செழிப்பை ஏற்படுத்துகின்றது.

இசைமட்டுமன்றி செவ்வியல் ஆடல், நாட்டார், ஆடல் நவீன ஆடல், அனைத்திலும் இணக்கலின் முக்கி யத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. ஆடல் அளிக்கை இயல் (CHOREOGRAPHY) ஆடல் நயனம், முதலியவற்றுக் குரிய செயலியாக இணக்கல் குறிப்பிடப் படுகிறது. புதிய ஆடற்கண்டுபிடிப்புக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குவதற்கும் அதுதுணை செய்கின்றது.

இணக்கல் என்பது "தன்னியல்பான ஆடல் ஊற்று" என்று ஆடற்கலையிலே குறிப்பிடப்படும். அது ஆடல் தொடர்பான இயக்க அறிதிறனில் (SCHEMA) உசாவலை நிகழ்த்தும் செயற்பாடாகின்றது. உடல் வரைபையும், உடல் வடிவமையும் ஆக்கத் தேடலுக்கு உட்படுத்தும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது. முன்னேற்பாடானது தயாரிப்பு அற்ற நிலையில் எடுக்கும் ஆடல் அளிக்கைச் சிந்தனை, கட்டற்ற முகிழ்ப்பைப் பெறுகின்றது. எதிர்பார்க்கப்படாத உடல் மொழி எழுச்சி கொள்கின்றது.

செவ்வியல் ஆடல்களிலே இடம் பெறும் நெகிழ்ச்சியற்ற இறுகிய (REGID) நுட்பியல் இணக்கல் முறைகளுக்கு இடமளிக்கவில்லை. பலே ஆடல்களில் இடம் பெற்றது இறுகிய ஆடற்கோலங்களை நிராகரிப்பு உள்ளாக்கிய இசடோறாடங்கன் இயற்கையான அசைவுகளை உட்புகுத்தி பலே ஆடலுக்குப் புது மெருகு சேர்த்தார். இணக்கல் செயற்பாட்டினை பலே ஆடலில் உள்வாங்கி அந்த ஆடலை உயிர்ப்புக்கு உள்ளாக்கினார்.

"ஆடலின் தாய்" என்று அழைக்கப்படும் இசடோறாடங்கன் மார்க்சிய சிந்தனையில் ஈடுபாடு கொண்டு கமியூனிஸ் கட்சியின் உறுப்பினராகவும் இயங்கினார். வர்த்தகநோக்கில் ஆடல் பயன்படுத்தப் படுவதற்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்தார்.

இந்திய செவ்வியல் ஆடல்கள் இறுகிய கட்டுப்பாடுகளுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டவை. அவற்றில் இணக்கற் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. சஞ்சாரி பாவம் என்பதிலும் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட வடிவங்களைப் பயன்படுத்துதல் வேண்டுமெயன்றி புதுமையான இணக்கலை மேற்கொள்ளல் சம்பிரதாயத்தை மீறிய செயலாகக் கருதப்படும்.

உலக அரங்கியல் *1972*ஆம் ஆண்டிலிருந்து ஆடலில் "தொடுகை இணக்கல்" (CONTACT IMPROVISATION) பயன்படுத்தப்படுகிறது. இருவர் சேர்ந்து ஆடும் பொழுது மற்றவரின் எடை, அணைப்பு, அசைவு உற்றுணர்வு ஆகியவற்றுடன் இணைந்தவாறு தொடுகை இணக்கல் மேற்கொள்ளப்படுகிறது. சமூக ஆடல்கள் இணக்கல் இங்கிதத்துடன் இணைந்தவை.

நாட்டார் வழிபாடுகளில் உருவேறிய ஆடல் நிகழ்வதைக்காணலாம். அமுங்கிய மனவெழுச்சிகளை வெளிப்பாய்ச்சல் செய்யும் அந்தச் செயற்பாட்டில் இணக்கல் ஆடலே மேலோங்கி நிற்கும்.

தன்னிலை மறந்து எதிர்வு கூறப்படாத அல்லது எதிர்பார்க்கப்படாத வெளிப்பாடுகள் தோற்றம் பெறுதல் அங்கு கண்டறிப்பட்டுள்ளது. நேர்வெளி மற்றும் எதிர்வெளி (NEGATIVE SPACE) என்ற இருநிலைகள் ஆடலிலே கண்டு ஆடல் நிகழ்த்தப்படும் வெளி நேர்வெளி என்றும் அதற்கு அப்பால் உள்ள வெளி, எதிர்வெளி என்றும் குறிப்பிடப்படும். கலைகளிலே பயன்படுத்தப்படாத எதிர்வெளியை "மா" என்று ஜப்பானியக் கலைஞர்கள் குறிப்பிடுவர். தமிழ் மரபில் எதிர்வெளி "இடப்பு" எனப்படும்.

நாடக அரங்கில் "இணக்கல் அரங்கு" என்ற தனிப்பிரிவு உண்டு. முன்கூட்டியே திட்டமிடப்படாமலும், நாடக எழுத்துரு இன்றியும் அவ்வகை அரங்கு மேற்கொள்ளப்படும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலே அவ்வகை அரங்கு இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

சினிமா நடிகர், மேடை நடிகர், தொலைக்காட்சி நடிகர் முதலியோரைப் பயிற்றுவிப்பதற்கு "இணக்கல் அரங்கமுறைமை" இன்று பயன்படுத்தப்படுகிறது.

உளநலம் பாதிக்கப்பட்டவர்களை குணமாக்கிக் கொள்வதற்கும் அவர்களிடத்து உள்ளுறைந்து அமுங்கி நிற்கும் உணர்வுகள், சிந்தனைகள், மனிதத் தொடர்புகள் முதலியவற்றை வெளிப்பாய்ச்சல் செய்து மனச்சுகம் எட்டுவதற்கும், இணக்கல் அரங்கு பயன்படுத்தப் படுகின்றது.

சிறுவரின் மொழியாற்றலையும், பிரச்சினை விடுவிக்கும் திறனையும், சிந்தனை முகிழ்ப்பையும் மேம்படுத்திக் கொள்ளும் வகையில் ஜோன்குயி உருவாக்கிய "முற்போக்குகல்வி"யில் இணக்கல் அரங்கின் செயற்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிற்கோடல் (PLAY BACK) அரங்கு, ஒடுக்கப் பட்டோர் அரங்கு, வறியோர் அரங்கு, திறந்த அரங்கு, முதலாம் நவீன அரங்குகள் இணக்கலுக்கு முன்னுரிமை கொடுத்தல் குறிப்பிடத்தக்கது. சமூகப் பிரச்சினைகளை எடுத்தாளும் அரங்குகளில் இணக்கல் என்பது தவிர்க்க முடியாத கலைச் சேர்மானம் ஆகின்றது.

ஒகஸ்தோ போலோவின் கருத்தாடல் அரங்கிலும் இணக்கல் சிறப்பிடம் பெறுகின்றது. அண்மைக் காலமாக வளர்ச்சியடைந்துவரும் அரங்க வகைகளுள் ஒன்றாக அமைவது. அரங்க விளையாட்டு (THEATRE SPORTS) நாடக விளைவுகளுடன் விளையாட்டை இணக்கலுடன் முன்னெடுத்து போட்டியை எதிர்கொள்ளல் அங்கு நிகழ்த்தப்படுகிறது. பார்வையாளரின் கருத்துக்களை உள்ளடக்கி இணக்கலைப் பயன்படுத்திப்போட்டிக்கு முகம் கொடுக்கப்படும்.

வெறுப்பிடுகை (ANNOYANEE) அரங்கு என்பது அண்மைக்காலத்தில் வளர்ச்சியுற்ற அபத்தமும் வெறுப்பும், நகைச்சுவையும், இணக்கலும் கலந்த ஒரு வடிவம், இசை இணக்கலும், தனி நடிப்பும் அங்கு இடம் பெறும். மைக்நைபீர் என்பவர் அந்த அரங்கை உருவாக்கினார். நகைச்சுவைக் கலையில் இணக்கல் தனிச் சிறப்பிடம் பெறும் உள்ளீடாக இடம் பெற்று வருகுிறது. நகைச்சுவை நாடகங்கள், தொலைக்காட்சி நகைச் சுவை நாயகம் ஒன்று கூடல் நிகழ்ச்சிகளில் இடம் பெறும் நகைச்சுவை, பேச்சுக்கலையில் உடனடியாக வழங்கப் படும் நகைச்சுவையாக்கம் முதலியவற்றில் இணக்கல் கை கொடுத்த வண்ணமுள்ளது.

கலைகளில் மட்டுமன்றி, பொறியியல், குடிசைக் கைத்தொழில், சமையல், தையல், கட்டடக்கலை, கற்றல், கற்பித்தல், பயிர்ச்செய்கை முதலாம் அனைத்துத்துறைகளிலும் இணக்கல் தவிர்க்க முடியாமல் இடம் பெற்று வருகிறது.

ஆக்கமலர்ச்சியின் செயல் தழுவிய வெளிப்பாடே இணக்கல் என உளவியலாளர் குறிப்பிடுவர். புறநிலையில் எழுப்பப்படும் தூண்டி உள நிலையில் துலங்கல்களையும், அருட்டலையும், உருவாக்கி புதிய சிந்தனை வடிவையும், புதிய உருவாக்கக் கோலத்தையும் தருணத்துக்கு ஏற்றவாறான குறியீடுகளையும், சூழலில் உள்ள வளங்களைப் பயன்படுத்தும் ஆற்றலையும் தோற்றுவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கம் வருமா?

கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்

நேற்றிலிருந்தே தேடிப் பார்த்தும் ஏமாற்றம் தான்.

அவர்கள் கடற்கரைக்கு அருகிலுள்ள கிண்ணியா "செட்" டுக்கு முன்னால் என்ன செய்வதென்று தெரியாமல் கியூவில் நின்று கொண்டிருந்தார்கள். பெற்றோலுக்கு வேறு டீசலுக்கு வேறாக கியூ. மோட்டார் சைக்கிள், திரீவீலர், கார், பஸ், லொறி இப்படியாக...

நள்ளிரவிலேயே அவ்விடத்துக்கு வந்தவர்கள், நான்கைந்து மணித்தியாலங்களாகக் காத்திருப்போரென பல வகையினர் அங்கே.

நெருங்கிய உறவினரொருவரின் மையத்து என்பதனால் வராமலிருக்க முடியவில்லை. தொட்டவத்தையிலிருந்து கிண்ணியாவுக்கு சுமாராக முந்நூறு கிலோமீற்றர் தூரம். ஜனாஸா நல்லடக்கத்தின் பின்னர் உடனடியாக திரும்பப் போகும் எண்ணத்தில் தான் அவர்கள் வந்ததே. டீசல் கிடைக்காததால் இரண்டு நாட்களாக "சாட்டர்".

ஏற்கனவே " ரிசர்வ்". இன்னும் குறிப்பிட்டளவு தூரம்தான் ஓடலாம்.

அவர்கள் வந்திருப்பது டீசல் வேனில். அது ரமீஸூக்குச் சொந்தமானது. அவனிடம் பெற்றோலில் இயங்கும் "படி"யொன்றும் உள்ளதுதான். ஆனால், அதில் "சீட்" போதாது. வந்திருக்கும் வேறு யாரிடமும் வேன்கள் இல்லை. நாட்டில் டொலர் நெருக்கடி என்பதனால் டீசல் பெற்றோருக்கு, அதிலும் குறிப்பாக டீசலுக்கு தட்டுப்பாடு நிலவும் இந்த நாட்களில் "ஹயர்" ஓடும் வாகனங்களையும் தேடிக்கொள்ள முடியவில்லை.

வந்திருப்போரில் இல்யாஸைத் தவிர மற்றைய எல்லோருமே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மௌத்தானவருக்கு மாமா, சாச்சா, மச்சான்... என உறவுகள்.

என்னதான் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடென்றாலும், மையத்து ஒன்றென்றால் அதுவும் நெருங்கிய உறவிலென்றால் எந்தத் தூரமென்றாலும் போக வேண்டிய தார்மீகக் கடமைப்பாடு அவர்களுக்கு.

வரும் வழியிலும் டீசலுக்கு நிற்பாட்டாத இடங்களில்லை. இப்படியான சந்தர்ப்பங்களில் உதவட்டுமேயென ஏற்கனவே வீட்டில் சேர்த்து வைத்திருந்ததில் தான் கிண்ணியா வரை வர முடிந்தது.

வேறு நாட்களில் கிண்ணியா பக்கம் வந்தால் குறைவில்லாத மீன் சாப்பாடு. மான் இறைச்சியும் படும். டீசல், மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் மீன் அவ்வளவாக வருவதில்லையாம். இந்த இரண்டு நாட்களும் மாட்டிறைச்சியோடு தான் சாப்பாடு.



கியூ அசைவதாக இல்லை. காலையில் வந்து விடுமெனச் சொன்ன பவுஸர் இன்னும் வந்தபாடாக இல்லை. இப்போது வரும், இன்னும் கொஞ்ச நேரத்தில் வருமென்ற நப்பாசையில் தான் அத்தனைபேரும் காத்திருந்தனர்.

நடுத்தர வயதைத் தாண்டிய ஒருவர் மயங்கி விழுந்ததனால் அவரைப் பலரும் சூழ்ந்து கொண்டனர். நேற்றும் இப்படி இரண்டு பேரெனச் சிலர் கதைத்தும் கொண்டனர்.

தனியொருவர் மட்டும் வந்திருந்தால் மனமுடைந்து போயிருப்பார்கள். எட்டுப்பேர் வந்தது நல்லதாகப் போய் விட்டது. மாறிமாறி கியூவில் நிற்பதற்கும் வசதியாகி விட்டது.

அடுத்த "செட்"டுக்கு பவுஸர் வந்துள்ளதென்ற செய்தி காதுகளில் விழவே பாதிப்பேர் கியூவை விட்டும் பறந்தனர். இவர்களும் தான்.

உண்மையிலேயே அங்கு பவுஸர் வந்திருந்தது தான். அது பெற்றோலாம் டீசல் இல்லையாம்.

திரும்பவும் முன்னைய "செட்"டுக்கு வந்தபோது புதிய கியூ.

டீசல் பவுஸர் வந்து கொண்டிருக்கிறதாம், கந்தளாயைத் தாண்டி விட்டதாம், தம்பலகாமத்திலாம்... இப்படியான கைகால் வைத்த செய்திகளுக்கு மட்டும் குறைவில்லை. புதிய கியூவுக்கு வந்தும் இரண்டு மணித்தியாலங்கள்.

"பாத்து பாத்திருந்து சரிவாரில்ல. பாரிஸ் நீ போலினில நில்லு. நாங்க பெய்த்து டீயொண்டு அடிச்சிட்டு வாரன்..." எனச் சொல்லியவாறே ஏழு பேரும் ஹோட்டல் தேடிப் புறப்பட்டனர். கேஸ் இல்லை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்மா தட்டுப்பாடு என்பதனால் வீதியோரப் பெட்டிக் கடைகள் கூட மூடிக் கிடந்தன.

இனி யாஸீனின் வீட்டுக்கு மீண்டும் திரும்பிப் போகவும் முடியாத தர்மசங்கடம். மௌத்தானவரின் ஒரே மகன் யாஸீன். அடிப்படை வசதிகள் குறைந்த வீடு, நிரந்தர வருமானமென எதுவுமில்லாதவரைப் போய்த் தொந்தரவு பண்ணுவதா? சிறிதுநேரம் "ரெஸ்ட்" எடுப்பதற்காக "பீச்"சுக்குப் போனார்கள்.

"அன்ன கப்பலொண்டு போர" தூரத்துக்குக் கைகாட்டிச் சிரித்தான் பாரிஸ்.

"எண்ண கப்பலோ தெரியா" இல்யாஸூம் சேர்ந்து சிரித்தான்.

"எண்ண கப்பல் டிரின்கோ பொக்கத்தால வாரில்ல. கொழும்பு ஹாபருக்கு கப்பல் வந்திருச்சியாம் டொலர் இல்லாததால எறக்கியில்லயாம்..." வயதில் மூத்தவரான ராஸிக்மாமா நீண்ட விளக்கமொன்றையே முன்வைத்தார்.

பேச்சோடு பேச்சாக பதினொரு மணியாகி விட்டது. அவர்கள் எல்லோருக்குமே வீடுகளுக்குப் போகும் அவசரம்.

"நாளைக்கு மாமூட்டில கலியாணம்"

"ஊட்டில கேஸ் முடிஞ்சாம் சோறாக்கியதுக்கு வழியில்லயாம்"

"எத்தினயோ நாளா தொழிலில்ல கைல சல்லீமில்ல"

"மகளுக்கு பேசியிருச்சிய மாப்புளூட்டுக்கு அவசரமா பெய்த்து நாள குறிச்சிகொள வேண்டியிருச்சிய"

இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தேவை.

எல்லோரும் ஏறிக் கொள்ள வேன் புறப்பட்டது. டீசல் வந்திருக்குமோ என்ற சந்தேகத்தில் மீண்டும் "செட்"டுக்கு வந்தனர். ஏமாற்றம் தான்.

வேனை நேரே கந்தளாய்க்கு விட்டனர். தயிர் சாப்பிடுவதற்காக ஓரிடத்தில் நிறுத்தப்பட்டது. வீடுகளுக்கென வாங்கிக் கொள்ள மனம் ஆசைப்பட்டாலும் பயணத்தின் நிச்சயமற்ற தன்மை தடுத்தது.

கடையொன்றில் கூடிய விலைக்கு டீசல் அடித்துக்கொள்ள முடிந்தது. அதுவும் மூன்று லீற்றர் மட்டுமே.

வரும் வழியில் "செட்"டுகளில் நிறுத்துவதும் விசாரிப்பதும்...

"டீசல் நெத "

"பெட்ரோல் நெத"

அதிகமான இடங்களில் இப்படியான "போட்"கள்தான் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.

ஒரு மாதிரியாக ஹபரணையைத் தாண்டி வந்து சேர்ந்தனர்.

"வெவ் மாலு சமக பக் கமு" என்ற விளம்பரப் பலகையுடனான கிராமத்துக் கடையொன்றில் பகல் சாப்பாட்டை முடித்துக் கொண்டனர். அங்கேயே ஓர் ஓரமாக ளுஹரையும் அஸரையும் சேர்த்துத் தொழுதும் கொண்டனர்.

அங்கிருந்தும் ஊருக்கு இருநூறு கிலோ மீற்றருக்கு மேல். இருக்கும் டீசலைக் கொண்டு ஆகக் கூடியது தம்புள்ளை வரையாவது ஓட முடியுமா என்ற சந்தேகம்!

வாகனப் போக்குவரத்தும் சாதாரண நாட்களை விடக் குறைவாக இருந்தது.

பத்து கிலோமீற்றர் தூரமளவு முன்னோக்கி வந்த போது வழி நெடுகிலும் சனம். வேனை ஓரிடமாகப் பார்த்து நிறுத்தினர்.

சுலோகங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

"தியவ் தியவ் போர தியவ்"

"வெட பெரிநம் கெதர யமவ்"

"கபுடு காக் காக் காக்"

"அபட கன்ன பதுத் நெதே"

"கேஸ் நெதே டீசல் நெதே"

இப்படி கோஷங்கள் எத்தனையோ. அதற்குள் வீதி நாடகமொன்று நாட்டு நிலவரத்தை தத்ரூபமாக எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது.

கலேவெலக்கு வந்து சேர முன்னரே டீசல் "ரிசர்வ்" ஆகியிருந்தது. பாணந்துறையில் கடை வைத்திருக்கும் தாஸிம் முதலாளியின் தேவஹூவ வீட்டில் இரவு தங்கினர்.

முதலாளிக்குத் தெரிந்த யாரிடமாவது டீசல் எடுக்க முடியுமா என விசாரித்துப் பார்த்தும் விஷயம் கைகூடவில்லை.

டீசல் கியூவில் ஏற்பட்ட தகராறினால் பக்கத்து ஊரொன்றில் ஒருவர் பலமாகத் தாக்கப்பட்டது, செட் உரிமையாளருக்கு கத்திக்குத்து போன்ற நடைமுறைச் சம்பவங்களை உரையாடிக் கொண்டிருந்ததால் நித்திரைக்குச் செல்ல பதினொரு மணியும் தாண்டி விட்டது.

இரவில் பன்னிரண்டு மணிக்குப் போல் ரமீஸூக்கு "கோல்" ஒன்று வந்தது.

"மாம மௌத்து" எனச் சத்தமிட்டதில் சகலரும் விழித்துக் கொண்டனர்.

மையத்து வீட்டுக்கென வந்தவர்கள் இன்னொரு மையத்துக்கு போக வேண்டிய நிலை. ரமீஸின் மனைவியின் வாப்பா தான் மௌத்தாகியிருக்கிறார். வந்திருக்கும் மற்றவர்களுக்கும் நெருங்கிய உறவினர்.

இது இப்படியிருக்க,

"நாளக்கு மருமகன் வெள்ளனேங்காட்டும் சவுதிக்கு ரிடன் போர. ஒரு வார்த்த பேசேலாம பெய்த்திடுமோ" இப்படி தனக்குள் கவலைப்பட்டுக் கொண்டார் பஷீர்.

"மகள்ட நிகா நாளண்டக்கு . பெய்த்துதான் எல்லா வேலகளேம் பாத்து கேட்டு செய்ய வேண்டியிருச்சிய..." தான் இந்தப் பயணம் வந்திருக்கவே கூடாதென்ற உள்ளுணர்வு இல்யாஸூக்கு. "தம்புள்ளேல மரக்கறிக நயமாமே. வரோட்டு எடுத்துகொண்டு வாங்கோ" என வரும்போதே மனைவி சொல்லியனுப்பியது நினைவுக்கு வர தனக்குள் சிரித்துக் கொண்டான்.

"நாளக்கு போயா. பள்ளீல ஜெனரல் மீட்டிங்" உபதலைவராகுவதற்கு நீண்ட காலமாகவே மனதில் கொண்டிருக்கும் தனது திட்டம் இந்த வருடமும் அடிபட்டுப் போய்விடுமோ என்ற கவலை காமிலுக்கு.

இவற்றையெல்லாம் நினைக்கையில் டீசல் தீர்ந்து போனது போலவே அவர்களது மனதுகளும் தீய்ந்து போய்க் கிடந்தன.

இனியும் தூக்கம் வருமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இன்ஸான்" சிறுகதைகள்

திக்குவல்லை கமால்



இன்ஸான்

குணசேன, விஜயவர்தன எதிர்ப்பு!

சூட்சுமமான ஏஜன்ஸி பிரச்சாரம்!!

மைலவாடி இல்லாமல் தவிப்பு!



இன்ஸான்

ஹஜ் ஏற்பாடு அதிருப்தி!

மார்க்க அறிஞர், வைத்திய கோஷ்டி வேண்டும்!

யார்? யார்?

இலங்கையில் இஸ்லாமிய பத்திரிகை - சஞ்சிகைகளின் பட்டியல் மிக நீண்டது. அவை பலவேறு அடிப்படைகளில் வெளியாகின. மக்கள் பிரச்சினைகளை சிறுகதைகளாக வடிக்கும் வாய்ப்பை சிறந்த நெறிப்படுத்தலுக்கூடாக வழங்கிய ஒரே ஏடு "இன்ஸான்" என்றே கூறவேண்டும்.

**இன்ஸான் :**

இன்ஸான் என்ற வாரப் பத்திரிகை *1967 –1970* காலப்பகுதியில் முஸ்லிம் சமுதாயத்தை இலக்காகக் கொண்டு கொழும்பிலிருந்து வெளியாகியது. இன்ஸான் என்ற அறபுப் பதம் மனிதன் என்பதைக் குறிக்கும்.

**சமூக சூழல் :**

அக்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி நிலவியது. முஸ்லிம் சமுகத்தினர் பெரும்பாலும் அந்தக் கட்சிக்கு ஆதரவாகவே செயற்பட்டனர். பச்சை முஸ்லிம்களின் நிறம் என்று அக்கால செல்வந்தர்கள் மக்களை வழிநடத்தியும் வந்தனர். இவ்வாறான நிலைப்பாட்டிலிருந்த மக்களது சிந்தனையை மாற்றுவதே இந்த இன்ஸான் பத்திரிகையின் நோக்கமாக இருந்தது. பத்திரிகையை நடாத்துவதற்கான பொருளாதாரப் பின்புலமும் வாய்த்திருந்தது.

**ஆசிரியர் :**

அபூதாலிப் அப்துல் லத்தீஃப் இன்ஸானின் பிரதம ஆசிரியர். அவர் அப்போது சோவியத் யூனியனின் இலங்கைத் தூதுவராலயத்தின் தகவல் பிரிவில் கடமையாற்றினார். முற்போக்கு எழுத்தாளர் சங்க ஆதரவாளரும் கூட. இளங்கீரன் நடாத்திய "மரகதம்" சஞ்சிகையில் "மையத்து" என்றொரு சிறுகதை எழுதினார்.

அதன் பின்னர் அவர் கதைகள் எழுதாததாலும் மையத்து என்பது மரணத்தைக் குறிப்பதாலும் "மையத்து லத்தீஃப்" என்று நண்பர்கள் அவரைச் சொல்வதுண்டு. இவர் லெனின் விருது பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**இலக்கு :**

இன்ஸான் சமகால அரசியல்- சமுகப் பிரச்சினைகளைப் பேசியதாலும் சாதாரண மக்களுக்கு நெருக்கமான மொழிநடையைக் கொண்டிருந்ததாலும் பெரும் ஆதரவினைப் பெற்றிருந்தது.

**கவிதை:**

சிறுகதை என்று வரும்போது அவை சமய ரீதியானதாக அமையவேண்டுமென்ற போக்கு மேலோங்கி இருந்ததோடு அதுவே "இஸ்லாமிய இலக்கியம்" என்றும் பேசப்பட்டகாலம் அது. ஆனால் இன்ஸான் அதுபற்றி எல்லாம் அலட்டிக்கொள்ளவில்லை.

**சிறுகதை :**

இன்ஸான் சிறுகதைகளுக்காக வாசலைத் திறந்துவிட்டது. சமகாலப் பிரச்சினைகளை எழுத முடியும். கலாசாரப் பின்னணி, சுய பேச்சு வழக்கு, மண்வாசனைகளை எல்லாம் பயன்படுத்த எந்தந் தடையும் கிடையாதென உரத்த குரலில் எடுத்தியம்பியது.வெறும் கற்பனைக் கதைகளை எழுதிக்கொண்டிருந்த படைப்பாளிகளின் கண்கள் திறந்தன.

முன்னோடியாக பிறநாட்டு முஸ்லிம் எழுத்தாளர்களது மொழிபெயர்ப்புக் கதைகள் பிரசுரமாகின. அந்த வகையில் இல்பத் திலிபு (அறபு) , சதாத் ஹஸன் மிண்டோ(உருது), கஃபூர் குலுயாம்(ருஷ்யா) ,குவாஜா அஹமத் ஆக்க(உருது), வைக்கம் முகம்மது பசீர் (மலையாளம்)ஆகியோரது கதைகள் முக்கியமானவை.

**இன்ஸான் கதைஞர் :**

முஸ்லிம் சிறுகதை முன்னோடிகள் என்று கூறத்தக்க பித்தன்ஷா, அ.ஸ.அப்துஸ்ஸமது, மருதூர்க் கொத்தன் போன்றவர்கள் இன்ஸானில் எழுதவில்லை. பின்னர் இன்ஸான் கதைஞர் என்று கூறத்தக்க ஒரு குழுமம் உருவாகியமை கவனிக்கத்தக்கதே.

சுமார் நூறு கதைப் பூக்கள் மலர்ந்துள்ளதாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிகிறது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வர்ணம் ஒவ்வொரு வாசம். இவற்றுள் அதிகமான கதைகளை எழுதியவர் யார் என்று ஒரு கேள்வி எழுப்பப்படுமாயின் எம்.எச்.எம்.சம்ஸூக்கு(பாகிறா) அந்த இடம் கிடைக்கிறது. அடுத்த கட்டத்தில் மொயின் சமீன், எம்.பி.எம்.நிஸ்வான், யாழ் எம்.எஸ்.ஏ.ரஹீம், கலைவாதி கலீல்(மன்னிநகர் கலீல்),ஆகியோர் அடங்குகின்றனர்.

எம்.எம்.எம்.நஸ்றுதீன், எஸ்.எல்.எம்.ஹனீபா (ஓடையூர் எஸ்.ஹனீபா), வை.அஹமத், எம்.எல்.எம்.மன்சூர்(பூவெளிக்கடை மன்சூர்), திக்குவல்லை கமால் ஆகியோர் தலா மூன்று கதைகள் எழுதியுள்ளனர். ஓரிரு கதைகள் எழுதியோர் பட்டியல் மிகநீண்டது.

பிற்காலத்தில் இவர்களில் எண்மர் சிறுகதைத் தொகுப்புக்கள் வெளியிட்டுள்ளனர். சாகித்திய மண்டல விருதுகளும் பெற்றுள்ளனர். புத்தகம் வெளியிடா விட்டாலும் இலக்கிய விமர்சகர்களால் சிலாகிக்கப் படுபவர்களும் இருக்கின்றனர்.

ரஸகதா :

பக்கம் நிரப்புவதற்காக சிறுகதைகள் வெளியிடப்படவில்லை என்பதை, பத்திரிகை ஆசிரியர் ஒவ்வொருகட்டங்களில் மேற்கொண்ட முன்னெடுப்புக் களும் எழுத்தாளர்களோடு அவர் பயணித்த விதமும் எடுத்துக் காட்டுகிறது.

அந்நாட்களில் "ரஸகதா"என்ற சிங்கள வாரப் பத்திரிகை சிறுகதைப் போட்டி ஒன்றை நடாத்தியுள்ளது. வந்து சேர்ந்த நூற்றுக் கணக்கான கதைகளில் பரிசுக் குரியதாகத் தெரிவான கதை, முஸ்லிம் பண்பாட்டு அம்சங்களை நகைப்புக் குரியதாக்கி மனம் நோகச் செய்வதாக அமைந்திருந்தது. "கதவு திறந்தது" என்ற அந்தக் கதை மொழிபெயர்ப்பாக இன்ஸானில் வெளியிடப்பட்டதோடு,இதற்கு பண்புமிக்க பதில் கதை அனுப்புமாறு கோரப்பட்டிருந்தது. வந்த கதைகளில் சிறந்த கதைகள் பிரசுரிக்கப்பட்டன.

ராகங்கள் :

எஸ்.எல்.எம்.ஹனீபா "ஆத்மாவின் ராகங்கள்" என்ற ஒரு சிறுகதை எழுதினார். அதைப் படித்துவிட்டு இன்ஸாத் " மனித ரகங்கள்" என்று இன்னொரு கதை எழுதினார். ராகங்கள் தொடர ஆரம்பித்தது. வை .அஹ்மத் "இதயத்தின் ராகங்கள்", மொயின் சமீன் "காதல் ராகங்கள்" , வாழைச்சேனை ரி.எல்.ரசீத் "அன்பின் ராகங்கள்", எம்.பி.எம்.நிஸ்வான் "துன்ப ராகங்கள்", எம்.எம்.எம். நஸ்றுதீன் "புயலின் ராகங்கள்" இப்படியாக ராகத் தொடர் நிறைவுபெற்றது.

இந்த ஏழு கதைகளும், ராகங்கள் என்ற வகையில் தொடர்பு பட்டனவே தவிர , உள்ளடக்கத் தொடர் கொண்டனவாக இருக்கவில்லை. ஆயினும் எழுத்தாளர் மத்தியில் ஆவலையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

அடைவு :

சமூக நோக்கத்தை உள்ளடக்கமாக்கி சிறுகதைகள் படைக்க வைத்து, ஒரு சுற்று வட்டத்துக் குள்ளிருந்து அவர்களை வெளியே உலாவவிட்டு, தமிழ் இலக்கியத்தில் இன்னொரு கலாசாரப் பின்புலத்தை சங்கமிக்கவைத்து, குறித்த படைப்பாளிகளை இலங்கைத்தமிழ் இலக்கியத்தில் உரிய இடத்தை அடைய வழிவகுத்த இன்ஸானின் பணி மகத்தானதே.

***

மறுமலர்ச்சிச் சிறுகதைகள், கலைச்செல்வி சிறுகதைகள், மல்லிகைச் சிறுகதைகள், ஜீவநதி சிறுகதைகள் இப்படியாகப் பல தொகுப்புக்கள் வெளிவந்துள்ளதை நாமறிவோம்.இவ்வாறாக இன்ஸான் கதைகளும் தொகுப்பா வேண்டுமென்ற நெடுநாள் ஆவல் நிறைவேறும் நாள் விரைந்து வரவேண்டும். ●

## அரசியல் ஒலிகள்

ஒதுக்கிவைக்கப்பட்ட இரண்டு துருவங்களில் இருந்து
ஒலிகள் கவிழ்ந்து விழுகின்றன

சனநாயகத்தை சயனித்துக் கரைகின்றன

தேர்வுகள் இல்லாமல்
திரிகின்றன சில பூதங்கள்
துருவங்களில் தங்கிவிடுவதற்கு
தேங்கி வழிகின்றன.
சில தோரணங்களை கட்டுகின்றன.

ஏழரை தசாப்தங்களைக்கடந்த ஒரு பிரக்ஞை
மனதுக்குள் தேங்கி கசிகிறது

சமூக அரண்களுக்குள் புகுந்து
ஆட்டத்தை எழுப்பும்
ஆதி அதிகாரத்தின் ஒலிகள் அவை

ஒலிகளுக்குப்பின்
சோகக் குரல்கள்,
உயிர்ப்பழிகள்,
கண்ணீர்க் கதறல்கள்
இரத்தக்குறிப்புகள்
இன்னும்
மனித எழும்புகள் மண் ஓடுகள்

ஒலிகள் என்பன
நிறங்களில் குவிகின்றன.
துருவங்களுக்கிடையே தோணியில் தாவுகின்றன
ஒலிகள் வந்து கட்டியணைக்கின்றன
ஒலிகள் நிஸ்டையில் அமர்கின்றன.
மனிதர்களை கூவி அழைத்து
ஏமாற்றத்தை ஏற்றிவிடுகின்றன.

அந்த புராண ஒலிகளை நம்புதல்
இனிக்கிடையாது
அவை அநாதையாக இருக்கட்டும்

**- எல். வஸீம் அக்ரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.சு.முரளிதரன்

# ஊழியின் முத்தமாய் "வெந்து தணிந்தது காடு"




ஈழசினிமாவை இன்னொரு கட்டத்திற்கு நகர்த்தும் தகுதி கொண்டதாக "வெந்து தணிந்தது காடு" திரைப்படிமம் அமைந்துள்ளது. போர்கால ஆவணப்பதிவு போல நகரும் படிமத்தை உருவாக்கியுள்ள மதிசுதா பாராட்டுக்குரியவர். கடந்த கால அனுபவத்தினை சிந்தாமற் சிதறாமல் அப்படியேதொற்றச் செய்துள்ளார். பறவைக் கோணத்தில் (Bird View) பதுங்கு குழியைக் காட்டுகின்ற முகிழ் காட்சியோடு தொடங்கி, அதே பறவைக் கோணக் காட்சியோடு திரைப்படம் நிறை வெய்துகின்றது. சுதந்திர வேட்கையின் குறியீடாகப் பறவைக் கோணத்தைக் கையாண்ட மேதமை வியக்க வைக்கிறது. பிறிதொரு ஆரம்பக் காட்சியும் குறியீடாகவே கொள்ளத்தக்கது. முதிய தாய் சூரியனை வழிபடுகின்றார். சூரியனின் கதிர்கள் அகன்று விரிந்து நிலத்திலே பதிந்துள்ளன. ஈழத்தமிழரின் தொழுகைக் குறிய தலைவரின் பெயரும் சூரியனோடு தொடர்பு பட்டதே! திரைப்படத்தின் இறுதித் தருணங்கள் இருள் கவிந்த காட்சிகளாய் வெளிப்படுகின்றன. எனவே இத் தொழுகைக் காட்சியும் ஈழத்தமிழினத்தைப் பொருத்த வரை இன்னொரு குறியீடாகவே கொள்ளத்தக்கது.

மிகக் குறுகிய பிரதேசமே கதைக்களமாக அமைவதோடு, பெரும்பான்மைக் காட்சிகள் பதுங்கி குழிக்குள்ளே தான் எடுக்கப்பட்டுள்ளன. திரைச் சுவைஞனின் விடுப்பார்வம் குறைந்து விடாத வகை யிலும், சலிப்பூட்டாத வகையிலும் அக்காட்சிகள் நகர்வது குறிப்பிடத்தக்கது. சின்னச்சின்ன முடிச்சுகள் கூட அதிர்வைத் தொற்றச் செய்யும் வகையிலே தான் அவிழ்க்கப்படுகின்றன.

இருண்மை நகைச்சுவையை (Dark Humour) உருவாக்க அதிகபட்ச நுண்ணறிவு அவசியமாகும். இத்தகைய நகைச்சுவையை உரிய வகையில் வெளிப் படுத்த முடியாமல் தென்னிந்தியத் திரைப்படங்கள் பல தடுமாறியுள்ளன. அண்மைய உதாரணமாக "பீஸ்ட்" திரைப் படத்தைக் குறிப்பிடலாம். ஆனால் "வெந்து தணிந்தது காடு" சரியான விதத்திலே இருண்மை நகைச்சுவையினை வெளிப்படுத்தி, திரைச்சுவைஞனை ஈர்த்துள்ளது. நகைச்சுவையாக ஆரம்பிக்கும் விடயம் தீவிரத்தன்மை யோடு முடிவதையும், தீவிரமாக ஆரம்பிக்கும் விடயம் நகைச்சுவையுள் அடக்கலாம். வறுமை, வன்முறை, மரணம் போன்ற தீவிரமான விடயங்கள் நகைப்பினை உண்டாக்கும் போது இருண்மை நகைச்சுவை என்கின்றோம். திரைப்படத்தின் இறுக்கத்திலிருந்து சற்றே தளர்த்த, இயக்குநர் இருண்மை நகைச்சுவையினை நுட்பமாகக் கையாண்டுள்ளார்.

அந்நிய ஆதிக்கம், போர், வறுமை போன்ற சூழலிலே தமிழ் மக்கள் அறத்திலிருந்து விலகியமை யினையும், அவர்களை நெறிப்படுத்த நீதி நூல்கள் தோன்றியமையினையும் வரலாறு இனங்காட்டுகின்றது. போர் நேர்மையிலிருந்து விலகும் விலைக்குமக்களைக் கொண்டு சென்று விடுவதைத் திரைப்படம் இனங் காட்டுகின்றது. திருட்டு இயல்பான செயற்பாடாக மாறுகின்றது. சினிமா என்பது காட்சிமொழி என்பதை உணர்ந்து வசனமாதலில் இருந்து தவிர்த்து, குறைவான வசனங்களை மிக நேர்த்தியோடு திரைப்படம் வெளிப்படுத்துகின்றது. மேலும் ஈழத்தமிழ் நெருடலற்ற உச்சரிப்போடு, சினிமாவிற்குப் பொருந்தும் வகையில் அமைந்துள்ளது. மிகையற்ற, நடப்பியல் வலிமை மிக்க பாத்திர ஆற்றுகையும் குறிப்பிடத்தக்கது.

தமிழினத்தின் குறியீடாகவே முதிய தாய் கதா பாத்திரம் அமைகின்றது. பார்வதி சிவபாதம் பாராட்டத் தக்க அளிக்கையினை நிகழ்த்தியுள்ளார். இறுதிக் காட்சியில் அனைத்து உறவுகளையும், உடைமைகளை யும் இழந்த தனிமையில் மரணத்திடம் மண்டியிடுகின்ற வேளையில், மரணமும் மறுதலிக்கிறது. ஒரு இனத்தின் சோகத்தை இதை விட அழுத்தமாகச் சொல்லி விட முடியுமா? ஈழப்போர் மக்கள் மயப்பட்டிருந்தமையினை யும் இயக்குநர் பதிவு செய்யத் தவறவில்லை. பின்னணி இசையானது திரைப்படத்தை உச்சத்திற்கு எடுத்துச் செல்கிறது. எறிகணை வெடிப்பு ஒலியின் போது, கதா பாத்திரங்களோடு பார்வையாளனும் அதிர்வுக்குள்ளா கின்றான்.

கைபேசியில் (I phone 8) இத்திரைப்படத்தினை ஒளிப்பதிவு செய்துள்ளமை வியப்பிற்குரிய விடய மாகும். கருச்சிதைவுக் காட்சியானது, பிறிதொரு காட்சி யோடு இணையும் போது கிடைத்த நுகர்ச்சி அனுபவம் மாறுபட்ட வகையிலே அமைந்திருந்தது. திரைப் படத்தில் சிறு குறைகளும் ஆங்காங்கே தென்படுகின்றன. பனையோலையைக் கொண்டு "ஓடுகரம்" போடுதல் (ஓலைகளின் எண்ணிக்கை திணிப்புக்காட்சி என்பதைத் தெளிவு படுத்துகிறது) பதுங்குகுழிகள் இடம் பெறும் கடவுளர் படம் என்பன களநிலை இயல்புக்கு ஒவ்வாத வகையில் அமைகின்றன. வைதரணி நதிக்கரை வாழ்வினை அனுபவித்தவர்களுக்கு, இத்திரைப்படம் வெகு நெருக்கமாகவே காணப்படும். மதிசுதா அடுத்த கட்டப் பாய்ச்சலினை நிகழ்த்த வேண்டுமென்ற மீவேட்கையோடு நிறைவு செய்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்



# பிள்ளைகள் சாப்பிடுங்கள்



என்னுடைய பால்ய சினேகிதன் கெங்காதரன் ஓமானிலிருந்து வந்து மூன்று நாட்களாகி விட்டதாம். என்னிடம் வந்தவர்கள் சொன்னார்கள். நான் பன்னிரண்டு நாட்களாக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தமையை அறிந்தால் தாமதிக்காமல் என்னைப் பார்க்க எப்படியும் வந்து விடுவான்.

கங்காதரன் பால்ய சினேகிதன் என்றாலும் அவனுடைய குணாம்சங்கள் பற்றிச் சொல்லாமலிருக்க முடியவில்லை. நாங்கள் எப்படி நையாண்டி பண்ணினாலும் அவன் மாறப்போறதில்லை. "எச்சிற்கையால் காகம் துரத்தாத"... என்பது அவனுக்குத்தான் நூறு வீதம் பொருத்தமானது.

நாங்கள் இளைஞர்களாக இருந்த காலத்தில் சினிமாப் படம் பார்க்க ஐந்தாறுபேர் யாழ்ப்பாணப் பட்டணத்திற்கு பஸ்ஸில் ஏறினால், கொண்டக்டர் பஸ்ஸின் பிற்பகுதியில் நின்றால் கெங்காதரன் முன்னுக்குப் போய் விடுவான். கொண்டக்டர் முன்பகுதியில் நின்றால் கொண்டக்டர் எப்படிக் கத்தினாலும் அசைய மாட்டான். எங்களில் ஒருவன் எல்லோருக்குமாக ரிக்கற் எடுத்ததன் பின்னர் தான் எங்களோடு வந்து சேர்ந்து கொள்வான்.

சாப்பாட்டுக் கடையினுள் நுழைந்தாலும் ஒன்றில் விரைவாகச் சாப்பிட்டுவிட்டு வெளியில் வந்து நிற்பான். அல்லது யாராவது பணம் கொடுக்கும் வரையும் மிகமிக ஆறுதலாகச் சாப்பிடுவான். கைத் தொலைபேசி நடைமுறைக்கு வந்த பின்னர் முக்கியமான அலுவல் பேசுவது போல் பேசிக் கொண்டே கடையை விட்டு வெளியேறுவான். எங்களுடைய ஏனைய பார்வையெல்லாம் கெங்கா தரனுக்கு ஒரு பொருட்டேயல்ல.

போனமுறை ஓமானிலிருந்து விடுமுறையில் அவன் வந்து நின்றபோது ஒரு திருமண வைபவத்திற்கு போயிருந்தோம். ஒரு பெண்பிள்ளை பூந்தி லட்டுகளை ஒரு கூடையில் வைத்துக் கொடுத்துக் கொண்டு வந்தாள். கெங்காதரனுக்குக் கிட்ட வந்ததும் ஒரு கையால் நான்கு லட்டுகளை "லபக்" என்று எடுத்து ஜீன்ஸ் பொக்கற்றுக்குள் திணித்தான். நான் அருவருப்பாகப் பார்த்தேன்.

"பிள்ளைகளுக்குக் கொண்டு போய்க் கொடுத்தால் ஆசையாகச் சாப்பிடுங்கள்" என்றான். கிழிஞ்சுது போ...

இன்று நான் எதிர்பார்த்தது போலவே கெங்காதரன் கேற்றைத் திறந்து கொண்டு வருகிறான். முன்னைய தடவைகள் போலவே இரண்டு கைகளையும் விசுக்கிக் கொண்டு வெறுமனே வருகிறான். உட்காரச் சொன்னேன். சேமநலங்கள் பற்றி வழமையான உரையாடல்கள் தொடர்ந்தன.

இடையில் நான் உள்ளே போய் கெங்காதரன் வந்திருப்பதை என் இல்லக்கிழத்திக்குத் தெரிவித்து தேனீர் கொண்டுவரும் படியும் வேண்டிக் கொண்டேன். அவள் அலட்சியமாக மூக்கைச் சிமிட்டினாள். டோகா கட்டாரிலிருந்து வந்த எனது இன்னொரு நண்பன் சற்று முன்னர்தான் கொண்டு வந்த விலையுயர்ந்த சின்னச் சின்ன சொக்கிளேற்றுகள் மேசையில் இருக்கின்றமை என் கண்ணில் பட்டு விட்டது. அவை எல்லாவற்றையும் ஒரு தட்டில் கொட்டி வெளியே கொண்டுவர ஆயத்தமானேன். என் மூத்தவள் ஓடி வந்தாள்.

"அப்பா! அவர் வெளிநாட்டிலையிருந்து வந்தவர் ஒரு பிஸ்கற் பெட்டி கூட இங்கை கொண்டு வரேல்ல. இந்தச் சொக்கிலேற்றிலை நானோ தங்கைச்சியளோ ஒன்று கூட இன்னும் எடுத்துச் சாப்பிடேல்ல. இதுகளை ஏன் அவருக்குக் கொண்டு போறியள்?"

"பிள்ளை... அவன் ஒன்று அல்லது இரண்டு எடுத்தானில்லை... உன்னைப் போல ஒரு நண்பன் தான் இவ்வளவு சொக்கிளேற்றுகளையும் எங்களை மதிச்சுக் கொண்டு வந்திருக்கிறான் எண்டு அவனுக்குத் தெரிய வேணுமெண்டு தான் இதுகளை எடுத்துக் கொண்டு போறன்..."

கூறிக் கொண்டே வெளியே கொண்டு போய் கெங்காதரனுக்கு முன் வைத்துவிட்டு மோகனும் சவுதியிலிருந்து வந்து நிற்கிறான். அவன்தான் கொண்டு வந்தான். சாப்பிடு மச்சான் என்றேன்.

இரண்டை எடுத்துச் சாப்பிட்டான். ரீயும் குடித்தாயிற்று கொஞ்சநேரம் இருந்து கதைத்தோம். அதற்கிடையில் உள்ளே தொலைபேசி அழைப்புவர போய் பேசிவிட்டு வந்தேன். கெங்காதரன் புறப்படுவதற்குத் தயாராக எழுந்து நின்றான்.

தீடிரென தட்டிலிருந்த சொக்கிளேற்றுகள் அத்தனையையும் அப்படியே வழித்து அள்ளித் தன் காற்சட்டைப் பைக்கற்றுக்குள் திணித்தான். நான் அவனைப் பார்த்தேன்.

"கொண்டு போய்ப் பிள்ளைகளுக்குக் கொடுத்தால் சந்தோஷமாகச் சாப்பிடுங்கள்" சொல்லிக் கொண்டு புறப்பட்டான். நான் வீட்டுக்குள்ளே போக நடக்கவிருப்பதை யோசித்துக் கொண்டு நின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடற்படை கொமாண்டர் அஜித் போயகொடவின் "நீண்ட காத்திருப்பு"

விடுதலைப் புலிகளினால் போர்க் கைதியாக 1994ம் ஆண்டு சிறைப் பிடிக்கப்பட்டு 2002ம் ஆண்டு விடுதலையாகும் வரையான எட்டு வருட காலங்களின் சிறை அனுபவத்தினை முன்னாள் இலங்கைக் கடற் படை அதிகாரியான கொமாண்டர் அஜித் போயகொட "நீண்ட காத்திருப்பு" எனும் நூலுருவில் வெளியிட்டுள் ளார். இவர் சொல்ல அரங்கியலாளர் சுனிலா கலப்பதி எழுதியதை தமிழில் தேவா மொழிபெயர்த்துள்ளார். இந்த நூல் உருவாகுவதற்கு அவரது சிறை அனுபவங் கள் தூண்டியதைவிட விடுதலையின் பின் அவர் எதிர்நோக்கிய அவமானங்களும் கசப்புணர்வுகளுமே முக்கிய காரணமாக அமைந்துள்ளதென நூலைப் படித்து முடிக்கின்றபோது துல்லியமாக உணர முடிகின்றது.

சிங்கள இனவாத அரசின் கட்டளைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் படைத்துறையின் ஒரு அதிகாரி. புலிகளால் கைதுசெய்யப்படும்போது இருபது வருட சேவையை நிறைவு செய்யும் ஒரு மூத்த அதிகாரி, புலிகளின் சிறை அனுபவத்தை எவ்வாறு விபரிப்பார்? 2016ம் ஆண்டு ஆங்கிலத்தில் வெளிவந்த நூல் 2020ம் ஆண்டு தமிழில் வெளிவருவதன் நோக்கம் என்ன? நெருக்கமாக பார்த்திராத, அறிந்திராத பல்வேறு தகவல்கள் பொதிந்து காணப்படுமா போன்ற பல விடயங்கள் ஆவலைத்தூண்ட இரு இரவுகளில் நூலை வாசித்து முடிக்க முடிந்தது. ஆரம்பத்தில் அமெரிக்கரான ஜான் பெர்கின்ஸ் எழுதிய ஒரு பொருளாதார அடியாளின் வாக்குமூலம் என்ற நூல் ஞாபகத்திற்கு வந்தது. இவரும் ஓய்வுபெற்றபின் தனது மனச்சாட்சியின் உறுத்துதலின் வெளிப்பாடாக கொட்டித்தீர்க்க முனைகின்றாரா என யோசித்தபோதும் பக்கங்கள் கரைய அவ்வாறும் இல்லையெனத் தெரிகின்றது.

ஈழ விடுதலைப் போர் ஆரம்பிக்காத காலங் களில் தனது இருபது வயதில் இலங்கைக் கடற்படையில் இணைந்தபோது தனது பணியை நேசித்த இவரால் தமிழர் மீது யுத்தம் முனைப்புப்பெறும் போது மனதள வில் அதனை ஏற்றுக்கொண்டும் பயணித்துள்ளார் என்பதனை மறுப்பதற்கில்லை ஆயினும் எட்டு வருட சிறை வாழ்க்கையில் புலிகளுடனும் தமிழர் தாயகத்தில் பல்வேறு சிறைகளில் வாழ்ந்ததாலும் தமிழரின் அரசியல் விருப்பினை ஓரளவேனும் புரிந்துகொண்டவராகவும் அதற்கு தனது நிலைப்பாடாக சமஸ்டி தீர்வினை குறிப்பிடும் இவர் எல்லா சிங்கள பேரினவாத சமூகமும் நினைப்பது போன்று ஆயுதப் போராட்டம் தவறென்றே குறிப்பிடுகின்றார். ஒரு கைதியாக இருந்தும் புலிகளின் உயர் நிலைப் பொறுப்பாளர்களுடன் சினேகபூர்வ உறவினை வைத்துள்ளமையும் அரசியல் பற்றி பேசுவதனையும் பதிவு செய்துள்ளார்.



மிகவும் கவனமாக தனது எழுத்துக்களை நகர்த்தியுள்ளார். சொல்லப்படும் விடயங்கள் யுத்தக் குற்றங்களுக்கான ஆதாரங்களாக அமைந்துவிடக் கூடாதென்பதிலும் சிங்களவர்கள் மத்தியில் தேசத் துரோகி எனும் பெயர் உருவாகுவதை தவிர்ப்பதிலும் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளார். கிளாலி படு கொலைகள் நடைபெறுகின்ற காலங்களில் புலிகளின் கைதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோது முழுத்தகவல்கள் தெரிந்தும் நடைபெற்ற படுகொலை கள் பற்றி பேசப்படவில்லை. காரைநகர் கடற்படைத் தளத்தின் இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெற்ற பொருள்சேதம் பற்றி பேசப்படும் இந்நூல் அந்த நடவடிக்கைகளால் படுகொலை செய்யப்பட்டவர்களையும் காணாமல் ஆக்கப்பட்டவர் களையும் பற்றி பேசவில்லை. இந்த இராணுவ நடவடிக்கை மூலம் காரைநகர் நிலப்பரப்பை கடற்படை யும் இராணுவ மும் கைப்பற்றிய பின்னர் அந்த நடவடிக்கையில் பங்குபற்றிய ஒரு அதிகாரியாக இவ்வாறு குறிப்பிடு கின்றார் "இராணுவத்தின் மனோ நிலை என்ன என்பதை நான் பார்த்தேன். கண்ணில் பட்டதையெல்லாம் நிர்மூலமாக்கி இருக்கின்றார்கள். அலுமாரிகள் திறக்கப்பட்டு உடைகள் இழுத்தெறியப் பட்டிருந்தன குடும்ப படங்கள் தரையில் வீசி உடைக்கப்பட்டிருந்தன. தங்க நகைகள், துவிச்சக்கர வண்டிகள் என பெறுமதி யான பொருட்கள் அனைத்தும் களவெடுக்கப்பட்டன. குடும்ப படங்களை யுத்த வெற்றிச் சின்னங்களாக படையினர் தம்முடன் எடுத்துச் சென்றனர்" எனவும் எழுதியுள்ளார். பல விடயங்களை குறிப்பிடும் இவர் யுத்த நடவடிக்கைகளைப் பற்றியோ கடற்படையின் மனிதாபிமானமற்ற செயல்கள் பற்றியோ பெரிதாக ஒன்றும் எழுதப்படவில்லை என்பது ஏமாற்றம் தான் ஆனாலும் தனது உள்ளக்கிடக்கையில் உழன்று தவித்த உணர்வுகளைக் கொட்டித்தீர்த்துள்ளார்.

இலங்கை அரசும் கடற்படையும் தனது விடு தலைக்கு ஆர்வம் காட்டவில்லையென்பதை வேதனை யுடன் பதிவிடுகின்றார். புலிகளால் சிறைப்பிடிக்கப்படும் படையினரை விடுவிக்கும் விருப்பு அரசுக்கு இருப்ப தில்லை என்ற செய்தியை தனது நூலில் தெளிவாக சொல்லியுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது. தனது விடுதலைக்கு ஆதரவாக விடுதலைப்புலிகளே இருந் திருக்கின்றார்கள் என்று விரிவாகச் சொல்லும் கொமாண்டர் அஜித் போயகொட 2002ம் ஆண்டு விடு தலையின் பின்னர் 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அழிவின்போது நிவாரணப்பணிக்காக வன்னி சென்ற போது சிறைக் காலங்களில் தான் பழகிய புலிகளைச் சந்திப்பதில் ஆர்வம் கொண்டுள்ளார். சசிகுமார் மாஸ்டர், நியூட்டன், தயா மாஸ்டர், ஜோர்ச் அங்கிள், சுதா மாஸ்டர் மற்றும் பலரை மகிழ்வுடன் சந்தித்தமையை பதிவு செய் துள்ளார். 2009ம் ஆண்டில் இவர்களுக்கு என்ன நடந் திருக்கு மென்பதில் கவலையையும் வெளிப்படுத்தி யுள்ளார். நூலை வாசித்து முடித்த போது பெரும் பான்மை இனத்தின் யதார்த்த நிலையை ஒரு கேள்வியிலும் ஒரு பதிலிலும் புரியவைத்துள்ளமை தெரிந்தது. சிறை யிலிருந்து மீண்டதும் எல்லோரும் அவரிடம் கேட்கப்பட்ட ஒரேயொரு கேள்வி - புலிகள் உங்களை எப்படி நடத்தினார்கள்? அவரது ஒரே பதில் - மிகவும் நன்றாக நடத்தினார்கள். ஆனால் அவர்களால் அந்த பதிலை ஏற்றுக்கொள்ள முடியவில்லை....

நூலை வாசிக்கும்போது அது எமக்கும் புரியும், வாசித்துப் பாருங்கள்... •

## பொல்லாத காலம்!

பல தசாப்த மௌனம் அன்று கலைக்கப்பட்டது
பல்லாண்டு ஏக்கம் அன்று தணிக்கப்பட்டது.

பள்ளிக்காலத்து வகுப்பறை மாணவி அவள்
பதின்ம வயதுக் கவர்ச்சிப்புயலில்
சிக்கிக்கொண்டோம் நாமிருவரும்.

பார்த்தும் பார்க்காமல் கேட்டும் கேட்காமல்
நகர்ந்தும் நழுவியும் நாட்கள் கடந்தன.

ஓராயிரம் வார்த்தைகள் பேச வாய்ப்பிருந்தும்
ஒரு வார்த்தைகூட பேசவிடவில்லை வெட்கம்!

துள்ளித்திரிந்த
பள்ளி வாழ்க்கை முடிவுற்றது.

அவள் நினைவுகளை
மௌனமாய் அடைகாத்து சோர்ந்து போனேன்.

துரத்தும் கனவுகளோடு ஓடிக்கொண்டிருந்தேன்.
நட்சத்திரங்கள் பூத்துக்கிடந்த இரவுகள்கூட
இனிக்கவில்லை எனக்கு.

"அவள் எங்கோ....! நான் எங்கோ.....!"
என்று ஆகிப்போனது வாழ்க்கை

போர்தின்ற பூமியாய்
கலைந்து கிடந்தன நினைவுகள்

ஏகாந்தம் குடியிருக்கும் மயானமாய்
உறங்கிக் கிடந்தது உள்ளம்

கனவு வாழ்க்கை
காத்திருப்பு வாழ்க்கையானது!

வசந்தம் கருகி
தனல்பூத்துக் கிடந்த என் உள்ளத்தில்
பொழிந்தது ஒருநாள் பெருமழை!

நாற்பது ஆண்டு வனவாசத்தின்பின்
கண்டேன் கண்டேன் அந்தச் சீதையை

பல தசாப்த மௌனம் அன்று கலைக்கப்பட்டது
பல்லாண்டு ஏக்கம் அன்று தணிக்கப்பட்டது.

கண்குளிரக் கண்டேன்
வாய்நிறையப் பேசினேன்

பள்ளிநாட்களை இரைமீட்டினோம்.
"நீ ஏன் கதைக்கவில்லை?" என்றாள் அவள்
"நீ ஏன் கதைக்கவில்லை"? என்றேன் நான்
காலம் எத்துணை பொல்லாதது!
கனவுகளைத் தின்றுவிட்டு
ஏமாற்றங்களைப் பிச்சை போடுகின்றது!


- தமிழ் நேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவமூலம்

ஏ.எஸ்.சற்குணராஜா



தக்கனின் யாக குண்டத்தில் வீழ்ந்த ஸதி இன்னொரு தீயாக ,ஒளிச்சுவாலையாக ஹிமபத்கிரியில் வீழ்ந்து ஒளிர்ந்து ஈசனின் மேலுள்ள எல்லையற்ற அன்பினால் மறுபிறவி எடுத்து கொண்டாள். பூலோகத்தில் பார்வதியாக ஜனனமாகி நின்றாள்.

மலையரசன் இமவானுக்கும் மேனைக்கும் மகளாக பிறந்த பார்வதி பருவ வயதை அடைந்திருந் தாள். இப்போது பார்வையை ஈசன் பக்கமும் திருப்பியும் இருந்தாள். கைலாசம் சென்று ஈசனுடன் கலக்க நினைத்தாலும், கண்டு கொள்ளாத ஈசனுடைய செயல் நினைத்துக் கவலை கொண்டாள். மீண்டும் தந்தை மலையரசனின் இராச்சியத்தில் வந்து நின்றாள். மற்றோருக்கு கவலையை எடுத்து சொல்ல மனம் இல்லாததால் பெற்றோருக்கு சொல்வதையும் தவிர்த்து கொண்டாள். சிலவேளை அவர்கள் மனம் வருந்தவும் கூடும். மறுத்துவிடவும் கூடும். அவர்களிடம் இருந்து வரும் கருத்துக்கள் கவலை தரவும் கூடும்.

சிந்தனைகளை ஒரு நிலைப்படுத்த முடியாமல் பார்வதி தவித்துக் கொண்டு இருந்தாள். அனலில் இட்ட மெழுகாக தகித்து கொண்டிருந்தாள்.

இமவானின் இராச்சியத்திற்கு நாரதரின் வருகை நாளொன்றில் நிகழ்ந்தது. இந்நிகழ்வு பார்வதிக்கும் பதில் ஒன்றைத் தந்தது.

"பார்வதி பரமசிவனை குறித்து கடும்தவம் ஒன்று புரிந்து விடு, பரமனில் பாதியாய் உலக அன்னையாய் ஆகி விடு. வரமது கேட்டே அய்யனின் கரமதைப் பற்று.."

"நாராயணா!..." நாரதர் மறைந்து விடுகிறார்.

தவமது நிகழ்த்த பார்வதி தன்னை தயார் செய்து கொண்டிருந்தாள். இமவான் சம்மதித்தாலும், தாய் மேனை தடுக்க முயலவே அதனையும் மீறி தபோவனம் ஒன்றில் தவத்தில் ஆழ்ந்து விடுகிறாள். உடல் நொய்ந்து நூலாகி விடுகின்றாள். கடுந்தவம் கண்டு தேவர்கள் பதறினர். அன்னையின் ஆவி பிரிந்துவிடுமோ எனப் பயந்தனர். ஓடிச்சென்று மகாதேவனிடம் விடயத்தைப் பகர்ந்தனர். விடைதேட முயன்றனர்.

அவள் கரம் பற்றுவதாய் தேவர்களைக் களிப்பூட்டி அனுப்பி விட்டு, கிழப் பிராமணராய் மாறி வெண்ணிறத் தாடியுடன் தள்ளாடியபடி பார்வதியின் தபோவனம் ஏகினார் பரமசிவன்.

கிழப் பிராமணருக்கு பணிவிடை புரிந்து கனிவுடன் மொழிந்து, கடமையில் சிறந்து நின்றிட்டாள். பரமசிவன் பற்றிய கனவினை மறக்க மொழிந்த அப்பிராமணரைக் கடிந்து கொண்டாள், மனதால் ஒடிந்தும் போனாள். பார்வதியின் உறுதியில் பரமனும் மகிழ்ந்து வரமதை ஈந்து, தரிசனமும் கொடுத்தார். பரம சிவன் தரிசனத்தால் உளத்தில் குதூகலம் கொப்பளித்த பார்வதி முகில் போன்ற கருங்கூந்தல் காற்றில் அசைய தன்மனை நோக்கி நடந்து கொண்டிருந்தாள், வழியில் பூத்திருந்த பூக்களை வாரி அணைத்துக்கொண்டே வாசனையை நுகர்ந்து கொண்டாள். பாதை காட்டிய பட்டாம் பூச்சிகளுக்குப் பின்னால் தொடர்ந்து கொண்டிருந்த அப்பெண்மனம் ஈசனது நினைவில் இறக்கை கட்டிப் பறந்து கொண்டிருந்தது.

பார்வதியின் பேரன்பில் திளைத்த ஈசனும், பார்வதியின் பெற்றோரான இமவானிடமும், மேனை யிடமும் சப்த ரிஷிகளுக்கு தரகர் பாத்திரம் அளித்தே பெண் கேட்டு அனுப்பி விடுகின்றார். பார்வதியின் தந்தை இமவான் மகிழ்ந்து கொண்டாலும், தாயார் மேனையோ தடுத்திட முயன்றிட, தேவலோகத்து அருந்ததி வந்து அவளையும் தேற்றி நாளும் குறித்து நகர்ந்து விடுகின்றாள்.

மலையரசன் இமவான் பட்டணம் அலங்கரிக் கப்பட்டு. திருமண ஏற்பாடுகளால் களை கட்டத் தொடங்கி யிருந்தது. பார்வதி மனதால் மகிழ்ச்சி வெள்ளத்தில் நீராடிக் கொண்டிருந்தாள். நெகிழ்ச்சியான மனதுடன் ஈசன் நினைவுகளைச் சுமந்து கொண்டிருந்தாள்.

கைலாசமும்கூட களை கட்டியிருந்தது. அதன் குதூகலம் பனிபடர்ந்த கைலாசத்தின் பக்கமிருந்த ஏனைய மலைச்சிகரங்களிலும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. கைலாசப் பனியின் மேனியில் கூட போடப்பட்ட பந்தல்கள் வானத்து நட்சத்திரங்களைக் கொண்டுவந்து ஒளியூட்டிய அலங்காரங்களுடன் கண்களைக் கவர்ந்து நிற்க, தேவர்கள், கந்தர்வர்கள், அப்சராக்கள் அனைவரும் ஐயனின் திருமணத்திற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்குகளில் இறங்கி இருந்தனர். திருமண நாளில் புலித்தோல், கழுத்திலிருந்த கபாலங்களைக் கழற்றி வீசிவிட்டு ஈசனுக்கு ஷம்பூ போட்டு முழுக்காட்டி, சோப்புப் போட்டு சுடலைச் சாம்பலைக் கழுவி மாப் பிள்ளைக் கோலத்திற்கு மாற்றிக் கொள்கிறார்கள். கண் கவர் மாப்பிளையாக தேகமெங்கும் ஒளிவீச மிடுக்குடன் இரு கொம்புகளையும் கெட்டியாகப் பிடித்து அய்யனும் ரிஷப வாகனத்தில் ஏறிக் கொள்கிறார். வாத்தியங்கள் முழங்கின. ஆதிசேசன் சங்கினை ஊத, வாயுதேவன் ஆலவட்டம் பிடிக்க, அக்கினி தேவன் தூபம் இட, குபேரன் நவநிதிகளை வீதியில் இறைக்க , நாகராஜனோ நாகரத்தினத்தை ஏந்த, புண்ணிய நதிகள் சாமரம் வீச, குண்டோதரனோ குடை பிடிக்க , நந்தி தேவர் வருகை தந்தவர்களை வழி நடத்த சிவனோ ரிஷபத்தில் சிவகணங்கள் புடை சூழ புறப்பட்டு விடுகின்றார்.

பர்வதராஜன் இமவானும் பரமனை வரவேற்க அரண்மனையை தகுந்த முறையில் தயார் படுத்திக் கொண்டிருக்கின்றார். சிறப்பான வரவேற்பு, நிறைவான உபசாரம் பரமசிவனுக்கு வழங்கிட சிந்தை கொண்ட தால் சிரத்தையுடன் செயல்பட்டுக் கொண்டிருந்தார். மேனையோ மருமகனைப் பார்த்துவிடும் ஆவலில் உப்பரிகையின் உச்சியில் உறைந்து கொண்டிருந்தாள். அருகில் நின்ற நாரதர் ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்து கொண்டிருந்தார். முன் அணியில் கந்தர்வராஜன் வந்து கொண்டிருந்தான். அவன் அழகும் அலங்காரமும் கண்ணை பறிக்க மேனையோ நாரதரிடம்

"இவரா என் மருமகன்..."

"இல்லை மேனை இவன் ஈசன் சந்நிதியில் பாடுபவன், கந்தர்வராஜன்.."

"ஈசன் சந்நிதியில் பாடுபவரே இப்படி என்றால் என் மருமகன் எப்படி இருப்பார்? .. கற்பனை செய்யவே முடியவில்லை நாரதரே !."

அடுத்து குபேரன் வந்து கொண்டிருந்தான். அவனிலும் அவனை சார்ந்தோரிலும் செல்வக்களை வீசிக்கொண்டிருந்தது.

"இவரா என் மருமகன்?.."

"இல்லை மேனை, இவர் உலகத்திற்கு செல்வம் அளிக்க ஈசனால் தோற்றுவிக்கப்பட்டவர்.."

அடுத்து கண்ணை பறிக்கும் பிரகாசத்துடன் கிரீடம் அணிந்து ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் வந்தவரை பார்த்து மேனையும்,

"இவரா என் மருமகன்?.."

"இல்லை மேனை உலகத்திற்கு ஒளி கொடுப்ப தற்காக ஈசனால் தோற்றுவிக்கப்பட்ட சூரியன்.."

அடுத்து சந்திரன், அதனை அடுத்து நான்முகன், அதனை அடுத்து விஸ்ணு ஆகியோர் வந்து கொண்டிருந்தனர். அவர்களுடன் பெருமளவானோர் சேர்ந்து வந்து கொண்டிருக்க ஆவல் மிகுதியால்

"இவரா என் மருமகன்?.." என மேனை ஒவ்வொருதரையும் காட்டி நாரதரிடம் கேட்டுக் கொண்டிருந்தார் நாரதரோ

"ஈசன் இவர்களில் எல்லாம் மேம்பட்டவர், அவர் இறுதியாக தான் வந்து கொண்டிருப்பார்."

அப்படி நாரதர் சொல்லிக் கொண்டிருக்கும் போது நீண்ட வளைந்த கொம்புகளைக் கொண்ட திமில் பெருத்த காளை மாட்டின் மீது பெரிய கூட்டம் ஏதும் இல்லாமல் சில முனிவர்கள் வேத மந்திரம் ஓத, ஐந்து முகங்கள், பத்து கரங்கள் கொண்ட ஒருவராக பரட்டை யாகி தும்பில் திரித்த கயிறுபோல் தொங்கும் ஜடையிலிருந்து கங்காதேவி சிந்திக்கொண்டிருக்க, இடுப்பிலே புலித்தோலும் ,சாம்பலில் புரண்டெழுந்தது போன்ற உடலுடன், கழுத்திலே கபால மாலையுடன், புடலங்காய் போல் சர்ப்பங்கள் தொங்க, சிரசில் பிறைச் சந்திரன் சரிந்த நிலையில் கூரான கொம்புபோல் நிற்க, கைகளில் ஆயுதங்களுடன் ஈசன் வந்து கொண்டிருந்தார். ஒரு கையில் தாங்கிய உடுக்கையையும், தலையால் வடியும் கங்கையையும் அவதானித்த மேனையோ இது என்ன குடுகுடுப்பைக்காரன் மாதிரி ஒருவர் குளித்து முழுகிய தலையைக்கூடத் துவட்டாமல் நீர் சிந்தியபடி என்று நினைக்கையிலே அவரோ கறையேறிய பற்களை காட்டியபடி அங்குள்ளவர்களைப் பார்த்துக் கையசைத்துப் புன்னகை புரிந்து வந்து கொண்டிருந்தார்.

"இதோ உங்கள் மருமகன் வந்து கொண்டு இருக்கிறார்." என்று நாரதர் சுட்டிக் காட்டியவரை ஆண்டிக் கோலத்தில் நெற்றிக் கண்ணுடனான அவரின் தோற்றத் தைக் கண்டதும் என்ன கைலாசப் பனியில் கால் சறுக்கி விழுந்து பிளந்த நெற்றிக்கு மருந்து போடாமல் மண வறைக்கு வாறாரே , கங்கை வந்து கண் அமர ,நீர் முட்ட கற்பனை சுக்குநூறாக உடைய, மேனைக்கோ மூச்சு நின்று விட்டது. அவ்வளவுதான் முகத்தை மூடி "ஓ.." என அழத் தொடங்கி விட்டாள். ஈசனின் தலையால் வழியும் கங்கை இப்போ மேனையின் கண்களுக்கு இடம் மாறியிருந்தது.

"என்ன நாரதரே ஈசனை மணப்பதால் எங்கள் குடும்ப கௌரவம் உயரும், எமது புகழ் கொடி கட்டி பறக்கும் என்றீரே! பார்த்தால் எங்களது மானந்தான் காற்றோடு பறக்கும்போல் தெரிகிறதே. பரதேசி கோலத் தில் இருக்கும் இந்த ஆண்டியை என் மகள் மணப்பதால் புகழுக்கு பதிலாக எமது இராச்சிய மக்களின் இகழ்ச்சியை தான் சந்திக்க வருமே." மேனைக்கு பூமியைவிட வேகமாய் தலை சுற்றுவது போலிருந்தது.

இதை அறிந்து ஓடோடிவந்து தாங்கிப் பிடித்த இமவான் மேனையைத் தேற்றினார். ஈசனை போற்றினார். வழிந்த கண்ணீரை வழித்தெறிந்து துடைத்துக் கொண்டே ரிஷிகளை அழைத்தார்.

"ஈசனின் யாவரிலும் மேம்பட்ட சிறப்பினை விளக்குங்கள். மேனையின் சந்தேகங்களை தீர்த்து விடுங்கள்."

தவமிருந்து மெலிந்த தேகத்துடனும், உச்சித் கொண்டையுடனும் அங்கு வந்த ரிஷிகள்.

"மேனையே ஈசனின் ஆத்ம சொரூபத்தை ஞானக்கண் கொண்டு தான் காண முடியும். இதோ அவர் பற்றிய கதையை எங்கள் ஞானத்தால் உணர்ந்து திருவாயால் கூறுகிறோம் சிரத்தையுடன் கேட்பாயாக.."

கண்ணை மூடியவர்கள், தங்கள் ஞானக் கண்ணால் அகக் காட்சியைத் தரிசித்தவாறே நேர்முக வர்ணனை போலக் கூறத்தொடங்கினர்.. அவர்களுக்கே புல்லரிக்க அனைவரும் சிலிர்த்துக் கொண்டனர்.

"ஞானிகள் ஞானத்தை கண்ணாகக் கொண்டு உணர்ந்து மகிழும் பிரமம் அழிவற்றது. அது ஸ்தூலமும் அல்ல, சூக்சுமமும் அல்ல, அதுவோ எல்லா வகையான சத்தியத்தையும் அறிவையும் உடையது. அதற்கோர் இச்சை தோன்றவே பிரகிருதி என்னும் மாயாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றினாள். பூரணசந்திரன் போன்ற நிறைந்த அழகு கொண்ட முகமும், எட்டு கைகளும் கொண்டவளாய், அதில் நட்சத்திரங்கள் போல மினுமினுக்கும் நிறைந்த ஆபரணங்களுடன் காணப்பட்டாள். பிரம்மத்திட மிருந்து அவளுக்கோர் துணைவனும் தோன்றினான். இருவரும் தாங்கள் தோன்றிய காரணம் தெரியாது சிந்தையில் ஆழ்ந்திருக்க ஓர் அசரீரி ஒலித்தது".

"உங்கள் பிறப்பின் காரணத்தை தெரிந்து கொள்ள கடுந்தவம் செய்யுங்கள். அதன் மூலம் காரணத்தை அறிந்து கொள்ளுங்கள்."

இருவரும் நீண்ட காலம் நிஷ்டையில் இருந்தனர். ஒரு நாள் அவர்களின் தேகத்திலிருந்து ஜலப் பிரவாகம் ஊற்றெடுத்தது. எங்கும் நீர் மயமாகி விடவே விழிப்பு ஏற்பட்டது. மிகவும் களைப்படைந்த காரணத் தினால் ஜலத்தின் மேல் இருவரும் துயில் கொண்டனர். அவனே நாராயணன் எனவும் அவள் நாராயணனி எனவும் அழைக்கப்பட்டனர். பிரகிருதியிலிருந்து ஸத்வம், தாமஸம், ராஜஸம் எனும் மூன்று குணங்கள் தோன்றின. அவற்றிலிருந்து ஸப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் பஞ்ச தன்மாத்திரைகள் உருவாக, அவைகளிலிருந்து பஞ்ச பூதங்கள் பிறப்பெடுத்தன. பஞ்ச பூதங்களிலிருந்து கர்மேந்திரியங்களான வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் ஆகியவையும், ஞானேந்திரியங் களான மெய், வாய், கண், மூக்கு. செவி ஆகியவையும், அந்த கரணங்களான மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கும் உண்டாகின. இந்த இருபத்து நான்கு தத்துவங்களையும் சுவாதீனம் செய்து கொண்டு நாரா யணன் நீரில் தூங்கும் போது அவரது நாபியிலிருந்து அழகான நறுமணம் கொண்ட எண்ணற்ற இதழ்கள் கொண்ட கண்ணைப் பறிக்கும் தாமரைமலர் ஒன்று தோன்றியது. தாமரை மலரிலிருந்து நான்முகன் அவ தரித்துக்கொண்டார். மாயை காரணமாக பிரம்ம தேவருக்கு தான் யார்?.. எங்கிருந்து தோன்றினேன்? எதற்காக தோன்றினேன்? என்பது புரியாததால் தாமரை மலரின் காம்பு வழியாக இறங்க தொடங்கினார். கேள்விக்கு விடை தேடத் தொடங்கினார். காம்புமோ நீண்டு கொண்டு சென்றதால் களைப்படைந்து மூர்ச்சை யானார்."

அப்போது

"தவம் செய்வீர் தன்னை அறிவீர்" என அறிவித்தல் ஒன்று அசரீரியாய் கேட்டது.

பன்னிரண்டு வருட தவத்தின் முடிவில் ஒளி வெள்ளத்துடன் நாராயணனின் பிரசன்னம் நிகழ

"நீர் யார்?"

என்ற பிரம்மாவின் கேள்விக்கு பதிலிறுத்த நாராயணனோ "உலக சிருஷ்டியின் நிமித்தம் உன்னை நானே தோற்றுவித்தேன்."

"இதனை நான் நம்புவதற்கு இல்லை." என்ற பிரமனின் பதிலால் வாக்குவாதம் முற்றி சண்டையாக மாறிவிட்டது. அந்நேரம் கண்ணைப் பறிக்கும் பிரகாசத் துடன் விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையில் லிங்கம் ஒன்று தோன்றியது.

"எங்கள் இருவருக்கும் இடையில் மூன்றாவதாக இன்னும் ஒருவனா?" சுற்றி வந்து இருவருமே சிந்தித்தனர். ஒன்றும் புரியவில்லை.

நாராயணனும் "பிரம்மனே நீ அன்னமாக மாறி மேலே சென்று நுனியை அறிந்து வா, நான் பன்றியாக மாறி பாதாளம் சென்று அடியை அறிந்து வருகிறேன்." புறப்பட்டார்கள்.

இருவராலும் அடி நுனி காண முடியாததால் களைத்து போய் திரும்பி வந்தனர். இருவரும் லிங்கத்தை ஒரு மனதோடு பிரார்த்திக்க "ஓம்" என்னும் பிரணவத்தின் ஓசை ஒலிக்க தொடங்கியது. இருவரும் ஆச்சரியத்துடன் விழியை அகல விரிக்க ஐந்து முகத்தோடும் , பத்து கரத் தோடும் கம்பீரத்துடன் ஈசன் தோற்றமளித்தார். இரு வரும் அவரை யார் என விழிக்க புன்னகையுடன் ஈசனும்,

"உங்களை தோற்றுவித்த பிரம்மம் நானே! அண்டசராசரங்களும் என்னால் வருவிப்பு, பிராமினி தோன்றி பிரம்மனை அடைவாள். லக்சுமி தோன்றி விஸ்ணுவை அடைவாள்." அனேக வரங்கள் அளித்த ஐயன் அவசரமாக மறைந்துபோய் விட்டார்.

நான்முகன் தனது சிருஷ்டித்தலை ஆரம்பித்தார். அண்டத்தை முதலில் தோற்றுவித்தார். அது வெறும் ஜடமாக இருக்க, உயிர்ப்பிக்கும்படி விஸ்ணுவை வேண்டிக் கொண்டார்.

விஸ்ணுவும் வாயுவை உண்டாக்கி மனிதர்களை தோற்றுவிக்கப் பணித்தார். அதற்குரிய வரத்தை அளித் தார். தோன்றிய மனிதரோ இச்சைகளற்று ஞானத்தை நாடி நகர்ந்து விட்டனர். மீண்டும் சில மனிதர்களை உரு வாக்க அவர்களும் ஞானத்தை நாடி சென்று விட நான் முகன் கவலைகொண்டு, ஈசனை வேண்டி நின்றிட தோன்றிய அவரும் அருளை வழங்கி அகன்று விட்டார். மீண்டும் பிரம்மா சிருஷ்டியில் இறங்கி சப்த ரிஷிகளைத் தோற்றுவித்தார்.

மடியிலிருந்து நாரதரும் நிழலிருந்து கர்த்தம ரிஷியும் பெருவிரலில் இருந்து தக்கனும் தோன்றினர். சப்த ரிசிகளில் பிருகு முனிவரிலிருந்து மரிசி முனிவரும் , அவரிலிருந்து காசிபர் எனும் முனிவரும் தோன்றினர். தக்கனுக்கு அறுபது பெண்கள் உதித்தனர். அதில் பதின் மூன்று பேரை காசிபர் மணம் முடித்தார். அவர்களுக்கு மலைகள், ஆறுகள், மிருகங்கள், பறவைகள், பாம்புகள் போன்றவற்றுடன் தேவர்கள், அசுரர்களும் தோன்றினர். இதன் மூலம் உலகவிருத்தி ஏற்பட்டது.

தக்கனின் இன்னொரு மகளான ஸதி ஈசனை மணம் முடித்தாள். இதனால் தக்கன் ஈசனை தனக்கு கீழானவனாக நினைத்துக் கொண்டான். கர்வத்தை வளர்த்து கொண்டான். இக்காரணத்தால் ஈசனுக்கும் தக்கனுக்கும் இடையில் விரோதம் உண்டாகிக் கொண்டிருந்தது. தக்கன் பெரியளவில் யாகம் ஒன்றை தொடங்கிருந்தான். ஈசனையும் ஸதியையும் அழைக்க மறுத்தான். தந்தைக்கு நியாயம் புகட்ட யாகத்தை நிறுத்த ஈசன் தடுத்தும் ஸதி புறப்படுகிறாள். தந்தையுடன் குறைபடுகிறாள். நிறுத்தும் முயற்சி முடியாமல் போகவே யாகத் தீயில் குதித்து உயிர் விடுகிறாள்.

ஈசனின் கோபம் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. முக்கண்களும் முழுவதுமாய் சிவப் பாக மாறியிருந்தன. பக்தர்கள் படைத்த தாம்பூலத்தை மென்று கறைபடிந்த பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டார். யாகத்தை நிறுத்த ஈசனில் கொப்பளித்த கோபத்தில் உதித்த வீரபத்திரரோ தக்கனை வதம் செய்யக் குதித்திட்டார். அனைத்து ஆயுதங்களும் அவர் கைகளில் மின்னிட தக்கன் தலையை மண்ணிட தேகம் முழுவதும் நிறைந்த கோபத்துடன் ஈசன் சொல்லை ஏற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகசாலை புகுந்திட்டார். யாகம் காணஆசையுடன் நின்ற தேவர்கள் யாவரும் குலை நடுங்கிட, தூக்கிய வாளின் வீச்சில் யாகசாலை அடையாளம் தெரியாமல் அழிந்து கொண்டது. ஓம குண்டத்தில் அவிர்பாகத் திற்காய் காத்திருந்த அக்கினி தேவனும் ஓடி ஒளித்துக் கொண்டுவிடுகிறான். தனித்துப்போன தக்கன் சிரமும் வீரபத்திரரின் வெஞ்சின வாள் வீச்சில் மண்ணில் விழுந்தது. அய்யன் கோபமும் தணிந்தது. தலையற்ற தக்கன் உண்மையை உணர்ந்து கொண்டான். ஈசனை பணிந்து கொண்டான். ஆட்டுத்தலை பொருத்த மீண்டும் எழுந்து கொண்டான்.

இப்போது கைலாயம் களையிழந்திருந்தது. சிவனும் சிலையாக நிஷ்டையில் அமர்ந்து விட்டார். சலங்கை கட்டிய கால்களால் ஆடிய தாண்டவத்தையும் மறந்து விட்டார். அய்யனின் தாண்டவத்திற்கு மத்தளம் இசைத்த நந்தி தேவரும் நமக்கேன் வம்பு என அமைதி யாகி விட்டார். ஆடலுக்காய் இசைத்த கருவிகளும் பனி படர்ந்து மரத்து விட்டன. வாத்தியம் இசைத்த விரல் களின் சொந்தங்கள் இப்போது வேறு தொழில் நோக்கி விரைந்து விட்டனர். அன்னையின் சிங்கமும் ஆதரவற்று அலைந்து கொண்டே கைலாசக் காட்டிற்குள் புகுந்து மறைந்து கொண்டு விட்டது. அய்யனின் எருதும் அவருடன் அருகில் அமர்ந்து அன்னம் தண்ணி மறந்து அபலையாக ஆகிவிட்டது. அய்யனும் அன்னையும், தேவ கன்னிகைகள் புடைசூழ அனுபவித்து நீராடும் மான சரோவர் ஏரிப்பக்கமும் பரமனின் பாதம் படாமை யால் பனி உறைந்து விட சனசந்தடி அற்ற இடமாகி விட்டது.

யாக குண்டத்தில் வீழ்ந்த ஸதி சுவாலையாய் ஆகி ஹிமபத்கிரியில் சுடர் விட்டாள். ஆனாலும் மீண்டும் ஈசனுடன் இணைந்திட பூலோகத்தில் பிறந்திட சித்தம் கொண்டாள். தங்களின் மகளாக பார்வதியாக பரம்பொருளை அடைந்திட ஜனனித்து நின்றாள். ஈசன் மீது மையலில் வீழ்ந்தாள். சொக்கனை நினைத்துத் தினம் சொக்கினாள். இன்று மணமகளாக மணக்கோலத்தில் நிற்க தங்கள் மனம் உண்மைகள் புரியாது தவிக்கலாமா? ஈசன் திருமணத்தைத் தவிர்க்கலாமா? தங்கள் மனதைத் தேற்றுங்கள், பார்வதி கழுத்தில் தாலியை ஏற்றுங்கள். ஒரே மூச்சில் அனைத்தையும் உரைத்த ஷப்த ரிஷிகளுக்கு மூச்சு வாங்கியது. கமண்டலத்து நீரைப் பருகிக் களைப்பைத் தீர்த்துக் கொண்டனர்.

"ஈசன் அழைக்கின்றார்" என்ற நாரதரின் அழைப்பிற்கு சப்தரிஷிகளும் மேனையை சாந்தப்படுத்தி மணவறைக்கு அருகில் அழைத்து செல்கின்றனர். அங்கே ஈசன் மணவறையில் எவருக்கும் இணையாகா , உலகத்தோர் காணமுடியாத பேரழகுடன் சகல ஐஸ்வரியங்களுடன் புன்னகை புரிந்திட மேனையும் "அடியேனை மன்னித்திடுங்கள்" என்று கூப்பிய கையுடனும் நீர்சிந்தும் கண்களுடனும் பரம் பொருளை பணிந்து நின்றிட்டாள். வரமருள வேண்டிட்டாள்.

"மேனையே உன் உள்ளத்தில் அஞ்ஞானத்தை வெளிப்படுத்தவே உனது கண்களுக்கு அவ்வாறு தோன்றினேன். கைலாசத்தில் என்னில் பாதியாக உன்மகள் பார்வதி அமர்ந்து அனைத்து ஜீவன்களையும் அணைத்து நிற்கட்டும். அடியவர்களுக்கு அருளை வழங் கட்டும். இன்று நீ அவளுக்கு ஆசி வழங்கி அனைத்துக் கடமைகளையும் அழகாய் முடித்துவிடு" சமத்துவக் கருத்துடன் மாமியாரைச் சாந்தப்படுத்திட மேனையும் சித்தம் தெளிந்து தலையசைத்து சம்மதத்தை உணர்த்தி நின்றிட...

பிரமதேவர் புரோகிதர் ஆகி நான்கு வாய் களினாலும் நால்வேத மந்திரம் ஓதி திருமணத்தை நிகழ்த்திட இமவானும் மேனையும் கன்னிகாதானம் செய்து கடமையை முடித்திட திருமாங்கல்யம் கழுத்திலே மிளிர்ந்திட பார்வதி முகம் பாரிஜாதமாய் மலர்ந்திட இப்போது பாரதன் தாயாகி பிரகாசித்து பாரிற்கு ஒளி வழங்கி நின்றிட்டாள். திருமணத்திற்கு வந்தோர் வாழ்த்தி வணங்கிட ஈசன் அனைவரையும் ஆசீர்வதித்து கரம் கூப்பியோருக்கு வரங்களும் வழங்கி விடுகிறார். மனங்களை நிறைத்து விடுகின்றார்.

அறுசுவை உணவுடன் தடல்புடலான விருந்துபசாரத்துடன் இமவானின் சபை நிறைவுபெற, சபையோர் உண்ட களையால் உறக்கம் வந்திடவிடாது தாம்பூலம் வழங்கி தங்கள் கடமையை முடித்த திருப்தியில் முக மலர்ச்சியுடன் இமவானும் மேனையும் ஈசன் பார்வதி தம்பதிகளை ஊர் எல்லைவரை சென்று வழி அனுப்பி வைக்கின்றனர். ஈசனும் பார்வதியும் காளை மாட்டில் ஏறிக் களிப்புடன் கைலாசம் நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றனர். கையசைத்து நிற்கும் மேனை இப்போது அவர்களுக்கு ஒரு புள்ளியாகத் தெரிந்து பின்னர் மறைந்து கொண்டிருந்தாள். •



அகளங்கனின் பக்திப்பாடல்கள் நூல் வெளியீடு 25.02.2023 அன்று வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில் திருமணமண்டபத்தில் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் தலைமையில் நடைபெற்றது. பண்டிதர் வீ.பிரதீபன், அனுஷா மதியழகன், கி.உதயகுமார், என்.கே. கஜரூபன், நிறைமதி, சி.வரதராசனட ஆகியோர் உரையாற்றினார்கள்.



நோயல் நடேசனின் "தாத்தாவின் வீடு" நாவல் வெளியீடு 25.02.2023 அன்று கிளிநொச்சி பழைய ஆஸ்பத்திரி மண்டபத்தில் எழுத்தாளர் ப. தயாளன் தலைமையில் நடைபெற்றது. விமர்சன உரையை சி.ரமேஷ் ஆற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் செ.யோகராசா

# சர்வதேச பெண்கள் தினம் "கிராமப் பெண்களே விழித்தெழுங்கள்!" மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்து எழுந்த முதற்குரல் (1948/49)

மேற்படி குரலுக்குரிய செல்வி.தேவகி என்பவர்! இவர் பற்றி இன்று அறிய முடியாவிட்டாலும் அது காரணமாக இக்குரலுக்குரிய முக்கியத்துவம் குறைந்து போவதற்கில்லை. இவ்வாறு கூறுவதற்குக் காரண முள்ளது. பெண்கள் மத்தியில் பிறபிரதேசங்களில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் திருகோணமலையில் இரண்டாம் தசாப்தமளவில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணையிலே மாதர் அமைப்பு உருவாகி சஞ்சிகை நடத்துகின்றார் (தமிழ் மக்கள் 1923); திருகோணமலையில் ஸ்ரீமதி சு தைய லம்மா செயலாளராக இருக்க, பெண்கள் அமைப்பு உருவாகி, சஞ்சிகையும் (மாதர் மதிமாலிகை 1929) வெளிவருகிறது. மலையகத்தில் மீனாட்சியம்மாள் முன் இணைப்பத்திரிகை ஆசிரியராக பல செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார். இந்நிலையில் மட்டக்களப்பு பிரதேசத்தின் நிலை என்னவொன்றொரு கேள்வி ஆர்வலர் மத்தியில் எழுந்திருக்கக் கூடும் அதற்கான தொரு விடையே கமலொலித்த குரலாகும். எனினும் மட்டக்களப்பில் சிபாணிகள் எழுச்சிக்கான புறச்சூழல் வேறுவகைப்பட்டது.

மட்டக்களப்பிலிருந்து (மண்டூர்) "பாரதி" என்றொரு சஞ்சிகை வெளிவந்தது (1948 – 49) மங்கையர் மன்றம் என்ற தலைப்பில் இடம்பெற்ற பெண்கள் பகுதி யில் வெளிவந்த கட்டுரையின் தலைப்பே மேலுள்ளது; இச்சஞ்சிகையின் இப்பகுதியிலும் பிற பகுதிகளிலும் பெண்கள் பலர் வெவ்வேறு ஆக்கங்கள் எழுதி யுள்ளனர். சமகாலச் சஞ்சிகையான பாரதி (கொழும்பு) யில் பெண்கள் எவரும் எழுதவில்லை; "மறுமலர்ச்சி" யில் மூவர் சிறுகதை எழுதியுள்ளனர் (அதிலொருவர் தமிழ்நாட்டினர்) ஒப்பீட்டு ரீதியில் பாரதி (மண்டூர்)யில் மேற்குறிப்பட்டது போன்று பலர் எழுதியுள்ளனர். தலைப்பாக குறிப்பிட்டுள்ள கட்டுரையின் முக்கியத்துவ மும் அவசியமும் கருதி அவ்வாறே கீழே தரப்படு கின்றது.

சகோதரிகளே! உங்களுக்கு இன்னுமேன் உறக்கம்? நம் நாட்டுப் பெண்மணிகள் அறிவு, அந்தஸ்து, வீரம் என்பவற்றில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக முயல்வோமென முன்னேறிக்கொண்டே வருகின்றனர். நீங்கள் மாத்திரம் இப்பொழும் வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கத்தான் செய்கிறீர்கள். படித்து முன்னேற்றத் திற்கு வரக்கூடிய நீங்கள் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற மூடகொள்கையைக் கைக்கொண்டு பாடசாலையினின்றும் நீங்கி விட்டு காவல் புரிகின் றீர்கள். சமூகத்துடன் சேர்ந்து கிராம சேவை செய்யாது வீட்டுக்குள்ளே தலை மறைவாக வாழ்வது தான் நாகரி கம் என்றெண்ணுகிறீர்கள். அன்றேல் அயல்வீட்டுக்குத் தொங்கோட்டமும் சில்லறைப் பாய்ச்சலுமாக ஓடுகிறீர்கள். இதுவா உங்கள் மனப் பண்பு.

செல்வப் பெண்மணிகளே! வருங்காலப் பெண்களை நல்ல முறையில் நடக்க வழிகாட்டியாகப் பிறந்தது நாம் என்பதை மறந்து விட்டீர்களா? பட்டின வாசிக்குப் பசிதீர்க்கும் பாவையர் நாம் பறைசாற்ற பயந்துவிட்டீர்களா? இன்றைக்கு இலங்கை பாராளு மன்றத்தில் ஒரு பிரதிநிதியாக இருப்பவள் உங்களைப் போல் ஒரு பெண்ணல்லவா? ஊராக மக்களுக்காக அரும்பாடுபட்டு தேச சேவை செய்யும் உலகம் போற்று உத்தம பண்டிட் விஜயலெட்சுமி ஒரு பெண்ணல்லவா? இப்படி எத்தனை ஆயிரம் ஆயிரம் பெண்கள் படித்துப் பட்டம் பதவிகள் பெற்று தன்னலம் கருதாது நமது நாட்டு மக்களுக்காக அருந்தொண்டு செய்கிறார்களென்றால் நீங்கள் மாத்திரம் தலைமறைவாக கிராமப்புறத்தில் ஒழித்துக் கொண்டிருந்தால் நாட்டின் சேவையில் உங்கள் பங்கென்ன? தேச சேவையில் பங்குபற்றாது ஒழித்துக் கொண்டிருப்பது உங்களுக்கு அழகாகுமா? தேசசேவை செய்வதற்கு முதலில் கிராம சேவை செய்யுங்கள். பட்டினப் பெண்களிலும் கிராமப் பெண்கள் அறிவிலும், நாகரிகத்திலும் குறைந்தவர்களென்று சொல்லும் போது உங்களுக்கு வெட்கம் வரவில்லையா?

செல்விகளே! போனதை எண்ணி வாட வேண் டாம். இனியாவது விழித்தெழுங்கள்! கிராமப் பெண்கள் மேன்மையடையப் பிரயாசைப்படுங்கள் வீட்டுக் குள்ளே யிருக்கும் பெண்களை வெளியேற்றுங்கள். வாழ்க்கைக்குத் தேவையான கல்வியைக் கற்றுத் தேறுங்கள் அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற மூடக்கொள்கையைச் சுட்டெரியுங்கள். பழங் காலப் பெண்களின் சீர்கெட்ட முறைமை எடுத்தெறி யுங்கள். சமூகத்துடன் கூடி வெட்கமென்னும் பேயை விரட்டியோட்டுங்கள் சாதித்திமிர் படைத்த அபாயப் பேர் வழிகளின் சர்வாதிகார ஆட்சியைத் தொலையுங்கள். வருங்காலப் பெண்கள் அன்பு, அருள், வாய்மை, அடக்கம், தொண்டு முதலாய நற்குணங்களின் வழி வாழ வழிதிறவுங்கள். உங்களை நீங்கள் தியாகப் பண்புடன் வாழும் சமூகமாக மாற்றி அமையுங்கள். உண்மையான கரிசனையுடன் கிராம சேவை செய்ய அணி வகுத்து வாருங்கள்.

கண்மணிகளே! கிராமத்தில் சேவை செய்வதற்கு "பாரதி" என்னும் பத்திரிகை வெளிவருவது உங்களுக்கோர் ஊன்றுகோலாகும். இச்சந்தர்ப்பத்தை இழந்துவிடாது பிரயோசனப்படுத்திக் கொள்ளுங்கள். வருங்கால உலகு உங்கள் கையில் இருக்கிறது. நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஓர் சங்கம் நிறுவி அதன் மூலம் கிராமத்தை முன்னேற்றுங்கள். இன்றே நித்திரையை விட்டு விழித்தெழுங்கள்!

சமகாலத்தில் முற்குறிப்பிட்ட இதழ்களில் எழுதிய பெண்களது கட்டுரைகளுடன் ஒப்பிடும் போது உணர்ச்சி மிகு பாங்கில் மன எழுச்சி ஏற்படும் விதத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரை எழுதப்பட்டிருப்பது கவனத்திற்குரியது.

செல்வி நாகேஸ்வரி "பெண்பிறவி" "கூறையும் தாலியும்" என்றிரு கட்டுரைகள் எழுதியுள்ளார். முதற் ஆணாதிக்கத்திற்குச் சாட்டையடி கொடுகின்ற விதத்திலே ஆக்ரோஷமான முறையில் எழுதப் பட்டுள்ளது. அதன் ஒரு பகுதி:

"பெண்ணைப் பெற்றவன் பெரும் பாவவாழி", ஐந்து பெண்ணைப் பெற்றால் அரசனும் ஆண்டியா வான்" என்னும் நெஞ்சுரமற்ற பழமொழிகளை ஆக்கி வைத்தது ஸ்ரீதனம் என்னும் சமூகக் கோட்பாட்டு உரிமைகளைக் கடைபோகப் பறித்துத் தன்னம்பிக்கை களை இழக்கும் வண்ணம் அவர்கள் அறிவுகளைக் குட்டிச்சுவராக்கி உயிரை உறிஞ்சி உல்லாசமாக வாழ்வதற்காக ஆண் சமூகத்தார் ஆக்கிக்கொண்ட பேடிச் சட்டந்தான் இது.

ஆயிரம் ஆயிரமாகச் ஸ்ரீதனத்தை அள்ளிக் கொண்டால் மாத்திரம் போதாது. அழகான பெண்ணும் வேண்டும் என்று வயதின் எல்லையைக் கடத்திக் கொண்டே போகும் கயவர் கூட்டங்களிலிருந்து பெண் சமூகம் விடுதலை பெறவேண்டுமாகில் தீவிர நட வடிக்கை எடுத்தாக வேண்டும். பெண் குலத்தின் மானத்தை வாங்கி அவர்களைப் பாய்க்கும், கட்டைக் கும், பேய்க்கும், ஊத்தைக் குகழிக்கும் உவமை காட்டி ஏளனம் செய்து நிற்கும் நூல்களையும் சமயக் கோட்பாடு களையும் இருந்த இடமுமில்லாது அழித்தாக வேண்டும்.

"ஆலகால விடத்தையும் நம்பலாம் ஆற்றையும்
பெருங்காற்றையும் நம்பலாம்
கோல மாத யானையும் நம்பலாம் கொல்லும்
வேங்கைப் புலியையும் நம்பலாம்
காலனார் விடு தூதரை நம்பலாம் கள்வர்
வேடர் மறவரை நம்பலாம்
சேலை கட்டிய மாதரை நம்பினால் தெருவில்
நின்று தியங்கித் திவப்பதே"

என்ற கவியினை முன் பின் அறியாத ஒரு பெண் வாசித்துப் பார்பானேயாகில் அவள் மனதில் எவ்வளவு கொந்தளிப்பு உண்டாகும். பாவம் இந்தக் கவிக்கு மதிப்புக் கொடுத்துப் போற்றி வந்த ஆண் சமூகத் தவர்களின் அநியாயத்தையிட்டு என்ன கூறுவது?....

தொடர்ந்து சித்தர் பாடல்கள், சமண சமயத்த வரது பெண் எதிர்பு வாதம், ஔவையார் பாடல் என்பன கண்டன விமர்சனத்திற்குள்ளாகின்றன!; பாரதியார் அடிச்சுவடு பின்பற்றப்பட வேண்டும் எனப்படுகின்றது.

"கூறையும் தாலியும்" என்றொரு கட்டுரையும் மேற்குறிப்பிட்ட செல்வி நாகேஸ்வரியால் எழுதப் பட்டுள்ளது. (கட்டுரைத்தலைப்பு இன்றைய பெண் நிலைநோக்கில் பிரபல்யமானதொன்று) அது பின்வருமாறு ஆரம்பிக்கின்றது:

"கலியாணத் தடபுடலில் ஒருவரை ஒருவர் முட்டிக்கொண்டும், மோதிக் கொண்டும் வேலைகள் செய்து கொண்டிருக்கின்றனர். ஏகப்பட்ட சனம் அத்தனை பேரையும் சந்திப்பில் மாப்பிள்ளை பாடு பெரும் பாடாகப் போகிறது. ஆனால்! பாட்டோடு பாடாகத் தமது நண்பர்கட்கும் உற்றார் உறவினர்கட்கும் மணகளுக்கென்று வாங்கியுள்ள - இல்லை தனது செல்வத்தின் மதிப்பை ஊருக்கு அம்பலப்படுத்த என்று வாங்கி வைத்த கூறையையும் தாலியையும் காட்டிக் காட்டி மனம் மகிழ்ந்து கொள்கிறார். அந்தக் கூறையிலும் தாலியிலுமே தான் மணமக்கள் மதிப்புத் தங்கியுள்ளது என்பது சமூகத்தின் சம்பிரதாயம்.

எந்த ஏழையாக இருந்தாலும் சரி, கலியாணம் என்றவுடன் நூலில் ஒரு காயோ அல்லது ஒரு பித்தளைச் சங்கிலியோ தாலியாக வேண்டுமாம். பட்டுச் சேலையோ அல்லது ஒரு பகட்டுச் சேலையோ ஒன்று கூறையாக வேண்டுமாம். இதற்காக வேண்டி அந்த ஏழை எத்தனையோ நாள் சம்பவத்தை மிச்சம் பிடித்தாக வேண்டும். சீட்டுக்கள் போட்டோ, சேமிப்புச் சங்கங் களில் சேர்த்தோ தொகையாக எடுக்க வேண்டும். கூறை யும் தாலியும் கொண்டு போகாத மாப்பிள்ளைக்கு மண வீட்டில் மரியாதை கிடைப்பது என்பது கொஞ்சம் முயற் கொம்புதான். இதற்காக வேண்டித்தான் போலும் இந்தக் கால வாலிபர்கள் கூறையும் தாலியும் வேண்டு மாகில் சரி கொண்டு வருகிறோம். முன்னாடியே நீங்கள் ஸ்ரீதனப் பணத்தைக் கொடுத்து விடுங்கள் என்கின்றார்கள்.

நானுங் கூடவே தான் அன்று அந்த மண வீட்டில் மாப்பிள்ளை ஆசையுடன் காட்டிய கூறையையும் தாலியையும் கண் குறிபார்த்து நின்றேன். என்ன அழகான சேலை. ஆயிரம் ரூபாயாக வாங்கப்பட்டதாம். அந்தத் தாலி 22 பவுணில் செய்யப்பட்டதாம். யுத்த காலத்தில் திரிகோணமலையில் சேவை செய்த காரணத்தினால் அந்த மாப்பிள்ளையிடம் ஏராளமான பணம் குவிந்திருந்தது. அந்தப் பணத்தைக் கொண்டு தான், இந்த ஆடம்பர நாடகங்களில் ஈடுபட்டிருந்தார்.

"பாஞ்சாலி" என்ற புனைபெயரில் எழுதப்பட்டது. "பாஞ்சிலி" என்பவரெழுதிய ஆக்கம் பாணியிலமைந்துள்ளது; பெண்கள் சமூகத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பற்றியதாகவுள்ளது.

மேற்கூறிய கட்டுரைகளின் எடுத்துரைப்பு முறைகள் பற்றி ஒப்பு நோக்கிச் சிந்திய பின் ஒருண்மை புலப்படும். ஆரம்பத்தில் குறிப்பிட்ட பிறபிரதேச பெண்களின் கட்டுரைகள் புலமைச்சார்புடையதாக அமைந்து படித்தவருக்காக எழுதப்பட்ட "பாரதி" ஆக்கங்கள் சாதாரண பெண் முதற் கொண்டு எழுதப்பட்டன என்பதே அதுவாகும்.

அதே வேளையில் இன்னொரு விடயங்களை யும் அவதானிக்க முடிகிறது. ஏனைய பிரதேசங்களில் பெண்கள் சஞ்சிகைகளும் அமைப்புகளும் செய்தன வற்றை மட்டக்களப்பு பிரதேசத்தில் "பாரதி" சஞ்சிகை யின் "மங்கையன் மன்ற"மும் பெண்களது கட்டுரை களும் செய்துள்ளன என்பதே அதுவாகும். சமகாலச் சஞ்சிகை யொன்றில் பிரசுரமான வாசகர கடிதமொன்று பாரதி போன்று சஞ்சிகையிலும் பெண்கள் பகுதி ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றை விடயத்தைத் தாங்கி வெளிவந்துள்ளது என்பதே அதுவாகும்.

தவிர முற்குறிப்பிட்ட பெண்கள் சஞ்சிகைகள் பெண்களது சிறுகதை, கவிதை குட்டிக்கதை ஆக்கங் களுக்கு இடமளிக்காமையும் "பாரதி" சஞ்சிகை அத்தகைய ஆக்கங்களுக்கு இடமளித்தமையும் கூட கவனத்திற்குரியது. கவிதை பகுதியில் ந.ஜெயமணி (இன்று கொழும்பில் வதிபவர்) எழுதியுள்ள கவிதை யொன்று மட்டக்களப்பு பிரதேச கவிதை முன்னோடி யாக அன்னாரை இனங்காட்டுவதற்கான வாய்ப்பளித் திருப்பது குறிப்பிடத்தக்கது. •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

# படியாதவன்....



கனகாலத்துக்குப் பிறகு கனகன் வெளி நாட்டால ஊருக்கு வந்திருந்தான். உப்பின முகமும் ஊதின வயிறுமா நல்லா விளைஞ்சிருந்த கனகன் வாற போற ஆக்களோட தஸ்சு ..புஸ்சு எண்டு இங்கிலீசிலை கதைக்கிறதைப் பாக்கத் தாய் ராசம்மாக்கு பெருமை எண்ட பெருமை. ராசம்மா பெருமைப் படுகிறதிலையும் அர்த்தம் இருக்கு ஏனென்டால் சின்ன வயதில அவனுக்கு ஆங்கிலம் வராது எண்டு விசயரத்தினம் வாத்தியார் வெளு வெளு எண்டு வகுப்பிலை வெளுத்தவர்.ஆனா லண்டனுக்குப் போன பிறகு கனகனுக்கு அங்கத்தே சகவாசம் போல இங்கிலீசு தண்ணி பட்ட மாதிரி தன்ரை பாட்டுக்கு வந்திட்டுது. அதோட அவன் அங்கை ஏதோ ஒரு கொலீச்சில படிச்சு ரெண்டு மூண்டு பட்டங்களும் வாங்கி நல்ல வேலை செய்யிறான் கை நிறைய உழைக் கிறான் எண்டு உண்மையோ பொய்யோ தெரியாது சனம் ஊருக்குளை கதைக்குது. கனகன் அங்கை விசாவோட இருந்த பிற ஊர்ப் பெட்டை ஒண்டை விரும்பிக் கட்டின படியால அவனுக்கு பிரசா உரிமையும் வலு சுளுவாக் கிடைச்சுப்போட்டுது.

அவன் பிற ஊரிலை கட்டினதில கந்தையருக்குப் புறியமில்லை... சில நேரங்களிலை இரவிலை கள்ளு வெறி கூடினால் "தத்தாரி கண்டவளுக்குப் பின்னாலயும் எடுபட்டுப் போய் ஊரிலை மானம் மரியாதையோட இருக்க விடாமல் பண்ணிப்போட்டான்...".

"இஞ்சை எத்தினை பேர் தங்கடை பெட்டை யளைக் கட்டி வைக்க வேணும் எண்டு போட்டு நான் முந்தி நீ முந்தி எண்டு போட்டி போட்டவங்கள்... எங்கடை ஊர்ப் பெட்டையளிட்டை இல்லாத என்னத்தை பிற ஊர்க்காறி அவளிட்ட புதுசா இவன் கண்டு போட்டான்..."

"எல்லாற்றை தலையிலையும் மண்ணை அள்ளிப் போட்டுப்போட்டான் ...இக்கணம் நான் செத்தாலும் அவன் எனக்குக் கொள்ளி வைக்கப் படாது..." எண்டு கத்திப்போட்டு அப்படியே நித்திரை யாப் போவார். தேப்பன்ரை கோவத்தை அறிஞ்சபடி யால ஏதும் தேவையில்லாத பிரச்சினையள் வந்தாலும் எண்டு போட்டு பெண்டில் பிள்ளையளை கனகன் வரேக்கை கூட்டிக்கொண்டு வரேல்லை...

கனகன் வந்திருந்த நேரம் வாரிவளவுப் பிள்ளையார் கோயில் திருவிழாக்காலம். வீட்டில மச்சம் மாமிசம் கிட்டவும் அடுக்காத நேரம். தாய் ராசம்மாவும் தேப்பன் கந்தையாவும் பிள்ளையாருக்கு பத்து நாளும் விரதம். வீட்டில நிக்கிற நாய் வீமனும் விரும்பியோ விரும்பாமலோ அவையோட சைவமாத்தான் இருக்க வேணும். அந்தக் குறிச்சியிலை உள்ள எல்லா வீடு களிலையும் உதுதான் நிலைமை. கனகனுக்கு எண்டால் உது வலு கஷ்ரமாப் போட்டுது ஏனெண்டால் அவன் ஊருக்கு வரேக்கையே நல்லாக் கள்ளுக் குடிக்க வேணும், மீன் நண்டு றால் வாங்கி கூழ் காச்ச வேணும், ஆடு அடிச்சு பங்கு போடவேணும், எண்டு கன திட்டத்தோட வந்தவன். இஞ்ச பாத்தால் வீட்டில நிலைமை தலை கீழாக் கிடக்க அவனுக்கு கோவம் கோவமா வந்தது.

தாயிட்டக் கனகன் மச்சம் காச்சித்தரச் சொல்லிக் கேட்டு நச்சரிக்க ராசம்மாக்கு எண்டால் என்ன செய்யிறது எண்டு தெரியேல்லை. கன காலத் துக்குப் பிறகு வந்த பிள்ளை ஆசை ஆசையாக் கேக்க சமைச்சுக் குடுக்க முடியேல்லை எண்டு ராசம்மாக்கு சரியான கவலையாய் கிடந்தது. என்ன இருந்தாலும் பிள்ளை ஆசையாக் கேட்டால் பெத்தவளால செய்து குடுக்காம இருக்கேலாதுதானே. ஆரையும் பிடிச்சுக் கோடியுக்கை வைச்சு எண்டான்னை அவனுக்கும் வீமனுக்கும் மச்சம் சமைச்சுக் குடுக்கலாம் எண்டாலும் கந்தையரை நினைக்கப் பயமாக் கிடந்தது. கந்தையர் விரத காலம் திருவிழாக் காலம் எண்டால் மச்சக் காத்தே படலையுக்கை வரப்படாது எண்டு நிக்கிறவர். மற்ற நாட்களிலை மச்ச வாடை இல்லை எண்டாலே கந்தை யருக்கு ஒரு கவளம் சோறும் வாயுக்கை இறங்காது. மனம் கேக்காத ராசம்மா கந்தையரிட்டை விசயத்தைச் சொல்ல அவர் வானத்துக்கும் பூமிக்குமிக்குமாக் குதிச்சார்.

"நல்ல கதை கதைக்கிறாய்.... எல்லாம் திருவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியச் சமைக்கலாம் எண்டு அவனிட்டைச் சொல்லு... இந்தப் பத்து நாளும் இஞ்சை மச்ச வாடையே வரப் படாது... ஓம் சொல்லிப்போட்டன்" எண்டு கத்தினார். கந்தையர் ஒரு பிடிவாதக்காரன் தான் பிடிச்ச பிடியை ஒரு நாளும் விடமாட்டார் எண்டது ராசம்மாக்கும் தெரியும்

ஆனால் கந்தையர் கத்தினது கனகனுக்குப் பிடிக்கேல்லை. "கடவுளே இல்லையாம்... பேந்தென்னத்துக்கு கோயில் குளம் கட்டிறம் திருவிழாச் செய்யிறம் எண்டு மினக்கெடுவான்... என்னத்துக்கு சாப்பாட்டுக்கை சமயத்தைக் கொண்ணந்து கொழுவி விடுவான்..... உதெல்லாம் மூட நம்பிக்கை..." எண்டான் கனகன். கனகன் மாதிரித்தான் வெளிநாட்டுக்குப்போன கனபேர் உப்பிடிக் கதைக்கினம்.

முந்திச சின்ன வயதிலை கனகன் பிள்ளையார் கோவில் திருவிழாக் காலம் தானும் விரதம் இருப்பான். கோயில் கூட்டுறது கழுவுறது துடைக்கிறது ஐயருக்கு ஏவல் மோவல் செய்யிறது எண்டு எல்லா வேலையளும் செய்வான். திருவிழாக்காலம் எண்டில்லை கோயில்லை ஏதும் வேலையள் இருந்தால் எப்பவும் போய்ச் செய்வான். பள்ளிக்கூடம் போக முந்தி ஒவ்வொருநாளும் பிள்ளையாரைப் போய்க் கும்பிட்டுப்போட்டுத்தான் போவான்.தேப்பன் ஏதும் கதைச்சால் மூச்சுக் கீச்சுக் காட்ட மாட்டான் இருக்கிற இடம் தெரியாம இருந்து போடுவான். ஆனால் அவன் லண்டனுக்குப் போன பிறகு எல்லா விசயத்திலயும் மாறிப் போனான்.

கனகன் உப்பிடிச் சொல்லவும். "அடே உங்கை இயக்கப் பிரச்சினையளுக்கை ஆமியிட்டை நேவி யிட்டை மாட்டுப்பட்டுப் போவாய் எண்டு பயந்து போய் பிள்ளையாருக்கு நேத்தி வைச்சு அவனை இவனைப் பிடிச்சு கொம்படியுக் குள்ளாலை கொண்டு போய் உன்னை லண்டனுக்கு அனுப்ப நான் பட்ட பாடு எவ்வளவு எண்டு தெரியுமே".

"அவர் பிள்ளையாருக்கு நேத்தி வைச்ச படியாலதான் நீ உயிரோடை தப்பினனி..... அது மட்டும் இல்லை இண்டைக்கு லண்டனிலையும் நாலு பேர் மதிக்கிற மாதிரி பெண்டில் பிள்ளையளோட சீவிக்கிறாய் கண்டியோ...." எண்ட கந்தையா "கண்டறியாத படிப்பு ஒண்டைப் படிச்சுப் போட்டு கனக்கக் கதைக்கிறாய்... அறிவே வடிவா இருக்கிற கடவுளை விளங்காத படிப்பு கால் தூசுக்கும் சமமில்லை எண்டதை நீ விளங்கிக் கொள்ள வேணும் கண்டியோ...." எண்டு காறித் துப்பினார்.

கனகன் என்னவோ சொல்ல வெளிக்கிட சண்டை பிலத்தாலும் எண்டு பயந்த ராசம்மா அவனைத் தடக்கி "தம்பி நான் கோயிலடிக்குப் போறான் நீயும் வாவன்" எண்டவும் கனகன் "நான் அங்கை வரேல்ல அங்க வர எனக்குப் பிடிக்கேல்லை..." எண்டுபோட்டு சயிக்கிளை எடுத்துக்கொண்டு எங்கையோ போனான். போன இடத்திலை வயிறுமுட்ட கள்ளும் குடிச்சு நண்டுக்கறியோடை சோறும் சாப்பிட்டுப்போட்டு பொழுதுபட வந்து சாப்பிடாமல் படுத்த கனகன் சாமத்திலை வயித்தையும் நெஞ்சையும் பிடிச்சுக் கொண்டு "ஐயோ... என்ரை அம்மா... எனக்கென்னவோ செய்யுது..." எண்டு கத்தினான். என்னவோ ஏதோ எண்டு பதகளிச்ச கந்தையரும் ராசம்மாவும் நடையன்ரை காரைப் பிடிச்சுக் கொண்டு யாழ்ப்பாணத்திலை உள்ள ஆசுப்பத்திரிக்குப் போனால் அங்கை அவனைப் பாத்து என்ன செய்யுது இண்டைக்குத் திண்டது குடிச்சது என்ன எண்டு விபரம் எல்லாம் விசாரிச்சபடி சில பல சோதின யளைச் செய்த டாக்குத்தர்மார் உடன ஒப்பரேசன் செய் தால்த்தான் ஆள் தப்பும் எண்டு சொல்லித் தியேட் டருக்குக் கொண்டு போகச் சொல்லிப்போட்டினம்.

கனகனைத் தியேட்டருக்குக் கொண்டு போன பிறகு இராசம்மாவும் கந்தையரும் "அப்பனே பிள்ளை யாரே என்ரை பிள்ளையைக் காப்பாத்து..... உனக்கு அவனைக் கொண்டு காவடி எடுக்கிறம்..." எண்டு நேத்தி வைச்சபடி தியேட்டர் வாசலிலை காவல் இருந்தினம். ஒப்பரேசன் முடிஞ்சு வாட்டிலை கொண்டு வந்து கிடத்தி ரெண்டு மணித்தியாலத்தால மெல்ல முனகின படி கனகன் மெல்ல மெல்லக் கண்ணைத் திறக்கக் கண்ட இராசம்மா "என்ரை பிள்ளையாரே.... என்ரை பிள்ளை யைத் தப்ப வைச்சுப் போட்டாய்..." எண்டு பிள்ளையார் கோயில் பக்கம் கையைத் தூக்கிக் கும்பிட்டா. கொஞ்ச நேரத்தால வந்த பெரிய டாக்குத்தர் "கடவுள் புண்ணியத் தால நேரத்துக்கு ஆளைக் கொண்டு வந்தது மட்டும் இல்லை அவற்றை அருளாலை ஒப்பரேசனும் நல்ல விதமாக முடிஞ்சுது...".

"வயித்திலை கிடந்த நாள்பட்ட கட்டி ஒண்டு இண்டைக்கு சாப்பாட்டுப்பிழையாலை போல தன்ரை குணத்தைக் காட்டிப்போட்டுது... அதை நாங்கள் வெட்டி எடுத்துப்போட்டம்..... இல்லாட்டில் ஆளை முடிச்சிருக்கும் " எண்டவர் கனகனைப் பாத்து

"எங்கட கையில ஒண்டும் இல்லை.... எல்லாம் ஆண்டவன்ரை கையிலதான் இருக்கு... இதுதான் நான் படிச்ச அனுபவம்..." எண்டுகொண்டு அடுத்த கட்டிலுக்குப் போனார்.

உண்மையான படிப்பு எண்டது கடவுளை அறிஞ்சு கும்பிடுறதுதான் எண்டது விளங்கினதாலயோ என்னவோ தெரியாது கனகன்ரை கண்ணில இருந்து கண்ணீர் கண்டபடி வழிஞ்சபடி இருந்தது.

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்."



அஷ்வினி வையந்தியின் "யாவும் ஆனந்தமே" கவிதை நூல் வெளியீடு, 12.02.2023 அன்று திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர்கூடத்தில் கனக.தீபகாந்தன் தலைமையில்நடைபெற்றது. நூல் அறிமுகத்தை பாலையூற்று அஷ்ரபா நூர்தீனும், நூல் பற்றிய உரையை சம்பூர் வதனரூபனும் நிகழ்த்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருட மலர்

கால விருட்சத்தில் காய்ந்தோர் "வருட" மலர்
வீழ்ந்து உதிர்ந்தது!
விரிந்து "புது வருட"
மொட்டு மலர்ந்தது!
முகிழ்ந்து அது இனிமேல்
அட்ட திசைகளுக்கும் அருளும்
கருணைசெய்யும்!

நேற்றுதிர்ந்த வருட மலர் நினைவுகள்
அலையலையாய்...
ஊற்றுகளாய்ப்....பாய்கிறது உள்ளத்தில்.
அதன் நன்மை
தீமைகளை எண்ணித் தெளிந்து,
இலாபநட்டம்
பார்த்துத் திருப்தியுற்று,
கவலைப் படவைத்து,
வாய்த்தநன்மை ஏற்று,
வருத்தங்களை மறந்து,
இன்று பூத்த "வருட" மலர் என்னென்ன
மணம் எழில் தேன்
கொண்டு வருகிறதோ
கூடி "வண்டாய்த்" தொடர்ந்து,
"வருட" மலர் உயிப்பாக வாழும் நாட்களில்
நாமும்
தெரிந்து செயற்பட்டு,
தீங்கு பிழைகளுக்கு
முகம் கொடுத்து,
அதனை முகாமைசெய்யும் முறையறிந்து,
நகரவேண்டும்...
ஓரிடத்தில் நங்கூரம் பாய்ச்சாமல்!

ஆதியந்தம் ஏதென்று நாமறியா...
உயிர்ப்பிழக்கா...
கால விருட்சம் கழித்ததுகாண்
கோடி கோடி
வருட மலர்களை!
மலர்த்துமின்னும் கோடி கோடி
வருட மலர்களை!
இருநூறு தசாப்த
வருட மலர்களின் கதைகளை மட்டும்
அறிவோம் இதுவரை!
அடிக்கடி வரும் மாற்றங்
கணித்து மலர்த்திய இவ்
"வருடக்" கவின் மலரின்
குணமறிந்து நாமும் கொள்வோமாம்
நன்மைகளை!
வணங்கி வரங்கேட்போம்...
மாய்க்கும் அதெம் தீமைகளை!

# த.ஜெயசீலனின் 2 கவிதைகள்

## கைகள் கோரும்

வருமானம் குறைந்து தேயும் நொந்து -விலை
வாசி பாயும் மும்மடங்கு என்று
அரைகுறையாய்க் குடித்துண்டு கொண்டு -வாழ்வோம்
அதை "நிறைக்க" திராணியற்று இன்று!

எப்பொருளும் விலை அதிகமாக -தேவை
இருக்கின்ற பல இலாது போக
இப்பொழுதே பதுக்கல் முடி சூட -வாழ்க்கை
இரத்தத்தை இழுத்தோட்டுவதார் மீள?

கடைகளிலே பொருள் நிறைந்து தேங்கும் -வாங்க
காசிலாத பணப்பைகளோ ஏங்கும்
கிடைக்கின்ற சலுகைகளும் நீங்கும் -இந்தக்
கேட்டைப் பசி வயிறுகளா தாங்கும்?

நடுத்தர வர்க்கக் குடும்ப வாழ்வு - இன்று
நம்பிக்கை இழந்து வாடலாச்சு
அடுத்த வேளைக்கில்லை வீட்டில் சோறு -இன்று
அன்றாடங் காச்சி பிழைப்போ சூது.

சாமான்கள் விலையுயரும் நாளும் -ஆனால்
சம்பளமோ உயரவில்லை காணும்
"ஏன்" "கூட்டும்" கேட்கலை யார், எங்கும் -ஏனோ
நிஷ்டை கூடி இன்று தொழிற் சங்கம்.

சம்பளமோ போதவில்லை இன்று -கடன்
சந்தோசங்களை வதைக்கும் கொன்று
நம் சேமிப்பும் கரையும் சென்று -என்ன
நாளை ஆகும்...கவலை யார்க்கு உண்டு?

சமாளிப்பார் சனங்கள் என்று கொண்டே -"இடஉ
தணிக்க வழி காண்பர் அவர்" என்றே
சுமை வரியை அதிகரிப்பார் இன்றே -தேசம்
துளிர்க்கும்; பசி வயிறு அழும் வெந்தே!

கவிதையிலே பாடி என்ன இலாபம்? - யார்தான்
கடனடைப்பார்? பிணி தடுப்பார் கூறும்?
அவலங்களை அகற்ற கைகள் கோரும் -ஏதும்
அருளிடாது இலாபமின்றிப் "பாரும்"!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

# குடும்பம் என்றொரு கோயிலிலே...

■ கோகிலா மகேந்திரன்

"Much Ado About Nothing" என்றொரு மகிழ்நெறி நாடகம், கி.பி 1598 – 1599 காலப்பகுதியில் ஷேக்ஸ்பியர் என்ற மாபெரும் நாடகாசிரியரால் எழுதப்பட்டது. அந்த நாடகத்தில் வரும் Beatrice என்ற பெண் பாத்திரம்,

"I had rather hear my dog bark at a crow, rather than a man swear he loves me" என்று கூறும். இந்த வரிகளின் அர்த்தம் மிக ஆழமான பொருளைக் கொண்டதாயினும், ஒரு நாய் காகத்தைப் பார்த்துக் குரைக்கும் குரல், மனிதர் ஒருவர் "உன்னை அன்பு செய்கிறேன்" என்று சத்தியம் செய்யும் குரலைவிட மேன்மையானது என்ற மேலோட்டமான கருத்தில் கூட ஒரு வகை உண்மை இருக்கத்தான் செய்கிறது. நாயின் குரலில் போலியோ நடிப்போ உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் தன்மையோ ஒரு போதும் இருப்பதில்லை.

பிள்ளைகள் தமது வீட்டிலே நாய் போன்ற தொரு செல்லப்பிராணியை வளர்ப்பதைப் பொதுவாக விரும்புவார்கள். அதைப் பெற்றோர் வரவேற்று ஆதரிப்பதே சிறந்தது. "செல்லப் பிராணியைப் பராமரிப்பதில் உதவுதல்" போன்ற வேலைகளை நிறைவு செய்யுமாறு கோரும் போது, அவர்களின் சுயகணிப்பில் ஏற்றம் தெரிவாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அது போன்ற உள்ளார்ந்த திருப்தியைக் கொடுக்கும் நடவடிக்கைத் தொடர்களின் மூலம் அவர்களின் "உணர்வு நுண்மதியை" உயர்த்தலாம் என்று உளவியலாளர்களும் கூறுகின்றனர். ஆயினும் செல்லப்பிராணி தொடர்பாகக் கொடுக்கப்படும் வேலை பிள்ளையின் வயதுக்குப் பொருத்தமாக அமைய வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. பானங்கள் அருந்தும் நாயின் கோப்பையில் வேளைக்கு வேளை நீர் ஊற்ற மூன்று வயதுப் பிள்ளையை விடலாம்.

அந்த வீட்டில் பிள்ளையும் பெற்றோரும் (சிலவேளை சகோதரர்களும்) ஒருமித்துச் செல்லப் பிராணியைப் பராமரிக்கும் போது "எங்களில் தங்கி யிருக்கும் ஓர் உயிரைக் கவனிப்பது எப்படி?" என்றும் பிள்ளை கற்றுக் கொள்கிறது. அது முக்கியமானதோர் வாழ்க்கைத் திறன் தானே!

நாய் போன்ற செல்லப் பிராணிகள் இருக்கும் வீட்டிலே பிள்ளைகள் தாம் அன்பு செய்யப்படுவதாகவும் ஆதரவு காட்டப்படுவதாகவும் உணர்கிறார்கள். மனிதர்கள் சக மனிதர்களை (பிள்ளைகளையுந்தான்) விமர்சிப்பதும், அவர்களின் செயல்களுக்குத் தீர்ப்பு வழங்குவதும் வழமையாக இருக்க, செல்லப் பிராணிகள் பிள்ளைகள் மீது நிபந்தனையற்ற அன்பையும் ஏற்றுக் கொள்ளலையும் காட்டுவது அவர்களுக்குப் பெரு மகிழ்வைக் கொடுக்கும். பிள்ளை என்ன தான் செய்து நாயைக் கலைத்தாலும் அது திரும்பி வந்து பிள்ளையை நக்கும். பிள்ளையோடு பந்து விளையாடும். வாலை ஆட்டித் தன் சந்தோஷத்தைத் தெரிவிக்கும்.

தோ... தோ... நாய்க்குட்டி
துள்ளி வாவா நாய்க்குட்டி
உன்னைத் தானே நாய்க்குட்டி
ஓடி வாவா நாய்க்குட்டி
கோபம் ஏனோ நாய்க்குட்டி
குதித்து வாவா நாய்க்குட்டி
கழுத்தில் மணியைக் கட்டுவேன்
கறியும் சோறும் போடுவேன்
இரவில் இங்கே தங்கிடு
எங்கள் வீட்டைக் காத்திடு

என்று அழ. வள்ளியப்பா என்ற குழந்தைக் கவிஞர் எழுதினார். இப்பாடல், பிள்ளை நாய்க்குட்டியோடு விளையாடுவது போல வடிவமைக்கப் பட்டிருக்கிறது.

புகழ்ந்தாலும் சரி, அன்புக் கட்டளை இட்டாலும் சரி, ஏதோ ஒரு வகையில் பிள்ளைகள் செல்லப் பிராணிகளோடு உரையாடும் போது அவர்களது அறிகை (Cognition) சிறப்பாக விருத்தியடைவதாகவும் விஞ்ஞான அவதானிப்புகள் ஆதாரத்துடன் முன் வைக்கப்படுகின்றன. ஏதோ ஒன்றை நாய்க்குட்டிக்கு வாசித்துக் காட்டுமாறு பெற்றோர் கேட்கிறபோது, பிள்ளை மிக உற்சாகத்துடன் வாசித்துக் காட்டும். அது வாசிப்புக் காண பயிற்சியாகாதா? பேச்சுப் போட்டிக்கு ஒரு பேச்சைப் பாடமாக்குவதற்கான இலகுவான வழியாகாதா?

வீட்டில் வளர்ப்பு மிருகம் ஒன்று இருக்கிறபோது பிள்ளைகள் பொறுப்புணர்வு காட்டுவது அதிகரிக்கிறது. பிள்ளையின் வயது மெல்ல அதிகரிக்கும் போது, நாய்க்கு உணவு வைப்பது பின்னர் நாய்க்கான உணவைத் தயாரித்து வைப்பது ஆகியவற்றைப் பிள்ளையிடம் விடலாம். (மேற்பார்வையுடன்)

"நாம்கொடுக்கும்உணவுக்காக எங்கள்வீட்டு நாய்
நன்றியுடன் வாலை ஆட்டும் – எங்கள் வீட்டு நாய்"

என்று "விழிசைச் சிவம்" தனது குழந்தைப் பாடலை இயற்றினார். தனக்கு உணவு வரப் போகிறது என்று தெரிந்தவுடன் நாய் ஆனந்தத்தினால் வாலை ஆட்டும். அப்போது மட்டுமில்லை. பிறகும் பிள்ளையைக் கண்டவுடன் வாலை ஆட்டும். அது நன்றியுடன் இருக்கிறது என்று விழிசைச் சிவம் பாடுகிற போது, "நன்றியுணர்வு" என்ற விழுமியம் கற்பிக்கப் படாமலே பிள்ளையைச் சென்றடைகிறது. செய்ந்நன்றி அறிதல் என்பதற்கு ஒரு அதிகாரமே வைத்த வள்ளுவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்" என்பார்.

பிறந்த காலத்தில் இருந்து செல்லப்பிராணிகள் இருக்கும் வீட்டிலே வளரும் பிள்ளைகளுக்கு "ஒவ்வாமை" ஏற்படும் சந்தர்ப்பம் குறைவு என வைத்தியர்கள் வேறு. நிரூபித்திருக்கிறார்கள். செல்லப்பிராணிகளோடு விளையாடும் நேரத்தில் செறாரோனின் (Seratonin), டோபமீன் (Dopamine) ஆகியவற்றின் சுரப்பு அதிகரிப்பதனால் பிள்ளைகளின் மனம் அமைதியடைவதுடன் மனநிலையும் உயர்த்தப்படுகிறது. இதனால் பொதுவாக வாழ்வின் நெருக்கீடு குறைந்து. கோட்டிசோல் (Cortisol) மட்டம் தாழ்கிறது. ஒரு செல்லப் பிராணி பற்றி நினைக்கும் போது, அது பற்றிப் பேசும் போது கூட்ட கோட்டி சோல் மட்டம் குறையும்.

இப்படிப் பலவேறு நன்மைகள் ஏற்பட்டாலும் கூடச் சிறு பிள்ளைகளைச் செல்லப் பிராணியுடன் தனியாக வீட்டில் விட்டுச் செல்வது பற்றிப் பெற்றோர் கவனம் செலுத்தத் தான் வேண்டும். சில வேளை அது ஆபத்தாகலாம். குறிப்பாக அவை சாப்பிடும்போது, நித்திரை செய்யும் போது சுகயீனமாக இருக்கும் போது அல்லது களைத்திருக்கும் போது அவற்றைக் குழப்ப வேண்டாம் என்ற உறுதியான அறிவுறுத்தலைப் பிள்ளைக்கு வழங்க வேண்டும். காதைப்பிடித்துக் கிள்ளுதல், காலைப்பிடித்து இழுத்தல், அடித்தல் போன்ற இம்சைகளைச் செய்தாலும் அவை கோப மடையக் கூடும். அவற்றுக்குத் தெரியாமல் மறைவாக நின்று எதையாவது எறிய முற்பட்டாலும் அவை பதற்ற மடையும். ஆகவே பெற்றோரின் தொடர்ச்சியான மேற்பார்வை இருக்கத்தான் வேண்டும்...

எப்போதும் வீட்டிலேயே இருக்கும் நாய் என்றாலும் கூட பிள்ளையின் முகம் நாய்க்கு அண்மையில் போகாமல் பார்ப்பது நல்லது. செல்லப்பிராணியுடன் விளையாடிய பின் கையை அல்லது முழு உடலையும் கழுவுமாறும் கூற வேண்டும். தாய் நாய் அருகிருக்கும் போது எக் காரணம் கொண்டு அதன் குட்டி ஒன்றைத் தூக்க வேண்டாம் என்று கற்றுக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு நாய், மாடு, ஆடு, பூனை, முயல், கிளி என்று எந்தப் பிராணி வீட்டில் இருந்தாலும் அவை பற்றிய பாதுகாப்புத் தொடர்பான அறிவு பெற்றோருக்கு இருக்க வேண்டும் என்பதுடன் அவை தொடர்பாகப் பிள்ளைக்குச் சரியாகச் சொல்ல வேண்டும்.

பிள்ளைகளின் பாதுகாப்பு என்று வரும் போது பெற்றோருக்கு முதலில் ஞாபகம் வரவேண்டிய முக்கிய விடயம் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைகள் பற்றியதாகும். குறிப்பாகப் பாலியல் வன்முறைகளுக்கு அவர்கள் உட்படாது தவிர்ப்பது, அதற்குத் தேவையான பாலியல் கல்வியையும் பாதுகாப்பு முறைகளையும் ஊட்டுவது, கண்காணிப்பது ஆகிய விடயங்களில் பெற்றோர் அக்கறையின்றி இருந்து விடக்கூடாது. மனவடுவுக்குரிய நெருக்கீட்டுச் சம்பவங்கள் மீளுப் பெறப்பட முடியாதவை.

உலகளாவிய ரீதியில் பார்த்தால் கூடப் பத்துப் பிள்ளைகளில் ஒரு பிள்ளை தனது பதினெட்டாவது பிறந்த தினத்தை அடையமுன் ஒரு முறையாவது இத்தகு வன்முறை ஆளாகிறது என்று தரவுகள் காட்டுகின்றன. எமது நாட்டில் இத்தகு சம்பவங்களுக்கு எதிராக உத்தியோக பூர்வமான முறைப்பாடுகள் செய்யப் படுவது குறைவு. அப்படி இருந்தும் 2021ம் ஆண்டு 1304 பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் பதியப்பட்டுள்ளன. "கௌரவம் பேணல்" என்ற பெட்டகத்தில் வைத்து பூடப்படாத சம்பவங்கள் மட்டுமே இந்த எண்ணிக்கையில் அடங்கும். இச்சம்பவங்கள் நீதி, நேர்மையுடன் விசாரிக்கப்பட்டு நிறைவுக்கு வருவது மிக மிக அரிது. அதற்கிடையில் யார் யாரோ "பெரும் புள்ளிகள்" தலையிட்டுச் சமாளித்து விடுவார்கள். மனிதன் மனச் சாட்சி இல்லாதவன் என்பதற்கு அதிக ஆதாரங்கள் தேவையில்லை. மனச் சாட்சி சந்தோஷமாக "நோட்டுக் கட்டுக்குள் குந்து கொண்டு குளிர் காயும்."

ஆகவே பாலியல் கல்வியை யாராவது சொல்லிக் கொடுப்பார்கள் தானே என்று பெற்றோர் இருந்து விட முடியாது. இருந்து விடக் கூடாது. தங்கள் பிள்ளை சார்ந்த சில பொறுப்புக்களையாவது அவர்கள் சுமந்தே ஆக வேண்டும். ஒரு வேளை பாடசாலையில் பாலியல் கல்வி கற்பிக்கப்பட்டிருந்தால் (முறையான ஒரு ஆசிரியரால்) அத்துடன் முரண்படாதவாறு கற்பிப்பதும் முக்கியம். எப்படித் தொடங்கி எவ்வாறு கற்பிப்பது என்று தெரியாவிட்டால், Jayneen Sanders எழுதிய 'Some Secrets Should never be Kept" போன்ற நூல்களை வாசிக்கலாம். அந்நூலில் உள்ள விடயங்கள் மூன்று வயதுக்கு மேற்பட்ட எந்தப் பிள்ளையும் அறியக் கூடியவையே!

உடலின் சில பகுதிகளை யாரும் தொடுவதை அநுமதிக்க வேண்டாம் என்றும் அப்படி நடந்தால் உடனே பெற்றோரிடம் அல்லது நம்பிக்கைக்குரிய அதிகாரம் உள்ள பெரியவர் ஒருவரிடம் அச்சமின்றித் தெரிவிக்குமாறும் கட்டாயம் பிள்ளைக்குச் சொல்ல வேண்டும்.

துஷ்பிரயோகம் ஒன்று நடைபெறப் போவதாக அல்லது நடைபெறுவதாக அல்லது நடைபெறுவதாக உணர்ந்த மறுகணமே "இல்லை" என்று சொல்லவும், உடனே அவ்விடத்தை விட்டு விலகிச் செல்ல உச்சபட்ச முயற்சி எடுக்கவும் அறிவுறுத்த வேண்டும்.

பாடசாலையில் அவசியமற்ற கேலிகளை எதிர்கொள்ளவும், தாங்கிக் கொள்ளவுமான வலுவைப் பிள்ளைக்கு வழங்கலாம். ஆயினும் உணர்வுகள் பாதிக்கப்படும் போது அது பற்றி மனம் திறந்து யாரிடமாவது பேசுமாறு ஊக்கப்படுத்த வேண்டும். அந்த நபர் தயாராகவும் இருக்கலாம். பாடசாலையின் சீர்மிய ஆசிரியராகவும் இருக்கலாம்.

"எங்கள் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தப்போகும் விடயம் தொடர்பாக நாம் மௌனமாக இருக்கும் நாள், எமது வளமான வாழ்வின் முடிவு தொடங்கும் நாள்" என்று மார்ட்டின் லூதர் கிங் கூறியதை வீட்டின் முக்கியமான ஒரு பார்வைத் தளத்தில் எழுதி விடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் மெல்ல மெல்லக் கட்டிளமைப் பருவத்தினுள் நுழைவார்கள் என்பது மனதில் இருக்க வேண்டும். கட்டிளமைப்பருவம் என்பது களவுகள் நிறைந்த பருவம்! உண்மைதான். அதே சமயம் "நான் யார்?" என்ற கேள்விக்குப் பதில் தேடும் பருவம். இக் ககாலப் பகுதியில் "பருவம் அடைதல்" நிகழ்வதால், உடலியல், பாலியல், அறிவியல், ஆன்மிகம் சார் சிந்தனைகள் மன எழுச்சிகள் எனப்பல விடங்களிலும் அதிக மாற்றங்கள் நிகழும். ஓமோன் சுரப்புகளில் திடீர் வேறுபாடுகள் ஏற்படுகின்றன.

"அன்றவர் மலரென அவள் முகம் பொலி
நின்றனள் பதுமை போல் நிலவொளி மூரல்
முன்றரு மொளியினால், மொழியிலாற் பேசும்
வென்றிடு விழியினால், பேசினாள் விளம்பாள்"

என்று கட்டிளமைப் பருவப் பெண் பிள்ளை ஒருவரை விபரிப்பார். மதுரைப் பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்கள்.

இரவில் தாமதமாக நித்திரைக்குப் போகவும் காலையில் தாமதமாக எழுப்பவும் இவர்கள் முனையும் போது, "மைந்தனே யானும் உன்போல் வாலிபம் கடந்து வந்தேன்" என்பது பெற்றோருக்கு நினைவிலிருக்க வேண்டும். "சுடாது கண்ணிமை கொள்ளாது நித்திரை" என்பது காதல் வசப்பட்ட கட்டிளமைப் பருவத்தை வர்ணிக்கும் வரி. சாதாரணமாக இவர்களுக்குப் பிள்ளைப் பருவத்தை விட அதிக நித்திரை தேவை (9மணித்தியாலம்) என்பது பெரும்பாலான பெற்றோருக்குத் தெரிந்திருப்பதில்லை.

மூளையில் இவர்களின் முன் நுதல் சோணை மேற்பட்டை இன்னும் முழுமையாக விருத்தி அடைந் திருக்காது. அதனால் சிறு நெருக்கீடுகளின் போதும் அதிக உணர்ச்சிக் கொந்தளிப்பைக் காட்டக் கூடும். கோபப்படக் கூடும். அவர்களுக்கு நெருக்கீடு தரும் விடயங்கள் தொடர்பாகவும் பெற்றோர் அதிக நேரம் அமர்ந்திருந்து கதைக்க வேண்டும் நிலைமைகள் எதிர்காலத்தில் சரியாகும் என்று நம்பிக்கை தரும் வகையில் பேச வேண்டும். அவர்கள் கோருகின்ற அல்லது அவர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்க வேண்டும். நெருக்கீடு ஒன்றை எதிர் கொள்ளும் தருணத்தில் தம்மைச் சிறிது நேரம் தனித்திருக்க விடும்படி கேட்டால் விட்டு விடலாம். ஆயினும் அவர்கள் படுக்கும் அறையில் தொழில் நுட்பச் சாதனம் எதுவும் இல்லாதிருப்பதைப் பெற்றோர் உறுதிப்படுத்துவது நல்லது.

பிள்ளைப் பருவத்தில் இலகுவாகப் பின்பற்றப் பட்டு வந்த வீட்டின் விதிமுறைகள் சில பிள்ளை பதின்ம வயதை அடையும் போது மீறுப்படலாம். அவர்கள் தமது சொந்த விவகாரங்கள் தொடர்பான முடிவுகளைத் தாமே எடுக்க விரும்புவதும், எடுப்பதும் நண்பர்களின் ஆலோசனைகளுக்கே அதிக மரியாதை கொடுப்பதும் பெற்றோருக்குப் பெரும் அதிர்ச்சியாக அமையலாம். அவர்களுக்கு இது குழப்பம் நிறைந்த பருவம் என்பதைப் பெற்றோர் புரிந்து கொண்டு, வாழ்வில் "தனித்தியங்கு பருவம்" என்ற அடுத்த கட்டத்தை நோக்கி வரத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்கிறார்கள் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கட்டிளமைப் பருவப்பிள்ளை ஒரு பெரிய நெருக்கீட்டினுள் மூழ்கி இருக்கும் போது, "என்ன நடக்குது இஞ்சை?" "உனக்கு என்னதான் நடந்திட்டுது இப்ப எண்டு கேக்கிறள்" "என்ன? கப்பலே முழுகிப் போட்டுக் கொண்டு திரியிறாய்?" "தொட்டதுக்கெல்லாம் சள் புள் எண்டு பாஞ்சு கொண்டு திரியிறாய். என்ன பேயே பிடிச்சிட்டுது உனக்கு?" என்பது போலப் பெற்றோர் கதைப்பது நிலைமையை மேலும் இறுக்க மடையச் செய்யும்.

"நான் உனக்கு எப்பிடி உதவலாம்?" என்று கேட்டு உரையாடலைத் தொடங்குவது புத்திசாலித்தன மானது. தொடர்பாடல் நிலை எப்போதும் சாத்தியமாகும் படி பெற்றோர் தான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

"நல்லதோர் வீணை செய்தே அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?"

நல்ல பிள்ளைகளை நல்ல பிள்ளைகளாகவே காப்பாற்றி வளர்த்தெடுத்தல் பெற்றோருக்கு மிகப் பெரிய பொறுப்புத்தான்!

(தொடர்ந்து பேசுவோம்)



இப்னு அஸுமத்தின் "நீ கூறுகிறாய் இறந்துவிட்டாயாம் நீ" சிங்களக் கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு கவிதைகளின் தொகுப்பு வெளியீடு 19.02.2023 அன்று சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தில் தி.ஞானசேகரன் தலைமையில் நடைபெற்றது. அறிமுகவுரையை மேமன்கவியும், நயவுரையை பிரமிளா பிரதீபனும் நிகழ்த்தினார்கள்.




இயல்வாணனின் "புலர்காலையின் வலி" சிறுகதைத்தொகுப்பு அறிமுகவிழா 19.02.2023 அன்று இமையாணன் கலைமகள் முன்பள்ளி மண்டபத்தில் சு.குணேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. விமர்சன உரைகளை சித்தாந்தன், இ.இராஜேஸ்கண்ணன் நிகழ்த்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.கே.முருகானந்தன்.

# த.கலாமணியின் அரண்




வாழ்க்கை என்பது சிக்கல்கள் அற்ற ஒரு நேர்ப்பாதை அல்ல. அது குறுக்கும் மறுக்குமாக ஓடக்கூடியது. ஆளுக்கு ஆள் மாறுபடுவது மட்டுமின்றி நேரத்திற்கு நேரமும் கூட வேறுபடும். அடிப்படையான மாற்றங்களுக்கு அப்பால் அதைப் பார்ப்பவரின் பார்வையாலும் பாரிய வேறுபாடுகள் தோற்றம் பெறும். ஆனால் பெரும்பாலானவர்களுக்கு சாப்பிடுவது தூங்குவது தொழில் செய்வதுடன் வாழ்க்கை அடங்கி அமுங்கிவிடுவதும் உண்மைதான்.

மற்றவர்களின் வெளிப்படையான உணர்வுகளை புரிந்துகொள்வது பெரும்பாலானவர்களுக்கு இயல்பாகவே கிடைத்துவிடும். ஆனால், இவற்றிற்கு மேலாலாக அடக்கி வாசிக்கப்படும் மகிழ்ச்சி, சோகம், பாசம், கபடம் போன்ற உணர்வுகளை புரிந்துகொள்ள கூடிய ஆற்றலும் கூட பலருக்கு உண்டு. ஆனால் உணர்வுகளை அமுசடக்கி வெளிப்படுத்தாத பொம்மை முகங்களுக்குப் பின்னால் உள்ள நிண்டுக உணர்வுகளையும் புரிந்து கொள்வது ஒரு சிலருக்கு மட்டுமே கிடைக்கும் ஆற்றலாகும்

அத்தகைய ஆற்றல் பெற்றவர்களில் இந் நூலாசிரியர் கலாமணியும் ஒருவர். இயல்பாகக் கிடைத்த நுண்ணுணர்வு ஆற்றலுடன் இவர் கற்றுக் கொண்ட உளவியல் பின்புலமும் இதற்கு கைகொடுத் துள்ளதாக நம்பலாம்.

அரண் என்ற இவரது புதிய சிறுகதைத் தொகுப்பை வாசிக்கும் போது அவர் தனது பாத்திரங்களின் செயற்பாட்டிற்கு பின்னே மறைந்திருந்த உணர்வுகளை வாசகனுக்குப் புரிய வைப்பதுடன், எடுத்த கதையை ஆர்வத்துடன் படித்து முடிப்பதற்கு ஏற்றவாறு ஒரு வித உளவியல் முடிச்சவிழ்ப்பு முறையில் வளர்த்துச் செல்வதைக் காண முடிந்தது. அதுவே இத்தொகுப்பின் வெற்றிக்குக் காரணம் எனலாம்.

நூலாசிரியர் இந்த மண்ணின் மைந்தர். இந்த மண்ணின் மணத்தை சுவைத்து வாழ்பவர். அது போலவே அவரது படைப்புகள் அனைத்துமே அவர் வாழ்ந்த மண்ணின் கதைகள்தான். யாழ் மண்ணின் கதைகள். அந்த மக்களின் கதைகளை ரசனையோடு பதிந்திருக்கிறார். போர் உக்கிரம் மோசமாயிருந்த ஒரு காலகட்டத்தில் வெளிநாட்டில் வாழ்வதற்கான ஒரு வாய்ப்புக் கிட்டியபோதும், அதை உதறித்தள்ளி விட்டு தாய்மண்ணை நாடி வருமளவிற்கு தாய் நாட்டை உயிராக நேசிப்பவர்.

இதை “அவா” என்ற கதையின் ஒரு பாத்திரத்தின் ஊடாகவும் வெளிப்படுத்தியுள்ளதை இவ்விடத்தில் சுட்டிக் காட்டலாம்.

“உனக்கு என்ன விசரா? எல்லோரும் யுத்தம் நடைபெறும் இடத்தைவிட்டு எப்படி வெளியேறுவது என்று நினைப்பார்கள். நீ யுத்தப் பிரதேசத்தில் பிரவேசிக்கப் போகிறேன் என்று சொல்கிறாய். முட்டாள்தனம்.

இல்லை மார்சியா நான் எவ்வளவு விரைவாகச் செல்ல முடியுமோ அவ்வளவு விரைவாக ஊருக்குச் செல்ல வேண்டும்.”

இப்படிச் சொல்வதால் இவரது படைப்புகள் விடுதலைப் போராட்டம் சார்ந்தவை என்றோ இவர் விடுதலைப் போராட்டத்தின் பங்காளியோ என எண்ணிவிட வேண்டியதில்லை.

மாறாக இங்கு வாழ்ந்த, வாழ்கிற மக்களின் அன்றாட வாழ்வின் சில பக்கங்களையே இவரது படைப்புகள் சித்திரிக்கின்றன. சிறுகதை என்பது சில சம்பவங்களின் நேர்த்தியான தொகுப்பு என்றே பல படைப்பாளிகளும் கருதுகின்ற நிலையில், அவர்களின் அகக்கிடங்குகளில் புதைந்து மறைந்து கிடப்பவற்றை மயிலிறகால் நீவியெடுத்து, பாணில் பட்டர் ஜாம் தடவுவது போல இனிக்க வைத்து வாசகர் முன் படைக்கிறார். இதனால் வாசகனின் நெஞ்சுக்கு நெருக்கமாகிறது. சுவைத்து மகிழ்வது எம் பங்காகிறது.

அத்தோடு கிராமத்துச் சொல்லாடல்களையும் பொருத்தமான இடங்களில் தூவி அந்த மண்ணின் வாழ்வோடு எம்மையும் இணைய வைத்துவிடுவார். உதாரணமாக கபச்சுரம், வடுவா, நாண்டிக்கொண்டு, ஊர்த்தோம்பு, உறுளோசு, காத்துக் கறுப்புகள், திடுக்கூறு போன்ற கிராமியச் சொல்லாடல்களைக் குறிப்பிடலாம். இவை மண்ணின் மணத்தை அள்ளிச் சொரிகின்றன.

கலாமணி தனது படைப்புக்களோடு வாசகனை ஈர்த்துக்கொள்வதில் வல்லவர் என்றோம். எந்த ஒரு இலக்கியப் படைப்பிலும் அதன் ஆரம்ப வரிகள் முக்கியமானவை என்பதைப் புரிந்துகொண்ட படைப்பாளி. அதைக் கவனத்தில் கொண்டு எழுதுவதால் படைப்பின் ஆரம்ப வரிகளிலிருந்தே வாசகர்கள் அவரது படைப்புகளோடு ஒன்றிவிடுகிறார்கள்

“தூரத்தில் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்கிறது. இவள் உறக்கம் கலைந்து எழுந்தாள். . . .


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

....விடிகாலைக்கு முன்பாக நாய்களின் குரைப்புச் சத்தம் எழுவதும் பின்பு நிறைவேறாத ஆசையொன்றைக் குறித்துச் சலிப்புக்கொள்வதுமான இந்தப் பழக்கத்துக்கு இவள் அடிமையாகப் போயிருந்தாள்.."

"இன்னும் வரக் காணனே" என்ற கதையின் இந்த ஆரம்ப வரிகளை சில வாசகர்கள் சாதாரணமாகக் கடந்து சென்றுவிடுக் கூடும். ஆனால் ஒரு ஆழமான வாசகனால் அப்படிப் போய்விட முடியாது. அந்த வரிகளுக்குள் ஒரு சூட்சுமம் இருப்பதை உணர்ந்து கொள்வான். ஆயினும் கதாசிரியர் சம்பவங்களை வேறு கோணத்தில் நகர்த்திச் செல்வதால் அந்த ஆசிரியை யின் பாடசாலை அனுபவங்களில் மூழ்கி விடுவார்கள். இறுதியை அண்டிய பகுதியிலேயே முடிச்சு அவிழ்கிறது. ஒரு நல்ல கதையைப் படித்த உணர்வு கிடைத்தது.

"கிச்சா"... காதருகே குனிந்து யாரோ அழைப்பது போலிருந்தது.

இரு புறமும் திரும்பிப் பார்க்கிறேன். என்னருகே எவரும் இல்லை..."

காதருகே குனிந்து அழைத்த சத்தம் கேட்ட போதும் யாரும் அருகில் இல்லை என்றால் அது எப்படிச் சாத்தியமாகும் என்று வாசக மனம் குறுகுறுக்கும். மனப்பிரமையா?, அமானுஷக் குரலா என்ற யோசனை ஏற்படும். மேற் கூறிய ஆரம்ப வரிகளுக்கான விடை "தோழமை" சிறுகதையின் பிற்பகுதியில் கிடைக்கும் போது நீங்கள் ஆச்சரியத்தில் மூழ்கிப் போவீர்கள்.

"குலக்கொழுந்து" கதை இப்படி ஆரம்பிக்கிறது.

"அம்மாவாக என்னால் எதுவுமே செய்ய முடிவதில்லை. மிஞ்சிப் போனால் அந்தப் பாவப் பட்டவனை நினைத்து உருகத்தான் முடியும்.." அம்மாவால் ஏன் முடியவில்லை. அவள் உடலில் ஏதாவது பாதிப்பா? அல்லது அவள் அந்த வீட்டில் விலக்கப்பட்டவளா? என்று பலவாறு வாசகனைச் சிந்திக்க வைக்கும். ஆனால் காரணம் புரியும் வேளை யில் நாமும் அவளுடன் சேர்ந்து அவன் மீது பச்சாபிதப் படத்தான் முடியும்.

இவரது பல கதாபாத்திரங்கள் வித்தியாச மானவை. இதே "குலக்கொழுந்து" கதையிலும் கதாசிரி யர் ஆச்சி ரீச்சர் பாத்திரத்தை வேறு கோணத்தில் படைத்திருந்தார். தந்தையை இழந்திருந்த தனது ஒரே ஒரு பேரனுக்கு கதைகள் சொல்லமாட்டார். சிரித்துப் பேசமாட்டார். பாசத்தை அறவே காட்டாது மிகக் கண்டிப்புடன் நடந்து கொள்வார். ஆனால் உணவு உடை தூக்கம் கல்வி போன்ற எதிலும் குறைவிடுவ தில்லை. மிகச் சிறந்த முன்னைநாள் ஆசிரியையான அவர் ஏன் தனது பேரனுடன் கடுப்பாக நடந்து கொள்கிறார் என்பது அவனது தாய் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் உட்பட அனைவருக்கும் புதிராகவே இருந்தது. அவர்களுக்கு அவளில் வெறுப்புக் கூட ஏற்பட்டது. ஆயினும் கதை இறுதியானது அவளை நெஞ்சார வாழ்த்த வைத்தது.

இதேபோல "காரணன்" கதையில் வரும் பொன்னாத்தைக் கிழவி மற்றொரு வகை. பேய்களைப் பற்றி தானே நேரே பட்டு அனுபவித்து போல கதை கதையாகச் சொல்வாள். இட்டுக்கட்டிப் பேசுவதில் விண்ணாத்தை.

இவரது சில கதைகளில் மருத்துவ மற்றும் உடலியலில் ரீதியான கருத்துக்கள் வருவதையும் காண முடிந்தது. அவற்றை அவர் வெளிப்படையாகக் கூற வில்லை. கூறவும் கூடாதுதான். ஆனால் கதையோடு கதையாக கலந்து வந்து வாசகர்களுக்கு அருட்டு ணர்வை ஏற்படுத்தி அவர்களது அறிவு வெளியை அகலிக்கும் வகையில் அமைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. மருந்துவனான நான் ஆச்சரியத்தோடு கண்டு மகிழ்ந்தேன்.

பருவமடைதல் என்பது பெண்களின் வாழ்வில் ஒரு முக்கிய திருப்பமாகும். ஆண்களிலும் அது இருந்தா லும் அது அதிகம் பேசப்படுவதில்லை. "அரண்" என்ற கதையில் பிரதான பாத்திரமாக தாய் இருந்த போதும், மற்றொரு முக்கிய பாத்திரமாக அவரது மகளும் வருகிறாள்.

... உடலில் அப்படி ஒரு வாளிப்பு ...

...வழமையான பரபரப்பும் வேகமும் இன்றி ஒவ்வொரு செயலிலும் அவள் காட்டும் நிதானம்....

...பெரிய மனுசித்தனம் காட்டும் ஆரவாரமற்ற நடை...

...கலகலவென ஒலித்து வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு உதடுகளில் மென்மையாக உதிர்க்கும் புன்னகை...

இவற்றைப் போல இன்னும் பல பருவகால மாற்றங்களை, உடல் ரீதியாக, உள ரீதியாக, செயற் பாட்டு ரீதியாக என physical and psychological changes during puberty யை இக்கதையில் மிக அற்புதமாக விபரிக்கிறார்.

பருவமடையும் காலத்தில் பெரும்பாலும் மற்றவர்களில் தங்கியிராது சுதந்திரமாக தானே இயங்க வேண்டும் என்ற உணர்வே ஏற்படும். அதே நேரம் தனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்ற எண்ணமும் ஏற்படுவதுண்டு. "..அம்மா, உங்கடை காலிலை உங்களாலை நிக்க முடிஞ்சிருக்கலாம். ஆனா எனக்கு இனி அப்பா வேணுமம்மா.."

இதே போல நாம் ஏற்கனவே பார்த்த ஆச்சி ரீச்சரின் கதையை வாசித்த போது அவள் Post-traumatic stress disorder (PTSD) அதிர்ச்சிக்குப் பின்னான மன அழுத்தம் என்ற உளவியல் தாக்கத்திற்கு ஆளா யிருப்பதை என்னால் உணர முடிந்தது.

இந்த உளவியல் தாக்கமானது பொதுவாக ஒருவருக்கு மிக ஆபத்தான, பீதி அளிக்கக் கூடிய, உயிராபத்தை விளைவிக்கக் கூடிய, அல்லது மனதைக் காயப்படுத்தக் கூடிய சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்படு கின்ற உளவியல் பாதிப்பாகும். இந்தப் பாதிப்பு உள்ள வர்கள் சிறிய விடயங்களுக்கும் பதட்டப்படவும் பீதியடையவும் கூடும். இதனால் எந்நேரமும் அப்பாதிப்பு ஏற்படாமல் பாதுக்காப்பாக இருக்க வேண்டும் என்ற மனநிலை ஏற்பட்டு அதற்கேற்பவே இயங்க முனைவார். சில்லறை விடயங்களுக்கும் எரிச்சலும் பதற்றமும் அடைவார். திடீர் திடீரென கடும் கோபம் ஏற்படலாம். மற்றவர்கள் செயற்பாடுகளில் தலையீடு செய்து ஒடுக்க முனையவும் கூடும். ஒரு விதமான குற்ற உணர்வும் ஏற்படுவதுண்டு.

ஆச்சி ரீச்சருக்கு ஏற்பட்ட தாக்கம் என்ன? அதனால் அவளும் அவளது பேரனும் எவ்வாறு பாதிக்கப்பட்டனர் என்பதை கதையை படிக்கும் போது நீங்கள் புரிந்து கொள்வதுடன் அந்த உளவியல் பிரச்சனை பற்றிய தெளிவும் ஏற்படும்.

தாழ்வு மனப்பான்மை என்பது மற்றொரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவியல் தாக்கம். தாழ்வு மனப்பான்மை (inferiority complex) என்பது தன்னைத்தானே குறைத்து மதிப்பிடுகின்ற ஒரு மனநிலை. தான் மற்றவரை விட ஏதோ ஒரு விதத்தில் குறைந்திருப்பதாக எண்ணும் திருப்தியற்ற மனநிலையால் எழுகின்ற உணர்வு. பெரும்பாலும் தாழ்வு மனப்பான்மை உள்ளவர்கள் தம்மை வேறொருவருடன் ஒப்பிட்டுப் பார்ப்பதால் மனம் வேதனைப்படுவார்கள். தாழ்வு மனப்பான்மை உள்ளவர்கள் தாம் குறைவானவர்கள், கீழ்நிலையில் உள்ளவர்கள், எதற்கும் பிரயோசனம் இல்லாதவர்கள் என்றே தம்மைப் பற்றிக் கருதுவார்கள். பலர் மனஅழுத்தத்தில் உழல்வார்கள். பதற்றம், படபடப்பு, சோர்வு, தூக்கக் குறைபாடு போன்ற அறிகுறிகள் இருக்கலாம். மாறாக சிலர் மற்றவர்களிடத்து கோபப்படுவதும் முரட்டுத்தனமாக நடந்துகொள்வதும் உண்டு.

அரண் என்ற கதையில் அந்த பெண் குழந்தை இப்படிச் சொல்கிறாள்.

"... இல்லையம்மா... அப்போ அப்பாவுக்கு நல்ல வேலையுமில்லை நீங்கள் இஞ்சினியராக வேலை பார்க்க தன் படிப்புக்கேற்ற வேலை தனக்குக் கிடைக்கவில்லையே என்ற தாக்கம் இருந்திருக்கும்தானே. நீங்கள் எதுவும் சொல்லப் போக அந்த ஆற்றாமையிலை அப்போது அங்கிருந்த சுடு தேத்தண்ணியை தன்நிலை இழந்து எற்றியிருக்கலாம்தானே..."

இந்த சொல்லாடல் தாழ்வு மனப்பான்மை என்ற சொல்லைப் பயன்படுத்தாவிட்டால் கூட அதையே உணர்த்துகிறது.

இவரது படைப்புகள் பிரச்சார நோக்குக் கொண்டவை அல்ல என்பதை ஏற்கெனவே கண்டோம். அதே நேரம் சில கதைகள் நல்ல வழியைச் சுட்டிக் காட்டுவதையும் சொல்லலாம்.

பேய் பிசாசு, முனி போன்றவற்றிலான நம்பிக்கை இன்னும் பரவலாக இருக்கவே செய்கிறது. இதனால்தான் பேய் ஓட்டவேண்டும் என்று மாந்திரிகர்களை நாடும் வழக்கமும் மறையவில்லை. அறிவியலுக்கு ஒவ்வாத இக்கருத்துக்களிருந்து மக்களை மீட்க வேண்டும் எனப் பல பெரியோர்கள் பாடுபட்டதை நாம் அறிவோம். காரணன் என்ற சிறுகதையூடாக கலாமணியும் அப்பணியை கலாபூர்வமாக செய்துள்ளார்.

பீதியை எழுப்பக் கூடிய இந்தக் கதையில் மென்மையான நகைச்சுவையும் கலந்து வரும்படி படைத்திருப்பதுடன் கதையின் காலத்தையும் களத்தையும் முன்பின் நகர்த்தி படைப்பில் ஒரு மாயாஜாலத்தை கொண்டு வருகிறார். மேலோட்டமாகப் படித்தால் கதையின் புதிர் தெளிவாகாது. ஆழ்ந்து படிக்க வேண்டும்.

நூலாசிரியர் தாய் மண்மேல் பற்றுக் கொண்டவர். அதனால் இந்த மண்ணின் மக்களையே தனது படைப்புகளில் பேசுகிறார் என்றேன். உண்மைதான்.

அவர் சில காலம் வெளிநாட்டிலும் வாழ்ந்திருக்கிறார். அங்கு ஏற்பட்ட அனுபவங்களை வைத்து நூலின் கடைசி இரு கதைகளையும் படைத்திருக்கிறார். அதில் ஒன்று முதியோர் இல்லங்கள் பற்றியது. மேலை நாட்டு முதியோர் இல்லங்களில் தங்குபவர்களின் இட வசதி. உணவு, மருத்துவ உதவி போன்றவை மிகச் சிறப்பாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே அங்கு வாழும் முதியவர்கள் மகிழ்ச்சியோடு வாழ்வார்கள் என அவரைப் பார்க்க வந்த அவரது மகனின் நண்பர் எண்ணியிருந்தார்

ஆனால் இவரிடம் அவர் கேட்ட உதவி அவரை அதிர்ச்சியுற வைத்தது.

"தம்பி மாசத்திற்கு ஒரு தடவையாவது என் பேரப் பிள்ளைகளைக் கொண்டு வந்து எனக்குக் காட்டச் சொல்ல முடியுமா?" ஆம் எவ்வளவுதான் வசதிகள் இருந்தாலும் அன்புக்கும் பாசத்திற்குமாக மனம் எவ்வளவு ஏக்கம் கொள்கிறது என்பதை இந்த ஒரு வசனம் சொல்லிவிடுகிறது.

மற்ற வெளிநாட்டுக் கதை தேசிய பாதுகாப்பு அதற்கான நவீன இணைய வழி தொழில் நுட்பம் பற்றியது. விஞ்ஞானம், கணனி, வலையமைப்பு, ஊடுருவல் போன்ற பல விடயங்களை அடக்கிய மிக வித்தியாசமான கதை. ஒரு எள்ளலுடன் முடிவுக்கு வந்தமையும் சுவார்ஸமாக இருந்தது.

ஜீவநதி வெளியீடான நூறு பக்கங்களைக் கொண்ட இந்த சிறுகதைத் தொகுப்பில் மொத்தம் பத்துக் கதைகள் அடங்கியுள்ளன. அவற்றில் ஒரு சில கதைகள் பற்றி இக்கட்டுரையில் பேசப்படவில்லை. அவை பேசப்படத் தேவையற்றவை என்பதால் கருத்துக் கூறவில்லை என எண்ணிவிடாதீர்கள். உண்மையில் எல்லாக் கதைகளுமே மிகச் சிறப்பாக வார்க்கப் பட்டுள்ளன. அனைத்தையுமே இரசித்துப் படித்தேன். ஆயினும் கட்டுரையின் விரிவாக்கம் அஞ்சி தனித்தனிக் கதைகளாகப் பேச முடியவில்லை. சில பொதுவான அம்சங்களையே கட்டுரையில் எடுத்தாள முடிந்தது. ●



ரஜிதா அரிச்சந்திரனின் "நிலாச்சோறு: கவிதைநூல் வெளியீடு 18.02.2023 அன்று கலைத்தூது அழகியற் கல்லூரியில் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. வெளியீட்டுரையை தி.செல்வமனோகரனும் மதிப்பீட்டுரையை புயல்நேசனும் ஏற்புரையை நூலாசியரும் நிகழ்த்தினார்கள்.



சோ.பத்மநாதனின் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் 15.2.2023 கலாநிதி. எஸ்.ரகுராம்தலைமையில் நடைபெற்றது. உரைகளை கலாநிதி எம்.திருவரங்கன், கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன். பேராசரியர் எஸ்.சிவலிங்கராசா ஆகியோர் நிகழ்த்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா.இரகுவரன்

# புதிய திசையில் விரியும் டொக்ரர் எஸ்.பஞ்சகல்யாணியின் கதைமரம் - சிறுவர்கதைத்தொகுதி




சிறுவர் கதை கேட்பதில் தீராத தாகம் கொண்டவர்கள். சிறுவர்களிடம் இயல்பாகவே காணப்படும் "அறியும் ஆவல்" கதைகளால் பெருமளவு நிரப்பப்படுகிறது. கதை சொல்லியொருவர் கதை சொல்வதின் மூலமாகவோ, கதைகளை ஆர்வத்துடன் வாசிப்பதன் மூலமாகவும் சிறுவர்கள் சாதாரணமாக கதையுலகுடன் தொடர்பு கொள்ளுகின்றனர். தொலைக்காட்சியும், இணையமும் தற்காலத்தில் பெரும் பங்கை வகிக்கின்றது. சிறுவர்கதையானது புதியவிடயங்களை அறிந்து கொள்ளவும், ஏராளமான கேள்விகளுக்கு இடமளிப்பதாகவும் இருப்பதுடன், சிறுவர்களின் நற்பண்புகளை வளர்த்து, நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப சமூகமயப்படுத்தலுக்கான வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள்சபை சிறுவரின் வயதெல்லை 18 வயதாகக் குறிப்பிடுகிறது. ஆனால் சிறுவர்கதை முதலான சிறுவர் இலக்கியங்கள் 12 வயது வரையுள்ளவர்களுக்காகவே படைக்கப்படுவதைக் காணலாம்.

சிறுவர்கதைகள் வேடிக்கை, விநோதம், இலகுவானவாசிப்பு, சிறியகதைகள், சிறுவர்களை ஆர்வமூட்டிப் பிடித்து வைத்திருக்கும் மொழிப்பயன்பாடு என்பன இணைந்து சிறுவர் வாசிப்பேரார்வத்தை ஏற்படுத்துவனவாக இருக்க வேண்டும்.

பொதுவாக தமிழில் குறிப்பாக இலங்கையில் சிறுவர்கதைகள் போதுமானதாக இல்லை. வெளிவரும் சிறுவர் கதை நூல்கள் பெரும்பாலும் பாரம்பரியமாக நிலவிவரும் கதைகளாகவே இருக்கின்றன.

நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப சிறுவர்களைத் தயார்ப்படுத்தக்கூடிய புதிய சிந்தனைகளுடன் எழுதப்பட்ட சிறுவர் கதைநூல்கள் மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. டொக்ரர்.எஸ்.பஞ்சகல்யாணியின் சிறுவர்கதைகள் பெருமளவிற்கு நவீன உலகின் குறிப்பிட்ட சில தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

நூலாசிரியர் வடமராட்சியில் அமைந்த புலோலி தெற்குபகுதியில் கிராமியத்தில் வாழ்ந்து வருபவராவார் ஆங்கிலமருத்துவர். நுண்ணறிவுடன் கூடிய கற்பகைத் திறனும் எழுத்தாற்றலும் கொண்டவர். தீவிர வாசகர் சுற்றுச் சூழலியல், தொல்லியல் வரலாறு, விஞ்ஞானம், மரபுரிமை... எனப் பல துறைகளில் மிகுந்த நாட்டமுள்ளவர்.

கதைமரம் சிறுவர் கதைத்தொகுதி இவரின் மூன்றாவது நூலாகும். 2020 இல் "அழகியல் உலகம்" என்ற சிறுவர் பாடல் தொகுதியுடன் இவரது எழுத்துலக நூல்வெளியீட்டுப்பயணம் ஆரம்பமானது. 2021 இல் வெளியான "சிந்தனை செய்" என்ற சிறுவர்கதைத் தொகுதி அந்த ஆண்டு சிறந்த நூலுக்கான வடக்கு மாகாண சபையின் சிறுவர் இலக்கிய விருது பெற்றுக் கொண்டது. 2022 டிசம்பரில் கதைமரம் என்ற சிறுவர் கதைத்தொகுதி வெளிவந்துள்ளது.

தீவிரவாசகராகவும், மருத்துவராகவும் மட்டுமன்றி இரண்டு பிள்ளைகளின் தாயாகவும் இருப்பதினால் சிறுவர் நூல்களை எழுதி வெளியிடுவதில் நாட்டம் ஏற்பட்டிருக்கலாம். இத்தொகுப்பில் பதினைந்து கதைகள் காணப்படுகின்றன. இதில் பெரும்பாலான கதைகள் எனக்குப் பிடித்தவையாகவுள்ளன.

சிறுவர்களின் எந்த வயதுப் பிரிவினருக்கு இக்கதைகள் அதிகம் பொருத்தமானதென நூலாசிரியர் குறிப்பிடாவிட்டாலும் 8 வயது தொடக்கம் 12 வயது வரையுள்ளவருக்கு அதிகம் பொருத்தமானதாக உள்ளன. அதுமட்டுமன்றி 13 -18 வயதினரான வளரின் பருவத்தினருக்கும் (விடலைப்பருவம்) ஏற்றகதைகளாகும். பெற்றோர்கள் ஆசிரியர்கள் இக்கதைகளை வாசித்துக் சிறுவர்களுக்குக் கதை சொல்வதற்கும் மிகவும் பொருத்தமான கதைகளாக அமைந்திருக் கின்றன.

கதைமரம் நூலில் உள்ள 15 சிறுவர் கதைகளை இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்கலாம்.

1. விலங்கு, பறவை, தாவரம் என்பவற்றைப் பிரதான பாத்திரங்களாகக் கொண்ட கதைகள்.
2. மனிதர்களைப் பிரதான பாத்திரமாகக் கொண்ட கதைகள்.

இங்கு முதலாவது வகையான கதைகளே அதிகமாகக் காணப்படுகின்றன. அதாவது பத்துக் கதைகள் இவ்வகையானவை. சிறுவர்கள் விநோதங்களில் அதிக நாட்டம் கொண்டவர்கள். விலங்கு பறவை, தாவரங்கள் என்பன சிறுவர்களின் விநோதங்களின் நாட்டத்துடன் ஒன்றித்துக் கதைகளை ஆர்வத்துடன் வாசிப்பதற்குப் பெரிதும் உதவுகின்றன.

மேலும் விலங்கு, பறவை, தாவரம் என்பன சுற்றுச்சூழலின் பிரதான கூறுகளாகவும் காணப்படுவனவாகும். சுற்றுச் சூழல் ஆர்வலரான டொக்ரர் எஸ்.பஞ்சகல்யாணி சுற்றுச்சூழலை பிரதானப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள் எழுதியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

குறிப்பாகக் காபனீரொட்சைட்டு வாயுவின் அளவு வளிமண்டலத்தில் அதிகரிப்பதால் "சூழல் வெப்பநிலை" அதிகரித்து கால நிலை மாற்றம் முதலான பாதகமான பல விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது. பூமியினதும், உயிரினங்களினதும் எதிர்கால வாழ்வு மிகுந்த அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கிறது.

முதலாவது கதையான "தவளையின் குதூகலம்" என்ற கதை சுற்றுச்சூழல் இரசிக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்டிருக்கிறது. சுற்றுச் சூழலின் மீதான ஆர்வத்துக்கும், செயற்பாடுகளுக்கும் அடிநாதாக சுற்றுச்சூழல் மீதான இரசனை மிக அவசியம் என்பதை எத்துக்காட்டியிருக்கின்றார். இது அருமை யானதொரு கதையாகும். வண்ணத்துப் பூச்சியொன்று தனது அம்மா வைத் தேடும் கதையில் வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கை வட்ட நிலைகள், அவை பற்றிய ஒரு சில குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

சிறுவர் கதைகளூடாகவும் அவர்களின் ஆளுமை வளருகின்றது. நூலாசிரியர் சிறுவர்களுக்கு எவை வேண்டுமென்பதை அறிந்து தனது ஆற்றல் மிகு எழுத்துக்களை கதைகளாகச் சிருஷ்டித்திருக்கிறார். அதேவேளை சிறுவர் கதை நூலில் இருக்க வேண்டிய அம்சங்களையும் நன்கறிந்து நூலை ஆக்கியுள்ளார்.

அட்டைப்படம் டொக்ரர் எஸ்.பஞ்சகல்யாணி யின் மகள் "புராதனியின் ஓவியத்தாலானது. சிறுவர் நூலுக்கு சிறுமியின் ஓவியம் சிறப்பைக் கொடுக்கிறது. "கதைமரம்" என்ற நூலின் தலைப்புக்கு ஏற்றதாக முன், பின் அட்டைப்படம் பச்சை நிறம் தூக்கலாகவும், சிறுவர் களைக் கவரக்கூடியதாகவும் அமைந்துள்ளது. அட்டைப்படத்திலிருந்து நூலின் ஒவ்வொருபக்கமும் மிகவும் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஜீவநதி பிரசுரமான இந்த நூலை திரு.க.பரணீதரன் சிறப்பாக அச்சாக்கம் செய்துள்ளார்.

இந்த நூல் பெரிய எழுத்துக்களால் பதிப்பிக்கப் பட்டுள்ளமை மிகவும் வரவேற்கத்தக்கது. சிறுவர்களுக் குப் பயனுடையது. பெரிய எழுத்துக்கள் கண்பார்வைக்கு இலகுவானதாக இருக்கும். தெளிவாகவும், இலகுவாக வும் சிறுவர்கள் உள்வாங்கி அவர்களின் பயனுள்ள வாசிப்புக்கு பெரிதும் உதவும்.

ஆசிரியரின் மொழிநடை எளிமையானதாகவும், ஆர்வமூட்டக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது. கதை களை ஒரே பாணியில் எழுதாமல் இயன்றவரை வேறு படுத்தி எழுதியிருப்பது நூலாசிரியரின் சிருஷ்டித் திறனுக்குச் சான்றாக இருக்கின்றது. சிறுவர்களுக்கு ஏற்றது எனத் தான் நம்பும் புதிய சொற்களை அளவோடு அறிமுகப்படுத்தியிருக்கிறார். இதனால் சிறுவர்களின் மொழிவளம் மேம்படும்.

நூலில் அடங்கியுள்ள கதைகளின் ஆரம்பம் இரண்டு வகைகளாக அமைந்திருக்கிறது.

1.குறிப்பிட்ட சூழல் அறிமுகப்படுத்தப்பட்டு அங்குள்ள சிறுவன் அல்லது சிறுவர்களுக்குப் பெரியவர் ஒருவரால் கதை கூறப்படுதல்.

2.நேரடியாகவே கதைப்பகுதிக்குள் நுழைதல்.

கதை முடிவுகளும் கதைப்போக்குடன் மிகவும் பொருந்தக் கூடியதாக அமைவதுடன், தேவைக்கு அதிகமாக நீண்டு போதனை செய்யாமல் ஏற்றுக் கொள்ளக் கூடிய முடிவை அடைகின்றன. சில கதைகள் பொருத்தமான பழமொழிகளுடன் நிறைவு பெறுகின்றன.

சரி மீண்டும் விட்ட இடத்திலிருந்து தொடரு வோமானால் மேலே உள்ள பகுதி விலங்கு, பறவை, தாவரம் என்பவற்றை முதன்மையாகக் கொண்ட கதை களைப் பற்றி பெருமளவான கருத்துகள் அமைந் துள்ளன. மனிதர்கள் மட்டும் பிரதான பாத்திரமாக உள்ள கதைகளும் மேலே கூறிய சிறப்புகளுடன் எழுதப் பட்டுள்ளன. இரண்டு வகையான கதைகளிலும் சிறுவர் கள் பாத்திரங்களாக இடம் பெறுதல் முக்கியமானதாகும். இதனால் வாசிக்கும் சிறுவர்கள் கதைகளை விரும்பிப் படிக்க ஏதுவாக இருக்கும். தாமும் ஒரு பாத்திரமாக மாறி மாறி கதையைப்படிப்பர்.மாற்றுத்திறனாளியான அல்லது உடற்குறைபாடுள்ள மாணவர்களைக் கேலி செய்யாமல் மனித நேயத்துடன் அணுக வேண்டுமென்பதை சிறுவர் களுக்கு கதையோடு கதையாக நூலாசிரியர் எடுத்துக் கூறியுள்ளார். இந்தக் கதையும் எனக்கு மிகவும் பிடித்த கதையாகும். வடமராட்சிப் பிரதேசத்தின் மரபுரிமையான பட்டம் ஏற்றுதல் பற்றிய பல தகவல்களையும் கதை யூடாக வெளிப்படுத்தியிருக்கிறார். அத்துடன் வயதான பெற்றோர்களையும், முதியவர்களையும் அன்புடன் ஆதரிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக் கிறார். ஒரு சமூகத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு சிறுவர் கதைகளும் முக்கிய பங்காற்றுகின்றன. வாசிப்பு சிறந்த பொழுதுபோக்காகும். உற்சாகத்தை தரும். மற்றச் சிறுவர்களுக்கு கதை கூறி மகிழுவர். வாசிப்பாளர் கள் வகுப்பிலும், சமூகத்திலும் உயர்ந்தவராக நோக்கப் படுவார். வாசிப்பாளரைச் சுற்றி ஆறுதலுக்காக ஒரு கூட்டம் சேரும்.

சிறுவர்களின் வாசிப்புப்பழக்கம் மேம்படும் போது மொழியாற்றல் வளரும். எழுத்தாற்றலும் பேச் சாற்றலும் வளரும். எழுத்தாளர்களாகவும், ஆய்வாளர் களாகவும் உயர்வடைவர். தலைமைத்துவப் பண்பு மேம்படும். எழுதுவது மன அழுத்தத்தைக் குறைக்கும் என மருத்துவரான நூலாசிரியரின் கூற்றும் கவனிக்கத் தக்கது. வாசிப்பதும், எழுதுவதும் உயர் இரத்த அழுத்தத்தைக் குறைப்பதாகவும், மன அமைதியை ஏற்படுத்துவதாகவும் நடைமுறையில் காண முடிகிறது.

சிறுவர்களை வாசிக்கவும், எழுதவும் தூண்டும் முக்கிய ஆசான்கள் பெற்றோர்கள் தான் என நூலாசிரி யர் குறிப்பிடுகிறார். வீடுகளிலிருந்து மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும்.


மரபுரிமைச் சொத்துக்களில் மிகவும் ஆர்வமும், சேகரிப்பும் கொண்ட நூலாசிரியர் இது சம்பந்தமாக மேலும் சில கதைகளை எழுதியிருக்கலாம் என்ற ஆதங்கம் ஏற்படுகிறது. மேலும் எமது வாழ்வில் நெருக்க மாகப் பின்னிப்பிணைந்துள்ள தொழினுட்ப சாதனங் களின் அதிகரித்த பாவனையும், பாதகங்களும் பற்றிய கதையையும் எதிர்ப்பார்க்காமல் இருக்க முடியவில்லை.

நூலாசிரியர் எதிர்வரும் காலங்களில் தனது நூல்களில் மேலும் பல்வேறு விடயங்களைக் கருப் பொருளாக்குவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அத்துடன் தமிழில் விஞ்ஞான (அறிவியல்) புனைகதை களின் போதாமையையும் நூலாசிரியர் நிரப்புவார் என்ற நம்பிக்கையை இந்நூல் ஏற்படுத்தி நிற்கிறது. மகிழ்ச்சி நல்வாழ்த்துகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ அஷ்வினி வையந்தி

# மனுஷி சிறுகதைநூல் பற்றிய பார்வை




"தோழர் என்பது எவ்வளவு அற்புதமான சொல். இந்தச் சொல்லுக்கு சாதி, மத, பால், பேதம் எதுவுமே இல்லை. வயதில் மூத்தவரோடு கூடச் சமமாக உரையாட விவாதிக்க முடிகின்றது. உண்மையான சகோதரத்துவத்தை, நட்பை, தோழமையைத் தருகின்ற இந்தச் சொல் உலக மொழிகளில் எல்லாம் உள்ள ஒரு உன்னதமான சொல் எனலாம்."

இவ்வாறான சிறப்பான வாக்கிய அமைப்புக்களையும், எளிமையான மொழிநடையையும் கையாண்டு எழுதப்பட்ட நூல்தான் சண் தவராஜாவின் மனுஷி என்னும் சிறுகதை நூல். இந்நூலில் மொத்தமாக ஆறு சிறுகதைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு சிறுகதைகளும் வெவ்வேறுபட்ட கருப்பொருளை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளன. குறிப்பாக இக்கதைகள் யாவும் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் எழுதப்பட்ட கதைகளாகக் காணப்படுகின்றன. அத்துடன் இச்சிறுகதைகள் தற்காலத்தில் எழுதப்பட்ட சிறுகதைகளாக இருந்தபோதிலும் யுத்த காலத்தில் இடம்பெற்ற பிரச்சினைகளை பேசுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்நூலில் இடம்பெறுகின்ற முதலாவது சிறுகதை புலம்பெயர் நாட்டினை கதைக்களமாகக் கொண்டு எழுதப்பட ஏனைய சிறுகதைகள் யாவும் ஈழத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. குறிப்பாக ஈழத்தில் போர் உச்சநிலையில் இருந்தபோது மக்கள் எதிர்நோக்கிய இன்னோரன்ன பிரச்சினைகளைப் பேசுபொருளாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. அதாவது ஈழத்தில் போர் நடந்துகொண்டிருக்கும்போது, போர் நடைபெற்று முடிந்த போது ஆகிய வேளைகளில் பெண்கள், போரில் ஈடுபட்ட போர் வீரர்கள், போர்வீரர்களின் உறவினர்கள் எதிர்நோக்கிய பல்வேறுபட்ட பிரச்சினைகளைப் பேசுவதாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்நூலில் வருகின்ற மனுஷி என்னும் முதலாவது சிறுகதை ஒருகாலத்தில் கல்வியில் கொடிகட்டி பறந்த பெண் ஒருத்தி வெளிநாட்டு மாப்பிள்ளையை திருமணம் முடித்து விட்டு குறித்த மாப்பிள்ளையாலும், அவர்கள் வாழும் சமூகத்தினாலும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பேசுவதாக அமைந்துள்ளது. அதாவது இக்கதை பெண்ணியநோக்கில் எழுதப்பட்ட சிறந்த சிறுகதையாக அமைகின்றதைக் கண்டுகொள்ள முடிகின்றது. குறித்த பெண்ணின் கணவன் ஏற்கனவே காதலித்து கைவிட்ட பெண்ணுக்கு முன் தனது ஆண்மையை நிரூபிக்க வேண்டும் என்பதற்காக அவளை திருமணம் செய்துகொண்டு அவளது நடவடிக்கைகளில் சந்தேகத்தீயை அள்ளி வீசுவதனால் அப்பெண் பல்வேறு வகைகளில் அடக்குமுறைகளுக்கு உள்ளாகின்றாள். இறுதியில் தனக்குள்ளே தன்னம்பிக்கையை வரவழைத்துக்கொண்டு சமூகத்திற்கு பயப்பிடாமல் கணவனை கைவிட்டு விடுகின்றாள். இக்கதை ஒரு சிலரின் பார்வையில் பெண்களின் அடக்குமுறைகளுக்கு எதிரான குரலாக பார்க்கப்பட இன்னொருசாரரால் அதாவது கட்டுக்கோப்புக்குள் இருக்கும் சமூகத்தினரால் தவறான முறையில் நோக்கப்படும் என்பது வாசகர்கள் அறிந்த உண்மையாகும். எது எவ்வாறு இருந்தபோதிலும் பெண்களின் விடுதலைக்கான குரலாக இக்கதை படைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாக உள்ளது.

நெஞ்சு பொறுக்குதில்லையே என்ற தலைப்பில் எழுதப்பட்ட சிறுகதையானது யுத்தகாலத்தில் போர் வீரனாக இருந்த இளைஞன் யுத்தம் முடிந்து சமாதான உடன்படிக்கை கைச்சாத்திட்டபின்னர் அந்நியர்களின் துன்புறுத்தலினால் பைத்தியமான துயரத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இக்கதை இன்னொரு பாத்திரம் கதைகூறுவதாக அமைக்கப்பட்ட கதையாகும். ஒரு காலத்தில் செல்வச் செழிப்புமிக்கவரின் மகனாகத் திகழ்ந்த கதாநாயகன் இயக்கத்தில் சேர்வதும் அங்கே கம்பீரமிக்க இளைஞனாக போரில் தன்னை ஈடுபடுத்தியவனாக சித்திரிக்கப்படுவதும் பின்னர் பைத்தியம் பிடித்தவனாகவும் எடுத்துக்காட்டப்படுகின்றான். குறித்த இளைஞன் பைத்தியமாகிய போதும் தனது நாட்டின் விடுதலைக்காக குரல் கொடுப்பதை சிறுகதையின் இறுதி வரிகளின் ஊடாக கண்டுகொள்ள முடிகின்றது.

காட்டிக்கொடுப்பு என்னும் கதை இயக்கங்கள் தங்களுக்குள்ளே குழுக்களாக பிரிந்து கொண்டு தங்களுக்குள்ளே முரண்படுவதையும், குறித்த இயக்கங்களில் உள்ள நபர்களின் உறவினர்களை குறிப்பாக பெண்களை அசிங்கப்படுத்துவதும், அவர்களின் உடமைகளை உடைத்தெறிவதும் பற்றி எழுதப்பட்ட கதையாக காணப்படுகின்றது. இக்கதையை ஆசிரியர் நேரடியாகக் கூறாமல் தேர்தலுக்காக வோட் கேட்டுச் செல்லும் நபரினை முன்வைத்து எழுதியுள்ளமை அவரது படைப்பாற்றலைச் சுட்டி நிற்கின்றது.

நோய் என்னும் சிறுகதை யுத்த காலத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென வருத்தம் ஏற்பட்டால் பல தடைகளைத் தாண்டி மருத்துவசதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையினை எடுத்துரைக்கின்றது. அத்தோடு மக்களுக்கு விதிக்கப்பட்ட சில தடைகள் பற்றியும் பேசுகின்றது. உதாரணமாக யுத்தகாலத்தில் இரவில் அம்புலன்ஸ் வண்டிகள் அனுப்பி வைக்க தடை விதித்திருப்பதனை எடுத்துக்காட்டலாம். இரை என்னும் சிறுகதை தலைப்புக்கு ஏற்றவகையில் எழுதப்பட்ட சிறந்த சிறுகதையாக காணப்படுகின்றது. அதாவது இராணுவ வீரர்களினால் அடைக்கப்பட்ட கணவனைத் தேடிச் செல்லும் பெண் அங்கே அதிகாரியின் காமப் பசிக்கு இரையாக வேண்டியிருந்ததைப் பற்றி கூறுகின்றது. கதையின் தொடக்கம் குறித்த பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய ரவி என்பவனின் மரணத்தில் தொடங்கி வாசகர்களிடயே மகிழ்ச்சிகர மான உணர்வைத் தோற்றுவித்தாலும் கதையின் முடிவில் ரவி என்னும் அதிகாரியின் இடத்திற்கு கமல் என்ற இளைஞன் வந்துவிட்டதாகவும் குறித்த பெண் மீண்டும் ஒரு அரக்கனின் பிடியில் சிக்கி சீரழிய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவதாகவும் எழுதப் பட்டுள்ள விதம் வாசகர்களிடையே வித்தியாசமான உணர்வினை ஏற்படுத்தும் என்பது எனது கருத்தாகும்.

வண்டியும் ஒரு நாள் என்ற சிறுகதையானது ஒருகாலத்தில் ஓரளவு வசதியான ஒருவர் சாதிய ரீதியாக ஒதுக்கப்பட்ட மோகன் என்னும் கதாபாத்திரத்திடம் உதவிகேட்டுச் செல்லுவதையும், குறித்த பதவியில் உள்ள மோகன் தான் ஒடுக்கப்பட்ட எதையும் மனதில் வைத்திருக்காது அவர்கள் கேட்ட உதவியைச் செய்வதையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. இக்கதை யினூடாக ஆசிரியர் சாதி வேறுபட்டால் ஏற்படும் விளைவுகளை எடுத்துக்காட்டுகின்றார்.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது இக்கதை கள் யாவும் வெவ்வேறுபட்ட பிரச்சினைகளை வாசகர் கள் விளங்கும் வகையிலே எழுதியுள்ளதைக் கண்டு கொள்ள முடிகின்றது. குறிப்பாக மக்கள் யுத்த காலத்தில் எதிர்நோக்கிய பலர் அறிந்துகொள்ளாத பிரச்சினைகள் பற்றி எழுதியுள்ளதைக் கண்டுகொள்ள முடிகின்றது. அத்தோடு ஆங்கில சொற்கள், சிங்கள சொற்கள் போன்ற வெவ்வேறுபட்ட மொழிகளைக் கையாண்டு தனது சிறுகதைகளை எழுதியுள்ளார். எண்பது பக்கங்களில் எழுதப்பட்ட இச்சிறுகதை நூல் வாசகர்களின் வாசிப்புக்கு ஏற்ற நூலாக யுத்தகாலத்தின் பிரதிபலிப்பாக எழுதப்பட்டுள்ள சிறந்த நூல் என்றே கூற வேண்டும். •

---

# ஞானப் பூங்கோதை

அவளைப் போல் நானும்
பெண்ணாய்ப் பிறக்க வேண்டும்.

ஆயுதம் சுமந்து அணிவகுத்துச் செல்லும்
அந்தப் பெண் போராளிகள் வரிசையில்
கடைசியாளாய் அவள்

இரட்டைப் பின்னல்ச் சடையை
மடித்துக் கட்டிய சுதந்திரப் பறவையவள்.

தன் தேசத்தின் விடுதலைக் கனவை
சீருடையாக அணிந்து கொண்டிருக்கிறாள்.

அகிம்சையின் கைத்தடியும்
புத்தனின் பிச்சைப் பாத்திரமும்
அவள் மீது வன்முறை பிரயோகித்த போதிலும்
தாய் மண்ணின் சுவாசத்தில் உணர்வு கலந்தவள்.

போராடிக் களைத்தவலல்ல அவள்
களமாடிக் கறுத்தவள்
அவள் பாதம் பதித்து நடந்த மண்ணில்
பெண்கள் தனித்துப் பயணித்தனர்
நள்ளிரவு வேளைகளிலும்.

ஆதலால் அவள் கண்களில் கர்வம்
அதிகம் இருக்கிறது.

ஒரு இடப்பெயர்வின் அவல நாளில்
அவளுடன் பேசக் கிடைத்த சந்தர்ப்பத்தில்....

நீங்கள்
காந்தரூபனோ என்றேன்



ஆமாம் என்றவள்
நீங்கள் ஞானப் பூங்கோதைதானே என்றாள்!?

நான் மௌனித்து நிலம் பார்க்கிறேன்
அன்று அது எங்களுடையதாக இருந்தது
இன்று வெறுமையாகிக் கிடக்கிறது தாய்மடி.

என் பிரிமென்றகடு
ஆழமாய்க் கீழிறங்கி மேலெழுகையில்
வருகின்ற மூச்சுக் காற்றும் சொல்கிறது
நீ அவளாய்ப் பிறக்க வேண்டும்.

– கனகசபாபதி செல்வநேசன்
அல்வாய்.

(கண்டராதித்தனின் ஞானப்பூங்கோதையை தழுவியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■பொன்.புத்திசிகாமணி,யேர்மனி

# எழுத்தாளர் திரு ஜீவகுமாரன் எழுத்துக்களும் நானும்...



இலங்கையில் யாழ்ப்பாணம்,சங்கானையைப் பிறப்பிடமாகக்கொண்டு, புலம்பெயர்ந்து டென்மார்க்கில் நீண்ட காலங்கள் வாழ்ந்து வருபவர் எழுத்தாளர் ஜீவகுமாரன். அவர் எழுதத்தொடங்கிய காலம் மிக நீண்டதல்ல, குறுகிய காலம் தான்.இந்த இடைவெளியில் அவர் சாதித்ததுமிக அதிகம் என்றே சொல்லலாம். அவரது ஆக்கங்களில் பெரும்பாலானவற்றை நான் வாசித்துச் சுவைத்திருக்கிறேன். மனம் திறந்து பாராட்டியும் இருக்கிறேன்.அவரது "முகங்கள்" நூல்வெளியீட்டு விழா யேர்மனியில் நடைபெற்றபோது முதன்முதலாக அவரைச் சந்தித்திருக்கிறேன். அமைதியும், சாந்தமும், பண்பும் நிறைந்தவர். நான் அவரை என்றும் ஒரு சகோதரனாகவே பார்க்கிறேன். தமிழ் எழுத்துத் துறையில் தன்னை அடையாளப்படுத்திய காலத்தில் இருந்து இன்றுவரை தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார். கடைசியாக வந்த "கடைக்குட்டியன்" நூலுடன் பத்துக்கு மேற்பட்ட, புத்தகங்கள் இவரால் வெளிவந்திருக்கின்றன. மொழிபெயர்ப்புகளுடன் சேர்த்து 16 புத்தகங்கள் என்று அறிகிறேன். சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் என்று இவரது ஆக்கங்கள் விரிவடையும். கவிதைகள் எழுதக்கூடிய ஆற்றலும் அவரிடம் உண்டு என்பதையும் நான் அறிவேன். அதுமாத்திரமின்றி தமிழ் ஆங்கில டெனிஸ் அகராதியொன்றை எழுதி பலருக்கு உதவியவர். இவரது எழுத்துகள் எல்லாம் யதார்த்தத்தைப் பிரதிபலிப்பவை. அவர் சேர்த்தவைகள் எல்லாம், நிலத்திலும்,புலத்திலுமாக எங்கள் முன் புத்தகங்களாக விரிந்து கிடக்கின்றன. எத்தனையோ ஆக்கங்கள் மொழிபெயர்ப்புக்குட்படுத்தப்பட்டிருக்கின்றன. சிங்களம், டெனிஸ், ஹிந்தி, மலையாளம் என்று குறிப்பிட்டுச் சொல்லாம். அது மாத்திரமன்றி பல்கலைக்கழக மாணவர்கள் இவரது புத்தகங்களை ஆய்வுக்குட்படுத்தி பட்டங்கள் பெற்றுசிறப்படைந்திருக்கிறார்கள். இவர் தேர்ந்தெடுத்திருக்கும் பாத்திரங்கள் எல்லாம் எம் கண்முன் வாழ்ந்தவர்கள்,வாழ்பவர்கள்.

இவர் கதைசொல்லும் பாங்கு சற்றுவித்தியாசமானது. எம்மை தம்முடன் இழுத்துச் செல்லும் எழுத்து நடை.கற்பனைகளுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்காது. சொல்ல வந்த கதையோடு பாத்திரங்களைக் கொண்டு செல்வதும்,எதிர் பாராத முடிவைத்தருவதும். இவருக்குக் கைவந்த கலை.

மூன்று பெரிய நாவல்களும், இரண்டு குறு நாவல்களும் எழுதியிருக்கிறார். "மக்கள் மக்களால் மக்களுக்காக", "கடவுச்சீட்டு", "குதிரை வாகனம்"என்ற நாவல்களும். "சங்கானைச் சண்டியன்", "கோமதி" என்கிற குறுநாவல்களும் அடங்கும்.

"மக்கள் மக்களால் மக்களுக்காக"நாவல் என்னை மிகவும் கவர்ந்தது. நாவல் சொல்லும் செய்தி, அரசியலைப்பற்றியது. ஆனால் மெல்லிய காதலும் கதை முழுக்கப் பயணிக்கிறது. அதில் வரும் அப்பாவின் பாத்திரம் எம்மை அழ வைக்கிறது. நான் கதைக்கும் போது அவரிடம் நேரடியாகவே சொல்லிப் பாராட்டியிருக்கிறேன்.

இந்த நாவலை நாலைந்து தடவைகளுக்குமேல் நான் வாசித்திருக்கிறேன். அவ்வளவு சுவையிருந்தது. அரசியல், காதல் இவைகளைக் கடந்து பல விடயங்களை இந்த நாவல் சொல்லிச் செல்கிறது.

அதேபோல் "குதிரை வாகனம்"அதேபோல் "கடவுச்சீட்டு" கடவுச்சீட்டு பரிசு பெற்ற நாவல் என்று நினைக்கிறேன். இந்நாவலில் புலம்பெயர்ந்த அகதிகளின் வாழ்க்கையை அவர்கள் படும் இன்னல்கள் பற்றிய பல செய்திகள் சொல்லப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் ஐம்பதினாயிரம் ரூபா பரிசு பெற்றது, இந்நாவல் என்றே நினைக்கிறேன். ஈரோடு புத்தகக்கண்காட்சியிலும் இவரது புத்தகங்கள் காட்சிக்கு வைத்து ஒருநாள் நிகழ்வாக பல அறிஞர்களால் ஆய்வுக்குட் படுத்தப் பட்டு கௌரவிக்கப்பட்டார்.

தமிழ்நாடு அரசின் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் 2018ம் ஆண்டின் இலக்கிய விருதையும், ஒரு லட்சம்,இந்திய ரூபாய்க்கான பணப்பரிசையும், அன்றைய தமிழ் நாடு முதலமைச்சர் மாண்பு மிகு திரு எடப்பாடிபழனிச்சாமி அவர்களினால், அயல்தேசத்து சிறந்த எழுத்தாளராகக் கௌரவிக்கப்பட்டு பாராட்டுகளையும் பரிசையும் பெற்றார்.

இவரது இடைவிடாத முயற்சியே எழுத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

மெருகேற்றிக் கொண்டிருக்கிறது.இவரின் குறுநாவலான "சங்கானைச் சண்டியன்"சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

ஒரு புத்தகம் என்பது சமுதாயத்தை வழி நடத்த உதவுகிறது. மொழியின்வளர்ச்சியையும், கலாசாரம், பண்பாடு, வரலாறு என்பவற்றையும் பதிவு செய்கிறது.

எழுதுகிற காலம் என்பவற்றையும், அந்தக்கால வாழ்க்கை முறையையும் வெளிக்கொண்டு வருகிறது. எழுத்துகள் மூலம் வித விதமான மனிதர்களைச் சந்திக்கலாம்.

அதனை ஜீவகுமாரன் அழகாக எழுதிவருகிறார். இவரை வளர்த்து விட்டதில் சஞ்சிகைகள், பத்திரிகைகளுக்கு முக்கிய பங்குண்டு. நான் அறிந்த வகையில் "ஜீவநதி", "ஞானம்" சஞ்சிகை ஆகியன முக்கிய பங்கு வகிக்கின்றன.

"ஜீவநதி"யின் இருநூறாவது வெளியீடாக மலர்ந்திருக்கும் "கடைக்குட்டியன்" இவருக்கு நல்ல பெயரைப்பெற்றுக் கொடுத்திருக்கிறது. இருபது சிறுகதைகளும், அதற்கான விமர்சனங்களும். குரல் வழி கதை சொல்லிய இறுவட்டையும் அதனுடன் இணைத்துடன், இன்னும் கைத்தொலைபேசியில் கேட்கக்கூடிய நவீனவசதியையும்செய்து பதிவிட்டிருக்கிறார். நான் அறிந்த வரையில் இது ஒரு புதிய முயற்சியென்றே நினைக்கிறேன். இதுவரை இதுபற்றி நானறியவில்லை.

வருகின்ற பங்குனி மாதம் 25ம் திகதி டென்மார்க்கில் இவரது "கடைக்குட்டியன்"நூல் வெளியீடு செய்ய இருக்கிறது. இது ஜீவநதியின் 200வது பதிப்பாக வெளிவந்திருக்கிறது,மற்றுமொரு சிறப்பு.

நாடகங்களை எழுதி அதனை சிறப்பாக இயக்கி,நடித்து பல மேடைகளிலும் பாராட்டுப்பெற்ற சிறப்பும்இவருக்குண்டு.

இவரது மனைவி திருமதி கலாநிதி ஜீவகுமாரன் அவர்களும் சிறந்த எழுத்தாளர். இவர் எழுதிய "இப்படிக்கு அன்புள்ள அம்மா"என்ற நூல் பல மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. அவரது இன்னுமொரு நூல்விரைவில் வெளிவர இருக்கிறது. "உங்கள் பிள்ளை உங்களுடைய தல்ல"இதுவும் ஜீவநதி வெளியீடாக வருமென்று நினைக்கிறேன். இதனையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

எழுத்துலகில் பல நூல்களை எழுதி, இலங்கையிலும், இந்தியாவிலும் பல விருதுகளையும், பாராட்டுகளையும்பெற்று தொடர்ந்தும் எழுதிவரும் திரு ஜீவகுமாரன் தமிழ் இலக்கிய உலகிற்கு மேலும் பல ஆக்கங்களைத்தரவேண்டுமென வேண்டி நிற்போம்.

---

# மகளிர் விடுதிக்காப்பாளர்

**வள்ளியம்மை சுப்பிரமணியம்**

மகளிர் விடுதிக் காப்பாளர் மகாதேவி கூறுகிறேன்...
அகமும், முகமும் மலர அத்தனை பெண்களையும்...
ஏற்றத் தாழ்வின்றி எம்மதமும் சம்மதமாய்...
காற்றைப் போல் சகலருக்கும் சம மாக வீசி...

தமது கல்வி முன்னேற்றத்தால் விடுதியில் தங்கி...
எமது கண்காணிப்பின் ஏற்பாட்டிற் கமைய...
குளிப்பறை, கழிப்பறை, சுத்தங்கள் பேணி...
விழிப்புணர்வுடனே சாப்பாட்டு அறைகளின்...

சுத்தம், சுகாதாரம், தூய்மை , வழிகளில்...
அத்தனை மாணவிகளையும், அன்புடன் அரவணைத்து......
ஒருவரோடொருவர் ஒற்றுமையுடனும், புரிந்துணர்வுடனும்...
அருவருப்பின்றி... அந்த மூன்று நாட்களிலும்...

தாயானவள் மகளுக்கு உதவுதல் போலவே...
ஆதரவுடனும்... அறிவுரை கூறி அரவணைத்து...
காய்தல், உவத்தலின்றி... கருணை உணர்வுடனே...
பாய்ந்தோடும் நீரைப்போல் பாசத்துடன் அணுகி...

பள்ளி விடுமுறையில் வீட்டிற்குச் செல்ல...
வெள்ளைச் சீருடைகள், புழங்கும் பாத்திரங்கள்...
அத்தனையும் பத்திரமாய் அவரவர்க்கே உரிய...
சுத்தமான பெட்டிகளில் "சூட்கேசுள்" வைத்து...

வீட்டிற்குப் புறப்படும் வேளையில் சரிபார்த்து....
நாட்டின் எதிர்கால நம்பிக்கை விளக்குகளை...



பூட்டிய விடுதிக்குள் வாழ்ந்த விளக்குகளை...
"கேட்டின்" அருகே வாகனத்தில் ஏற்றி...

ஒருமாத லீவின் பின்னர் மீண்டும் சந்திப்போம் என்று ......
அருமை மாணவிகளை அவரவர் வீடுகட்கு...
அனுப்பி வைத்த பின்பும்...தவறவிட்ட பொருட்களை....
கவனமாக எடுத்து ...திரும்பிவரும் வேளை ஒப்படைப்பேன்...

கல்வித் தேவை ஒன்றினைக் கண்ணாக கற்கும்...
செல்ல மாணவிகளுக்கு தாயாக இருந்து பாதுகாத்து...
நல்ல ஒளியான எதிர்கால வாழ்வை அவர்கட்கு...
நல்குதலே நானவர்க்கு செய்கின்ற கடமையிதே...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை நாட்டின் வட பகுதியில் பிரமாண்ட காட்சியறையுடன் அச்சுப்பதித்தல்
சார்ந்த அனைத்து விதமான வேலைகளுக்குமான ஓர் அச்சுக்கூடம்

# மதி கலர்ஸ் பிறைவேட் லிமிட்டெட்

BEST QUALITY | BEST PLACE | BEST PRICE & YOUR BEST CHOICE

# MATHI COLOURS (PVT) LTD.

## PRINTERS & WEDDING CARDS

## OFFSET - DIGITAL - SCREEN PRINTING

உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான பிறின்டிங்
தேவைகளையும் உடனுக்குடன் தரமாகவும், நேர்த்தியாகவும்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்

ஒரு நாள் அழைப்பு..!
வாழ்நாள் இணைப்பு.!!




- ஒவ்செட் பிறின்டிங்
- ஸ்கிறீன் பிறின்டிங்
- டிஜிட்டல் பிறின்டிங்
- கலர் பிறின்டிங்
- கிராபிக் டிசைனிங்
- டைப் செற்றிங்
- வைண்டிங்

மற்றும் பல உங்களுக்குத் தேவையான
பிறின்டிங் சேவைகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்...





MATHI
COLOURS

CUSTOMER CARE
077 722 2259



இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org